ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:


# ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ

| முழக்கம்-16 | பாஞ்சஜன்யம் ஜனவரி 2013-164 | ஒலி 1 |
| --- | --- | --- |


## 1. 1959ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இந்து சமய அறநிலையத்துறை சட்டம், அரசியல் சாஸனம் அளித்திருக்கும் உரிமைகளுக்கு எதிரானது-உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கு. (எண். 476/2012.)

**The Supreme Court has issued notice on 14.12.2012. to the States of Tamil Nadu and Andhra Pradesh and the Union Territory of Puducherry on a writ petition filed by Sri Dayananda Saraswati Swamiji, Sri Paramatmananda Saraswati Swamiji and Sri Vishveswaranand Giriraj Maharaj, challenging the Hindu Religious and Endowments Acts of the respective governments. A Bench of Justices K.S. Radhakrishnan and Dipak Misra issued notice after hearing senior counsel**

C.S. Vaidyanathan and senior R. Venkataramani and counsel Bindu Nair and sought the response of the Tamil Nadu and Andhra Pradesh and the Union Territory of Puducherry governments. The petitioners said they were aggrieved over the provisions of HR & CE Acts as they took away the internal autonomy of the religious institutions and denominations.

They said "even the conduct of religious rites and rituals are completely constricted and regulated by the Executive Officers and by the Trustees appointed by the Government, in violation of the rights guaranteed to the people who practise and profess the religion and of the religious denominations under Article 14,15 (1), 19(1) (g) 21,25 and 26 of the Constitution." "The proposed expenditures and budgets for conducting religious rituals have to be considered upfront by the authorities of the Department and the Government and only after meeting with their approvals can money be expended for such rituals. The temples are thus virtually treated as the personal fiefdom of political masters.

There is no rationale or justice for the government to discriminate and arbitrarily fetter and restrict the temples' internal autonomy in management and administration which cannot be dubbed as secular in character, more so when there is no aid or contribution or grant from the Government."

They pointed out that the constitutional mandate of "hands-off" from the religious institutions was totally breached so far as the Hindu Temples and Charitable Institutions were concerned. If the Government can wield its power to appoint or remove the Trustees and compel them to obey all orders of the Government or its servants on pain of prosecution and dismissal, and in dubious ways can remove the Trustees and replace them by its nominees and the denominations or communities have no lot or part in the choice of Trustees or voice in the management of the institution, it is plain that Articles 25 and 26 are rendered nugatory and of no real effect whatever for Hindus of this country."



They sought a declaration that the offending provisions were unconstitutional.

**இந்த வழக்கின் பின்புலமும், நம் கடமையும்:**

வியாபாரம் செய்ய வந்த கிழக்கு இந்திய கம்பெனியர், கிஸ்தி, வரி வசூல் முதலியவற்றில் முதலில் ஈடுபட்டனர். பிறகு நாட்டையே தமதாக்கிக் கொண்டனர். இருப்பினும் அவர்கள் நிர்வாகத்தில் பல நன்மைகள் விளைந்தன. இந்தியாவில் பிரிட்டிஷர் செய்த ஆட்சி மிகப் பெரும்பாலும் ஊழலற்ற ஆட்சியாகவே இருந்து வந்தது.

அறக்கட்டளைகளை நிர்வாகம் செய்கிறோம் என்று கூறிக்கொண்டு கோயில்களுக்குள் புகுந்த இந்து சமய அறக்கட்டளைத்துறை ஆட்சியோ இதற்கு நேர்மாறாக இருக்கின்றது. முதலில் இந்து அறக்கட்டளைச் சட்டத்தில் (இதை இந்து அறநிலையச் சட்டம் என்று கூறுவதே தவறு) கோயில், அறக்கட்டளைகளின் சொத்துக்களை நிர்வாகம் செய்ய மட்டுமே செயல் அலுவலருக்கு அதிகாரம் வழங்கலாம். கோயிலையே நிர்வாகம் செய்ய அவர்களுக்கு சட்டத்திலும் இடம் இல்லை. கோயில் வழக்கங்களிலும் இடம் இல்லை.

இந்துக் கோயில்களை மட்டும் கையகப்படுத்தும் அரசின் செயல் இந்துக்களின் அடிப்படை வழிபாட்டு உரிமைகளுக்கு விரோதமான செயல் ஆகும். பலரும் எண்ணம் கொண்டுள்ளதுபோல் மைனாரிட்டி மதங்களைச் சேர்ந்தவர்களுக்கு என்று தனியாக மத, வழிபாடு, வழிபாட்டு இடங்களின் நிர்வாகம் முதலியனவற்றிற்குத் தனி உரிமைகள் கிடையாது. இந்த உண்மையை 99 சதவிகித மக்கள் அறிய மாட்டார்கள். இந்துக்களுக்கு இருக்கும் அதே மத, வழிபாட்டு

உரிமைகள் தாம் முகம்மதியர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும், ஜைனர் களுக்கும் மற்ற மதத்தினருக்கும் உள்ளன. அப்படி இருக்கை யில் இந்துக்களின் கோயில்களில் மட்டும் அரசு எப்படி உள்ளே நுழைந்து நிர்வாகம் செய்யலாம்.

80 வருடங்களாகத் தமிழ்நாட்டின் எல்லா சிறிய, நடுத்தர, பெரிய கோயில்களை தங்கள் முழு கட்டுப்பாட்டில் அரசாங்கம் எடுத்துக் கொண்டு வருகிறது. இன்றைக்கு சுமார் 40,000 கோயில்களும், அவற்றைச் சேர்ந்த அறக்கட்டளை களும் அரசின் முழு கட்டுப்பாட்டில் உள்ளன. அரசு அந்தக் கோயில்களை ஒழுங்காக நிர்வகித்து வருகின்றதா என்றால் நிச்சயமாக இல்லை. கோயில் நிர்வாகத்தில் பல குளறு படிகள். (இந்தக் குளறுபடிகளின் ஒரு திவலையை இனிவரும் பக்கங்களில் காணலாம்.) கோயில்களுக்கும், அறக்கட்டளை களுக்கும் 4.75 லட்சம் ஏக்கர் நிலங்கள் உள்ளன. இவற்றில் 1.00 லட்சம் ஏக்கர் நிலங்கள் நகரங்கள் மற்றும் மாநகரங்கள் அண்மையில் அமைந்துள்ளன. மேலும் கோயில்களுக்கு 22,600 கட்டடங்களும், 33,500 மனைகளும் உள்ளன. இவற்றின் சந்தை வாடகை மதிப்பில் மூன்றில் ஒரு பங்கு வந்தாலே அந்தத் தொகை ரூபாய் 5,000 கோடிகளைத் தாண்டும். இந்தப் பணத்தில் ஆண்டுதோறும் 1,00,000 மாணவர்களை முதல் வகுப்பில் இருந்து கல்லூரி படிப்பு வரை படிக்க வைக்கலாம்.

1,00,000 இந்துக்களுக்கு ஆண்டுதோறும் அறுவை சிகிச்சை அளிக்கலாம். ஆண்டுதோறும் ஒவ்வொரு மாவட்டத் திலும் 10 இலவச பள்ளிக் கூடங்கள் தொடங்கலாம். மிகச் சிறந்த, உலகத் தரம் வாய்ந்த கல்வி வழங்கலாம். நம் பசு, காளை இனங்களைக் வெட்டுக் களங்களில் இருந்து காக்கலாம். இந்துக்களுக்கு என மாவட்டம்தோறும் மருத்துவ கல்லூரிகளும், பொறியியல் கல்லூரிகளும் உலகத் தரத்தில் நிறுவலாம். நம் கோயில்களில் தூய்மையும், கலை வளமும், பாரம்பர்ய சிறப்புகளும் விளங்குமாறு செய்யலாம். கோயில் ஊழியர்களுக்கு வீடு, மருத்துவ, கல்வி வசதிகள் செய்து தரலாம்.



வேதங்கள், ஆகமங்கள், பசு மடங்கள் ஆகியவை மீண்டும் கோயில்களில் நிலை பெறுமாறு செய்யலாம். மாவட்டம் தோறும் அனாதைச் சிறார்களுக்கு உணவு, உடை, இருப்பிடம், கல்வி, முதலியன நல்ல முறையில் அளித்து அவர்களை எல்லாம் மிகச் சிறந்த கல்வியாளர்களாகவும், விளையாட்டு வீரர்களாகவும், நம் தேசத்தைக் காக்கும் காவல் துறை, ராணுவ வீரர்களாகவும், அதிகாரிகளாகவும் செய்ய லாம். இத்துணை சொத்துக்கள் இருந்தும் ரூபாய். 5,000 கோடிக்குப் பதிலாக ரூபாய். 64 கோடி தான் அறக்கட்டளை துறை வசூலிக்கின்றது. வருடம்தோறும் தமிழ் இந்துக்களுக்கு இந்தத் துறையால் குறைந்தது ரூபாய். 5,000 கோடி வஞ்சிக்கப்படுகின்றது.

இத்துறை கோயில்களை புனருத்தாரணம் செய்கின் றோம் என்று கூறி கோயில்களின் பழம் பெருமைகள் அழியு மாறு செய்தும், கல்வெட்டுக்களை உடைத்தும், அழித்தும், பழமையான மண்டபங்களை பெயர்த்தும் நாசம் செய்கின் றனர். ஆயிரம் வருடங்களுக்கு மேல் பழமையான கோயில் களில் எந்தத் தகுதியுமற்ற, சிற்பக்கலை அறிவுமற்ற ஒப்பந்தக்காரர்களைக் கொண்டு தங்கள் மனம்போனபடி மாற்றி அமைக்கிறார்கள். மக்களுக்கு வசதி செய்து தருகி றோம் என்ற பெயரில் குளிர்சாதன வசதிகளை ஏற்படுத்தி கற்சுவர்களை நாசம் செய்தும் வருகிறார்கள். தங்கள் இஷ்டப்படி மாற்றி அமைக்கிறார்கள். இவையெல்லாம் தமிழர்களுக்கு ஈடு செய்ய முடியா பேரிழப்புகள். ஸ்ரீரங்கம் தன்வந்திரி ஸந்நிதி இடிப்பு, இதற்கோர் உதாரணம்.

எல்லாவற்றிற்கும் மேலாக இந்த ‘அறக்கட்டளை சட்டம்’ என்பதே ஒரு மிகப் பெரிய மோசடியாகும். இந்தச் சட்டத்தில் பல ஷரத்துக்கள் நம் அடிப்படை உரிமைகளுக்கு விரோதமானவை பல பிரிவுகள் உச்சநீதி மன்ற தீர்ப்புகளுக்கு எதிரானவை. இந்த HR & CE சட்டம் முற்றிலுமாக நீக்கப்பட வேண்டிய சட்டம். குறைந்தபட்சம் திரைப்படங்களில் வரு கின்ற விஷப்பல் பிடுங்கப்பட்ட மோடி மஸ்தான் பாம்பு களைப் போன்றாவது ஆக்கப்பட வேண்டும். வேதபாட சாலையின் நிலங்களை பெரியார் சமத்துவபுர(ற)த்திற்கும்,

**மாதம் 30 லட்சம் வாடகை வரவேண்டிய கபாலி கோயில் நிலத்தை மாத வாடகை 3,000 ரூபாய்க்கு 30 வருடங்களுக்கு கொடுக்க வழி வகுக்கும் இச்சட்டமும், இத்துறையும் ஒழிக்கப் பட வேண்டும்.**

**ஆந்திரா, தமிழகம் ஆகிய மாநிலங்களிலும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலும் நடைமுறையிலுள்ள இந்துசமய அறநிலையத்துறைச் சட்டங்களை எதிர்த்து, 14.12.2012 அன்று பூஜ்யஸ்ரீ தயானந்த சுவாமிகள் தலைமையில் மூன்று இந்துதர்மஆசார்யர்கள் ஒரு வழக்கு தொடுத்துள்ளனர். அவ்வழக்கைத் தொடர்ந்து தமிழகத்திலும், புதுச்சேரியிலும் உள்ள இக்கொடுஞ்சட்டங்கள் நீக்கப்பட வேண்டும் என்று சென்னையைச் சேர்ந்த ஆலய வழிபடுவோர் சங்கமும், பாஞ்சஜன்யம் ஆசிரியர் திரு.அ.கிருஷ்ணமாசார்யர் திவ்ய தேச பாரம்பரியப் பாதுகாப்பு பேரவையின் சார்பிலும் ஒரு வழக்கை உச்ச நீதி மன்றத்தில் இன்னும் சில தினங்களில் தொடுக்கவுள்ளனர். இவ்வழக்கில் இந்துக்களின் உரிமைகள் இச்சட்டங்கள் மூலம் எவ்வாறு பறிக்கப்படுகின்றன என்பதை எடுத்துரைப்பதோடு மட்டுமல்லாமல் அறக்கட்டளைத் துறையின் சீர்கெட்ட நிர்வாகத்தை தகுந்த ஆதாரங்களுடன் எடுத்துரைக்கவல்ல சிறந்த சட்ட வல்லுனர்கள் உதவியுடன், உச்சநீதிமன்றத்தில் முக்கிய வழக்கோடு இணைந்து முன் வைக்கப்படவுள்ளது.**

**3 வருடங்களாக ஆராய்ந்து அறிந்த உண்மைகளுடன், ஆயிரத்திற்கு மேற்பட்ட, தகவல் அறியும் உரிமைச் சட்டத் தின் கீழ் பெறப்பட்ட குறிப்புகளின் அடிப்படையில் இந்த வழக்கு நடைபெற உள்ளது. இந்த வழக்கிற்கு உதவ வேண்டி யது ஒவ்வொரு இந்துவின் கடமையாகும். மங்களாசாஸ னத்தைப்பற்றி பேசும் ஸ்ரீவைஷ்ணவர்கள் தற்போது கோயில் நிர்வாகத்தின் சீர்கேடுகளையும், அந்தத் துறை உள்துறை விவகாரங்களில் எவ்வித அதிகாரமுமின்றி உட்புகுந்து சீர் கேட்டை விளைவித்திடும் செயல்களையும் அறிவர். ஆனால் அதுபற்றி எந்தக் கவலையையும் இந்து சமுதாயம் கொள்வ தில்லை. ஸ்ரீமந் நாராயணன் ஒவ்வொரு காலகட்டத்திலும், அதாவது அதர்மம் தலைதூக்கும்போது தர்மத்தை நிலை**



**நாட்டுவதற்காக ஏதோ ஒரு உருவில் அவதரித்திடுவானென்று கீதையில் குறிப்பிடப் பட்டுள்ளது.**

**பகவத்கீதை நான்காம் அத்தியாயம்.**

***யத$_2$ா யத$_3$ா ஹி த$_4$ர்மஸ்ய க்$_3$லாநிர் ப$_4$வதி ப$_4$ாரத***
***அப்யுத்த$_2$ானம் அத$_4$ர்மஸ்யதத$_3$ா ஆத்மானம் ஸ்ருஜாம்யஹம் (7)***

**(ஓ அர்ஜுன, எந்தெந்தக்காலத்தில் தர்மத்துக்கு வாட்டமும் அதர்மத்துக்கு அபிவிருத்தியும் ஏற்படுகிறதோ, அப்பொழுது நான் என்னை ஸ்ருஷ்டித்துக் கொள்கிறேன்.)**

***பரித்ராணாய ஸாதூ$_4$நாம் விநாசாய ச து$_3$ஷ்க்ருதாம்***
***த$_4$ர்ம ஸம்ஸ்த$_2$ாபனார்த்த$_2$ாய ஸம்ப$_4$வாமி யுகே$_3$ யுகே$_3$ (8)***

**(ஸாதுக்களைக் காப்பாற்றுவதற்காகவும், பாபிகளை நாசம் செய்வதற்காகவும், தர்மங்களை நிலைநிறுத்துவதற் காகவும், யுகங்கள் தோறும் பிறக்கிறேன்.)**

**இந்துசமய அறநிலையத்துறையின் செயல்பாடுகள் ஹிரண்யகசிபு, ஹிரண்யாக்ஷகன் போல்வோருடைய செயல் களுக்கு ஒப்பானதாகும். இவர்களுடைய இந்த அத்து மீறல் களுக்கு ஓர் முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமானால், உச்சநீதி மன்றத்தில் வழக்குத் தொடர்வதைத் தவிர வேறுவழியில்லை. அரசியல்வாதிகள் அனைவரும் கோயில் சொத்தைக் கூறு போட்டு அனுபவித்து வருகிறார்கள். இத்தகைய தருணத்தில் ‘இது எம்பெருமான் ஸங்கல்பம்’ என்று கொள்ளலாம்படி, ஸ்வாமி தயானந்த ஸரஸ்வதி வழக்குத்தொடர முன்வந்துள் ளார். அவருடைய தரப்பு நியாயத்திற்கு வலுசேர்ப்பதற்கு ‘திருக்கோயில் வழிபடுவோர் சங்கமும்’, ‘திவ்யதேசப்பாரம் பரியப்பாதுகாப்புப் பேரவையும்’முன்வந்துள்ளன. எப்போதும் போல் நமக்கேன் வம்பு. நரி இடம்போனால் என்ன? வலம் போனால் என்ன? நாம் எந்தப் பக்கமும் சாயாமல் இருந்தால் போதும். கோயில் நிர்வாகத்தோடு மோதல் போக்கைக் கைக்கொள்ளக் கூடாது, பேசித்தீர்த்துக் கொள்ளலாம், எல்லாம் எம்பெருமான் பார்த்துக் கொள்வான். ஏதோ நான்கு இடத்தில் மோட்சத்திற்குச் செல்வதற்கான உபதேசங்களைச்**

செய்து கொண்டு, நல்லபெயர் சம்பாதித்துக் கொண்டு வாழ்நாளைக் கடத்திடுவோம் என்று எண்ணிக்கெண்டிருக் காமல், அர்ச்சாவதாரத்திற்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது, நம் முடைய பழக்க வழக்கங்களுக்கு பேராபத்து ஏற்பட்டுள்ளது. 'ராமானுஜார்ய திவ்யாஜ்ஞா நாள்தோறும் மீறப்பட்டு வரு கிறது' என்ற எண்ணங்கொண்டோர் தங்களுடைய ஆதர வினை தங்களால் இயன்ற நிதியுதவியை கொடுத்து இந்த மாபெரும் போராட்டத்தில் பங்குகொள்ள வேண்டும். குறைந்தபட்சம் ஒவ்வொரு இந்துக்களும் குறிப்பாக, ஸனா தன தர்மத்தில் நம்பிக்கை கொண்டோரும், அர்ச்சாவ தாரத்தில் ஈடுபாடு கொண்டோர்களும் தங்களால் பெரிய அளவில் உதவி செய்ய முடியாவிட்டாலும், குறைந்தபட்சம் ஒரு ரூபாயேனும் தந்து இந்த இயக்கத்தின் செயல்பாடுகளை ஊக்குவிக்க வேண்டும். இல்லை! இல்லை!! நாங்கள் இந்த விவகாரங்களில் எல்லாம் ஈடுபட மாட்டோம் என்ற எண்ணங் கொண்டோர் பிள்ளைலோகாசார்யர் அருளிச் செய்த ஸ்ரீவசன பூஷண நூற்பா 258ஐ நினைவில் கொள்ள வேண்டும்.

'உகந்தருளின நிலங்களை அநுஸந்தித்தால் ஊணும் உறக்கமுமின்றிக்கே இவருடைய (நம்மாழ்வார், பெரியாழ் வார், பாஷ்யகாரர்) யாத்ரையே நமக்கெல்லார்க்கும் யாத்ரை யாக வேணும் என்ற வாக்யங்களையும், கூரத்தாழ்வான் சோழ மன்னனுடைய கொடுங்கோல் செயலை எதிரிட்டு, தன் கண் களை இழந்தார். பெரியநம்பியோ கொடுமைக்கு ஆளாகி ஆசார்யன் திருவடியை அடைந்தார். தமது முதிர்ந்த வயதிலும் (119) பிள்ளைலோகாசார்யர் அழகிய மணவாளனைக் காப்பாற்றும் முயற்சியில் பரமபதித்தார், இதுபோன்ற பூர்வா சார்யர்களின் தியாகத்தை மேடையில் எடுத்துரைப்பதற்கும், பேசுவதற்கும், கொண்டாடுவதற்கும் நமக்குத் தகுதி உண்டா என்று ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவனும் எண்ணிப்பார்க்க வேண்டும். அன்று எம்பெருமானார் ஒரு க்ருமிகண்ட சோழ னைத்தான் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. பிள்ளைலோகா சார்யர் ஒரு முகம்மதியனின் படையெடுப்பைத்தான் எதிர் கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் இன்று க்ருமிகண்ட சோழனைப் போன்றவர்கள் பலர் இந்துசமய அறநிலையத்



துறையில் உள்ளனர். இராமன் ஆண்டாலும், இராவணன் ஆண்டாலும் தற்போதைய சூழலில் இந்துக்களுக்கு யாரும் நன்மை செய்யப்போவதில்லை. ஆகவே மக்கள் எழுச்சி ஒன்றே நம் திருக்கோயில்களையும், மடங்களையும், அறக்கட் டளைகளும் காப்பாற்றும். இந்துசமய மகான்களின் திருவரசு களையும், சமாதி களையும், பிருந்தாவனங்களையும் அரசு தன்கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கான சட்டத் திருத்தம் தமிழ்நாடு சட்ட சபையில் தாக்கல் செய்யப் பட்டுள்ளதை பலர் அறியார். தற்போதைய அ.தி.மு.க அரசின் பலம் கொண்டு ஒரு வினாடி யில் இந்தச் சட்டம் நிறைவேற்றப்படலாம். (இந்துசமய அறநிலையத்துறை சட்டத்திருத்த எண். 32/2012), அதன் பிறகு பிருந்தா வனங்கள், திருவரசுகள், சமாதிகள் பக்கத்தில் உள்ள காலி மனைகளில் பெரியார் சமத்துவபுரங்களும், வணிகவளாகங் களும், கலையரங்குகளும் ஒரு கால கட்டத்தில் தோன்றக் கூடும். முதுகெலும்பற்ற இந்த இந்து சமுதாயம் அந்த அவலத்தையும் ஜீரணிக்கும்.

உச்சநீதி மன்றத்தில் வழக்காடுவதற்கு நூற்றுக் கணக்கான ஆதாரங்களைத் தேடி சேமித்து வைத்துள்ளோம். இறுதியில் வெற்றி நமதே. ஆயினும் இந்த வழக்கினை முறை யாக நடத்திடுவதற்கும், அந்த வழக்கில் Implead செய்து கொண்டு, மேலும் ஆதாரங்களை முன்வைப்பதற்கும் பெரிய அளவில் நிதி ஆதாரம் தேவைப்படுகிறது. ஒவ்வொரு இந்துவும் ஒரு ரூபாய் கொடுத்தாலே பலகோடி ரூபாய்களைச் சேர்த்து விடலாம். பாமர மக்களும், NRI பெருமக்களும், மடாதிபதிகளும், ஜீயர் ஸ்வாமிகளும் ஆசார்யபுருஷர்களும், சைவ ஆதீனங்களும் அனைவரும் தங்களுக்குள்ளே உள்ள 'யார் பெரியவன்' 'நானே பெரியவன்' என்ற எண்ணங்களை மறந்து, இந்த வழக்கில் வெற்றி பெற உதவி செய்ய வேண்டும். இதில் சைவர்கள் என்றோ, வைணவர்கள் என்றோ, வடகலையார் என்றா, தென்கலையார் என்றோ எந்தபேதமும் இருக்கக் கூடாது. மேலும், மக்களோடு தொடர் புடைய ஆசார்ய ஸ்வாமிகளும், சொற்பொழிவாளர்களும்

மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யாதவர்களை எதிர்காலம் மன்னிக்காது.

சிதம்பரம் கோயில் வழக்கில் வாய்தா வாங்குவதற்கு ரூபாய். 17 லட்சம் செலவு செய்யும் ஓர் வணிக நிறுவனம் HR & CE. மோசடி செய்து தமிழகக் கோயில்களை தங்கள் வசம் எடுத்துக்கொண்ட இவர்களிடமிருந்து உச்ச நீதிமன் றத்தில் போராடி பெற வேண்டிய நிலையில் நிதியுதவி செய்ய விரும்புவோர் கீழ்க்கண்ட குறிப்புகளை கருத்தில் கொண்டு ஆவன செய்ய வேண்டுகிறோம்.

1. Account name in the Bank - 'Temple Worshippers Society'.
2. Name of the Bank - Indian Bank.
3. Name and place of the Branch - Thousand Lights. Chennai - 600 006.
4. Account Number - 6021203312.
5. IFSE Code. This Computer code will dierecrt the remittance to that Branch - IDIB000T020

email:rameshtr@msn.com

***

2. கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள், மனைகள் மற்றும் கட்டடங்களின் குத்தகை கேட்பு, வசூல் மற்றும் நிலுவை பற்றிய புள்ளிவிபரங்கள். (தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் 12.10.2012 தேதியிட்ட தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்(அநி.1.1) துறைதலைமைச்செயலகம், சென்னை -9. கடித எண்.25643/ அநி 1.1/2012-2. வழி தெரிவிக்கப்பட்டக் குறிப்புகள்.

நஞ்சை (1420- 1421 (01-07-2010 முதல் 30.06.2011)

| | கேட்பு (ரூ.கோடியில்) | வசூல் ,, | நிலுவை ,, | நிலுவை சதவிகிதம் |
|---|---|---|---|---|
| மொத்தம் | 69.34 | 5.43 | 63.90 | 92.16% |



புஞ்சை (1420- 1421 (01-07-2010 முதல் 30.06.2011)

| | கேட்பு (ரூ.கோடியில்) | வசூல் ,, | நிலுவை ,, | நிலுவை சதவிகிதம் |
|---|---|---|---|---|
| மொத்தம் | 9.55 | 2.42 | 7.13 | 74.66% |

மேற்படி மொத்த கேட்பில் 50% குத்தகைகூட இதுவரை வசூலிக்காமல் இருப்பது பெரிய பின்னடைவாகும். 50% குத்தகை வசூலை 10.12.2011க்குள் மேற்கொள்ள வேண்டும்.

மனைகள் (1420- 1421 (01-07-2010 முதல் 30.06.2011)

| | கேட்பு (ரூ.கோடியில்) | வசூல் ,, | நிலுவை ,, | நிலுவை சதவிகிதம் |
|---|---|---|---|---|
| மொத்தம் | 85.13 | 7.18 | 77.95 | 91.56% |

கட்டடங்கள் (1420- 1421 (01-07-2010 முதல் 30.06.2011)

| | கேட்பு (ரூ.கோடியில்) | வசூல் ,, | நிலுவை ,, | நிலுவை சதவிகிதம் |
|---|---|---|---|---|
| மொத்தம் | 60.73 | 13.16 | 47.56 | 78.32% |

நஞ்சை நிலத்திற்கான குத்தகை நிலுவை 92.16%
புஞ்சை நிலத்திற்கான குத்தகை நிலுவை 74.66%
மனைகள் பிரிவில் குத்தகை நிலுவை 91.56%
கட்டடங்கள் பிரிவில் 78.32% நிலுவைகளாக உள்ளன.

மேற்படி நிலுவைகள் சார்நிலை அலுவலர்கள் சரி வரசெயல்படாததையே காட்டுகிறது.

நிலுவையிலுள்ள மேற்படி இனங்களில் 50% வசூலை 10.12.2011க்குள் செய்து முடிக்க வேண்டும்.

**வணிக கட்டடங்கள்/மனைகள் மீது வாடகை நிர்ணய விவரம்**

**கட்டடங்கள்**

| வாடகை நிர்ணயம் செய்ய வேண்டியவை | வாடகைநிர்ணயம் செய்யப்பட்டவை | நீதிமன்ற தாவாவுக்கு உட்பட்டவை | வாடகை நிர்ணயம் செய்யப்படாமல் உள்ளவை | நிலுவை சதவீதம் |
|---|---|---|---|---|
| 9853 | 7737 | 211 | 1905 | 19.33% |

**காலி மனைகள்**

| வாடகை நிர்ணயம் செய்ய வேண்டியவை | வாடகைநிர்ணயம் செய்யப்பட்டவை | நீதிமன்ற தாவாவுக்கு உட்பட்டவை | வாடகை நிர்ணயம் செய்யப்படாமல் உள்ளவை | நிலுவை சதவீதம் |
|---|---|---|---|---|
| 6800 | 5214 | 68 | 1518 | 22.32% |

இதுவரை வாடகை நிர்ணயம் செய்யாமல் 1905 வணிக கட்டடங்களும், 1518 காலி மனைகளும் உள்ளன. இவ்வாறு வாடகை நிர்ணயம் செய்யாமல் இருப்பது முறை கேடுகளுக்கு வழிவகுக்கும் என்பதுடன், துறைக்கும் பண இழப்பை ஏற்படுத்தும். இக்குறைப்பாட்டுக்கு காரணமான அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதில் ஆணையர் தனி கவனம் செலுத்தி குத்தகை நிர்ணயம் செய்யப்படாமல் உள்ள மேற்படி கட்டடங்கள் மற்றும் காலி மனைகளுக்கு 10.12.2011க்குள் நியாய வாடகையை நிர்ணயம் செய்ய வேண்டும்.



**வணிக கட்டடங்கள்/மனைகளுக்கான குத்தகை நிலுவை 31.08.2011 வரை.**

**வணிக கட்டடங்கள்**

| பசலி | கேட்பு (ரூ.கோடியில்) | வசூல் ,, | நிலுவை ,, | நிலுவை சதவிகிதம் |
|---|---|---|---|---|
| பசலி1420 வரை (31.08.2011) வரை | 35.10 | 8.66 | 26.44 | 75.31% |

**வணிக மனைகள்**

| பசலி | கேட்பு (ரூ.கோடியில்) | வசூல் ,, | நிலுவை ,, | நிலுவை சதவிகிதம் |
|---|---|---|---|---|
| பசலி1420 வரை (31.08.2011) வரை | 51.33 | 4.11 | 47.21 | 91.98% |

1420 (01.07.2010 முதல் 30.06.2011 வரை) பசலியில் வணிக கட்டடங்களுக்கான குத்தகை 75.31% நிலுவை யாகவும் வணிக மனைகளுக்கான குத்தகை 91.98% நிலுவை யாகவும் உள்ளன. முடிந்துபோன பசலிக்கு இவ்வளவு சதவீதம் நிலுவை உள்ளது. இதற்கு சார்நிலை அலுவலர் களின் மெத்தன போக்கும் மற்றும் பணியில் சுணக்கமுமே காரணம். இதற்கு காரணமான சார்நிலை அலுவலர்கள் மீது ஒரு குறிப்பிட்ட கால அளவிற்குள் நிலுவையை வசூலிப்ப தற்கான பொறுப்பு நிர்ணயிக்கப்பட வேண்டும். இவ்வினங் களில் 50% இலக்கை 10.12.2011க்குள் முடிக்க வேண்டும்.

குத்தகை பாக்கி வசூல் குறித்த நீதிமன்ற வழக்குகள்

| | தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் | முடிவு ,, ,, | நிலுவையில் உள்ள ,, | நிலுவை சதவீதம் |
|---|---|---|---|---|
| எண்ணிக்கை | 845 | 287 | 558 | 66.04% |
| தொகை(ரூ. கோடியில்) | 5.20 | 0.73 | 4.47 | 85.97% |

வழக்குகள் நிவையில் உள்ளதற்கான தகுந்த காரணத்தை ஆய்வு செய்து வழக்குகளை விரைந்து முடிப்ப தற்கு உரிய நடவடிக்கையை ஆணையர் எடுக்க வேண்டும். இவ்வழக்குகளின் மீதான முன்னேற்ற அறிக்கையை 10.12.2011க்குள் அரசுக்கு அனுப்ப வேண்டும்.

சட்டப்பிரிவு 78இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள்

| | தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் | முடிவு ,, ,, | நிலுவையில் உள்ள ,, | நிலுவை சதவீதம் |
|---|---|---|---|---|
| எண்ணிக்கை | 4014 | 437 | 3577 | 89.11% |

வழக்குகள் நிலுவையில் உள்ளதற்கான தகுந்த காரணத்தை ஆய்வு செய்து இவைகளை உடனுக்குடன் முடிவுக்கு கொண்டு வருவதற்கு ஆணையர் நடவடிக்கை எடுக்க வேண்டும். இது குறித்த முன்னேற்ற அறிக்கையினை 10.12.2011க்குள் அனுப்ப வேண்டும்.

நிலங்கள்/மனைகள்/கட்டடங்கள் மீதான ஆக்கிரமிப்பு விவரம்.



| | ஆக்கிரமிக்கப் பட்ட நிலப் பரப்பு (ஏக்கரில்) | நீதிமன்ற நடவடிக்கை யில் உள்ளவை ,, | சட்டப்பிரிவு 78இன்கீழ் இணை ஆணையர் முன்புஉள்ளவை ,, | நடவடிக்கை எடுக்காமல் உள்ள நிலப்பரப்பு ,, | ,, ,, ,, சதவீதம் |
|---|---|---|---|---|---|
| நிலம் | 3230 | 727.31 | 1537.01 | 965.68 | 29.90 |
| மனை | 6940/12 | 116/4 | 3467.11 | 3356.61 | 48.37 |
| கட்டடம் | 14.75 | 4.93 | 9.74 | 0.08 | 0.54 |

இதுவரை நடவடிக்கை எடுக்காமல் உள்ளதற்கான தகுந்த காரணங்களை ஆய்வு செய்து 965.68 ஏக்கர் நிலம் மற்றும் 3356.61 மனைகளை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்பதற்கு உடனடியாக சட்டப்பூர்வமான நடவடிக்கையை எடுக்க வேண்டும். எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையை 10.12.2011க்குள் அனுப்ப வேண்டும்.

குத்தகை பாக்கியை வசூலிப்பதற்கும், ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கும் செயல்திட்டமாக கீழ்காணும் நடைமுறை களை பின்பற்றலாம்.

1. நிலங்கள்/கட்டடங்கள்/மனைகள் மீதான குத்தகையை வசூலிப்பதற்கு வருவாய் துறையினரின் ஒத்துழைப்பை பெறலாம்.

2. உரிய காலத்தில் குத்தகையை செலுத்தாத குத்தகைதாரர் களுக்கு இ.ச.அ.நி. சட்டப்பிரிவு 78இன் கீழ் வெளியேற்று அறிவிப்பு அனுப்ப வேண்டும். இப்பணிக்காக ஒவ்வொரு வாரமும் இரண்டு நாட்களை கூடுதல் ஆணையர் ஒதுக்கி பணி செய்ய வேண்டும்.

3. குத்தகை நிலுவை வைத்துள்ள நபர்களின் பெயர்களையும் ஆக்கிரமிப்பு செய்துள்ள நபர்களின் பெயர்களையும் பட்டிய லிட்டு, அந்தந்த திருக்கோயில் முகப்புப் பகுதியில் விளம்பரம் செய்யலாம். அவர்களின் பெயர்களை சிறுசிறு கைப்பிரதிகளிலும் அச்சிட்டு பொதுமக்களுக்கு விளம்பரப் படுத்தலாம்.

4. குத்தகை பாக்கி வசூலிப்பதில் நீதிமன்ற தாவாவில் உள்ள இனங்களில் 1,2,3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட இனங்களாக பட்டியலிட்டு வழக்கை துரிதமாக நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5. திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் சுப்பிரமணிய புரம் பகுதியில் ஆக்கிரமிப்பாளர்கள் 10 பேர் மீது மேற்கொள்ளப்பட்ட உரிமையியல் வழக்கை முன்மாதிரி யாகக் கொண்டு ஆக்கிரமிப்பாளர்கள் மீது உரிமையியல் வழக்கு தொடரலாம்.

மேற்குறிப்பிடப்படும் செயல்திட்டம் குறித்து தகுந்த நடவடிக்கையை மேற்கொண்டு அது குறித்த அறிக்கையை 10.12.2011க்குள் அனுப்ப வேண்டும்.

(மாண்புமிகு அமைச்சர் (இந்துசமய அறநிலையத் துறை/சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைகள்) அவர்கள் அரசு செயலாளர் மற்றும் ஆணையர் ஆகியோருடன் இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர்களுடன் 11.11.2011 அன்று மாலை 3.00 மணியளவில் தலைமைச் செயலகத்தில் நடத்திய ஆய்வுக்கூட்ட குறிப்புகளே மேலே தரப்பட்டுள்ளன. இதற்கு பிறகு என்ன நடந்தது என்பதைப் பற்றிய தகவல்கள் இல்லை.)

ஸ்ரீமணவாளமாமுனிகளின் திருவரசு ஆக்ரமிப்பாளர் வசம் உள்ளது. அதைப்பற்றிய குறிப்புகள் கீழே தரப்பட் டுள்ளன. மேற்காணப்படும் முடிவுகளின்படி அரங்கநாத ஸ்வாமி தேவஸ்தான செயல் அலுவலர் உரிய நடவடிக்கை கள் எடுத்திருக்க வேண்டும்.

தொடர்ச்சி 81இல் காண்க.

# ஹரிதாஸரின்
# இருசமய விளக்கம்

*இதழ் 163இன் தொடர்ச்சி. விளக்கவுரை:புதுச்சேரி-பெருமாள் ராமாநுஜதாஸர்.*

**1ஆவது விஷ்ணு பூசை வைபவப் பரிச்சேதம் தொடர்ச்சி.**

**24.** ஓங்கிய புகழ்சேரெ துகுலந்
தனிலுத்த வாசாரி யரென்போர்
பாங்குளவா சுதேவனைப் பணிந்து
பரமநின் பூசனைப் படியை
ஆங்கிரமத் தாலுரைத் தருளென்ன
ஆயிழை யார்துகில் கவர்ந்து
பூங்குருந்தே றித்திருவி ளையாடல்
புரிந்திடும் புனிதனும் புகல்வான்.

(ஓங்கிய புகழையுடைய யதுகுலத்தில் வாழ்ந்த உத்தவ ஆசார்யர் என்பார், கல்யாண குணங்களால் நிறைந்துள்ள கண்ணனெம்பெருமானைப் பணிந்து, 'எம்பெருமானே! தேவரீருடைய திருவாராதனக் கிரமத்தை அடியேனுக்கு அருளிச் செய்ய வேண்டும்' என்று வினவினார். அப்போது, ஆயர்குலப் பெண்களின் துகிலைக் கவர்ந்து குருந்த மரம் மீது ஏறி விளையாட நின்ற அமலனாகிய கண்ணபிரான் கூறுவான்.)

**25.** உத்தவ முனிவகேட் டியால்என்
உபாசனா பேதமிங் குரைக்கில்
மெத்தசீர்ப் புனைவைதீகந் தாந்திரிகம்
மிச்சிர மென்றுமூன்று வகையாய்
வைத்தவிம் பத்தில்வே திகைதன்னில்
வன்னியிற் பரிதிமண் டிலத்தில்
சுத்தமாம் செலத்தின்ம னத்திலுயர்
பூசுர ரெனைஎண்ணி யவிடத்தும்;

(உத்தவ முனிவரே! என்னுடைய உபாஸனாபேத முரைக்கிறேன் கேளீர்; வைதிகம், தாந்திரிகம், வைதிகதாந்தி ரிகம் என்று மூன்று வகையாகப் பிரதிஷ்டிக்கப்பட்ட விக்கிரஹத்திலும், பிராமணர்களால் எண்ணப்படுகிற சூரிய மண்டலத்திலும் உயர்ந்த மணத்திலும்;)

*26.* *இயைந்திடும் சிலையில் தருவிலோகத்தில்*
*எவ்வியத் தினிலிலே பனத்தில்*
*நயந்தரும ணலில்மனத் தினில்விளங்கு*
*நன்மணி தனிலெனை நாட்டும்*
*உயர்ந்திடுமெட் டுவகைப்படி வைத்து*
*உகந்தெனை ஆதரத் துடனே*
*பயந்தரும் ஆரா தனைசெயத்*
*தகுமப் படியருச் சனைசெயும் பொழுது;*

(கல்லிலும், மரத்திலும், உலோகத்திலும், சுதையி லும், படத்திலும், மணலிலும், மனதிலும், நன்மணிதனிலும் இங்ஙனம் எட்டுவகைப்படி வைத்து என்னை நாட்டி பக்திச் சிரத்தையுடன் ஆராதிக்க வேண்டும். இப்படிப் பயனளிக்கும் என்னைக் குறித்து ஆராதனை செய்யும்பொழுது.)

*27.* *அருச்சகன் புதுநீரா டிநித்தியானுட்*
*டானமான வைகளை யெல்லாம்*
*திருத்தியே தபுதவத்தி ரோத்தரியச்*
*சீர்ப்பரி வேட்டித னாகிக்*
*கரத்தினில் தரித்தபவித் திரத்தனுமாய்க்*
*கருதிவிம் பத்தினுக் கெதிராய்*
*அருத்தியால் கிழக்காகு தல்வடக்கா*
*லபிமுக மாகவே யிருந்து;*

(என்னை அருச்சிக்கின்ற அர்ச்சகன் புதுநீராடி ஈரவஸ் திரம் தரித்து, நித்தியானுஷ்டாநங்களை முடித்து, கையில் தரித்த பவித்திரத்தையுடையனாய், விக்கிரஹத்துக்கு எதிர் முகமாக நின்று கிழக்கு முகமாகவேனும் வடக்கு முகமாக வேனும் இருந்து;)



*28.* *மஞ்சனக்கும் பம்படிக்க நற்சங்கம்*
*மற்றுமா முபகர ணமெலாம்*
*தஞ்சமாகி யமந்திரப் புனலாலே*
*சாதனம் பண்ணுவித் ததற்பின்*
*செஞ்சொனான் மலர்சந்த னமுதற்பூ*
*சாத்திர வியத்தோடு தேகத்தை*
*விஞ்சுசீர் மந்திரப் புனலாலே*
*விதிமுறை புரோக்கணை செய்து;*

(திருமஞ்சனக் கும்பம், படிக்கம், சங்கம் முதலிய திருவாராதனப் பாத்திரங்களை மந்திர தீர்த்தத்தால் சோதிக்க வேண்டும். அதன்மேல் புஷ்பம் சந்தன முதலிய பூஜைக்குரிய திரவியங்களையும் தன் தேகத்தையும் மந்திர தீர்த்தத்தால் புரோக்ஷிக்க வேண்டும்;)

*29.* *மருவியபண் பால்சுகாச னமாக*
*வளம்பெற இருத்தும்நற் காயத்*
*திரியினாலி தயம்சிரம் சிகர்நியாசம்*
*செய்துழிச் சிறந்த யோகத்தால்*
*கருதிய மெய்யைவிஞ்சு சோடணதா*
*கனப்பிலா வணங்களுஞ் செய்து*
*வரைவுற வந்தணமா திரிகைவெகு*
*மானதிரி கையெலாம் வகுத்து;*

(இவ்வாறு அன்புடன் சுகாசனத்தில் தான்வளம்பெறும் பொருட்டு விக்கிரஹத்தையிருத்தி காயத்திரி மந்திரத்தால் இருதயம் சிரம் முதலானவிடத்தில் நியாசம் செய்து சோஷண தகன முதலானவற்றைச்செய்து, தாந்திரிக முறைப்படி கைவிரல்களை மடக்கி தீர்த்த ஆவாஹனம் முதலானவற்றைச் செய்து;)

*30.* *அங்கியால் வாயுவினால் பரிசுத்த*
*மாகியே அமர்ந்ததே கத்தில்*
*தங்கியவி தயகமல மத்தியத்தில்*
*தனியணு மாத்திர மாகித்*

துங்கமாஞ் சீவகலை யினானந்தச்
சொரூபனாம் எனைத்தியா னித்துப்
பொங்குசீவ கலாபிண்ட மத்தினிலும்
பூசைதன்ம யமதாய் புரிந்து;

(பின்னர் அக்கினியாலும் வாயுவினாலும் பரிசுத்த மாக்கி அர்ச்சகனுடைய தன்தேகத்திலுள்ள இருதய கமலத்தின் மத்திய பாகத்தில் அணுமாத்திரமாகிச் சீவ கலையின் ஆனந்த சொரூபனாகிய என்னைத் தியானித்துச் சீவகலாபிண்ட மத்தியிலும் ஆராதனஞ் செய்தும்;)

*31.* அருச்சனாவிம் பந்தனில்வி திமுறையால்
அன்பினால் ஆவாகனஞ் செய்து
கருத்துற வுபசாரங் களும்புரிந்து
கமலமெல் லிதழ்முத லதினால்
நிரைத்திடுஞ் சங்கஞ்சக் கரங்கதை
வாள்நீள் சரந்தனுவ லமுசலம்
தரித்தமா லிகைநற்க வுத்துவஞ்சீ
வச்சங்களைத் தாமும் அர்ச் சித்து;

(அதன்பின், அர்ச்சாவிக்கிரஹத்தில் விதிப்படி ஆவா ஹனமும் உபசாரமும் செய்து திருத்துழாய் தாமரை புஷ்பம் முதலியவற்றால் சங்கு, சக்கரம், வில், வாள், கதை என்ற பஞ்சாயுதங்களையும், கௌஸ்துபம், ஸ்ரீவத்ஸங்களையும் மனமுவந்து அர்ச்சிக்க;)

*32.* மருவியவ னந்தன்சு னந்தனே
கருடன்வாய்த் தசண்டன்பி ரசண்டன்
உரமிகுப லனேமகா பலன்குமுதன்
உயர்குமு தக்கணன் துர்க்கை
திரமிகுக ணேசன்வி யாசனேவி
வச்சேனனெண் டிசைகள்காப் பாரென்
துரைசெயும் வர்கடம்மை யுமவர்கட்(கு)
உரிவாம் தலத்திலர்ச் சித்து;

(தொடரும்)



# எறும்பியப்பாவின் விலக்ஷண மோக்ஷாதிகாரி நிர்ணயம்

இதழ் *162*இன் தொடர்ச்சி. விளக்கவுரை:புதுச்சேரி-பெருமாள் ராமாநுஜதாஸர்.

**மூலம்: 162இன் தொடர்ச்சி**

தானே புத்தவேஷதாரியாய்ப் போய் அவர்களோடு உள்கலந்து மதிமயங்கப்பண்ணி, வைதிகஶ்ரத்தையை மாற்றி விபரீதாநுஷ்டாநபரராக்கியும் (292) ''ப்ருஹஸ்பதே ஶ்ருதி ஸ்ம்ருதிஷுஸர்வேஷாம் அதிஶயித ஜ்ஞாநாநாம் நிதர்ஶ நத்வேந ஸங்கீர்த்தநாத்'' (     ) என்று, அதிஶயித ஜ்ஞாநிகளுக்கெல்லாம் நிர்தர்ஶநபூதரான ப்ரஹஸ்பதியை, தந்மத ஸ்தபகனாக்கி தந்மூலமாகச் சிலரை விபரீத ப்ரவ்ருத்தராக்கியும், இன்னமும் ''பலசமய மதி கொடுத்தாய்'' (திருவாய் 3-1-4) என்றும், ''சமயங்கட் கெல்லாம் பொருவாகி நின்றான்'' (திருவாய் 9-4-8) என்றும், சொல்லுகிறபடியே, தன் திருவுருவில் மனம் வைக்க மாட்டாதபடி, மற்றும்.

**விளக்கம்**

*முற்காலத்தில் அவுணர்களும் அரக்கர்களும் (291) ''அனலோம்புதலும் வேதத்தை ஓதுதலும் செய்தனர்'' என்கிறபடியே, அவர்களுக்கு வேத வைதிகச் செயல்களில் ஊற்றமுண்டாகி, தேவர்களை விரோதித்துப் பூசல் செய்வதும் நல்லோர்களைத் துன்புறுத்தியதாலே திருமாலாகிய இறைவன், அவர்களுக்கு வேதத்திலுண்டான நம்பிக்கைப் போக்கிக் கெட்ட வழியில் நடக்கச் செய்தாலல்லது அவர்களை அழிக்க முடியாது என்று, ''திண்கழற்காலசுரர்க் குத்தீங்கி ழைக்கும் திருமாலை'' என்றபடி, பெரிய பிராட்டியரான ஸ்ரீமகாலட்சுமியும் தானும் சேர்ந்து ஓரிலக்குப் பார்த்து,*

''கள்ளவேடத்தைக் கொண்டு போய் புரம் புக்கவாறும் கலந்த சுரரையுள்ளம் பேதம் செய்திட்டு உயிருண்ட உபாயங்களும்'' என்கிறவாறு, தானே புத்த வேடத்தை ஏறிட்டுக் கொண்டுபோய் திரிபுரத்திலுள்ள அசுரர்களோடு உள் கலந்து மதிமயங்கப்பண்ணி வேதநம்பிக்கையை மாற்றி தீயவழி நடக்கச் செய்தும் *(292)* ''தேவ குருவான பிருகத்பதியானவன் வேதங்களிலும் தரும சாத்திரங்களிலும் வல்லவன் என்று தலைசிறந்த ஞானிகளெல்லோரும் புகழ்ந்தனர்'' என்று கூறியபடி, வியக்கத்தக்க ஞானிகளுக்கெல்லாம் தலைவனான பிருகத் பதியை; அவனுடைய மதத்துக்கு உரியவனாக்கி அதன் வழியாகச் சிலரைத் தீயவழி செல்லச் செய்தும், இன்னமும், ''பல சமய மதிகொடுத்தாய்'' என்றும், ''ஆறு சமயங்கட்கெல்லாம் பொருவாகி நின்றான்'' என்றும் திருவாய் மொழியில் ஆழ்வார் கூறுகிறபடியே, இறைவனான தனது அழகிய திருவுருவத்தில் அவர்கள் மனம் வைக்காதவாறும் மற்றும்,

மூலம்:

அநேக பாஹ்யமதங்களையும் குத்ருஷ்டி மதங்களையும் கல்பித்து தத்தத் குணபுருஷர்களாலே தத்தத் மதங்களை ப்ரவ்ருத்திக்கப்பண்ணி, தந்மூலமாக அசுரப்ரக்ருதிகளை பத்தஸம்ஸாரியாக்கி, இவற்றை அபிவ்ருத்தமாக்கிக் கொண டாப்போலே இத்தர்ஶநத்திலும், க்யாதி லாபார்ச்சந தத்பரராய் நாம ரூபங்களை தரித்து ஸ்வரூபாநுரூப வ்ருத்திவிசேஷங்க ளொன்று மின்றிக்கே ஸ்வரூப விரோதிகளையொன்றும் த்யஜிக்க மாட்டாதே, தேஹாத்மாபிமாநிகளாய் துரஹங்கா ரக்ரஸ்தராய், க்ருஷ்ண சிந்ஹங்களை தரித்துப்பின்னையவனோடே எதிரிட்ட பௌண்ட்ரக வாஸுதேவனைப் போலேயும், அம்ருதார்த்திகளாய் தேவதாகோஷ்டியிலுட் புக்க ராஹுகேதுக்களைப் போலேயும், ஸ்வகார்யபரராய், வாநரா காரங்களை தரித்த சுகஸாரணரைப் போலேயும்,

திரிகிற பரஹிம்ஸா பரதார பரிக்ரஹ பரத்ரவ்யாபகார தத்பரரான ஆஸுரப்ரக்ருதிகள் வந்து கலந்தால், அவர்களை



மோஹிப்பித்துத் தனக்கசலாக்குகைக்காக ஸஹகாரிகளாம்படி, சிலரைப் பார்வையிட்டு அவராலே நிதர்ஶநங்களைக் காட்டி, தந்மூலமாக நிஷித்தாநுஷ்டாநபரராக்கி லீலையிலே விநியோ கங்கொள்ளுகிறானென்று, ப்ரமான பரதந்த்ரரானவர், ''தெளி வுற்று வீவின்றி நின்றவர்க்கு'' (திருவாய் 7-5-11) என்கிறபடியே, த்ருடசித்தராய் நின்று ஸர்வேஸ்வரனானாலும் எம்பெருமானா ரேயானாலும் வாய்திறந்து சொன்னாலும் ஸ்வப்நாதிகளிலே நியமித்தாலும்,

விளக்கம்:

பலவிதமான வேதத்திற்குப் புறமதங்களையும், அதற்கு அவப்பொருள்கூறும் கோணல் மதங்களையும் படைத்து, இராசத தாமச முதலான அந்தந்த குணத்தையு டையவர்களாலே அந்தந்த மதங்களையும் பரப்பும்படி செய்து, அதன்வாயிலாக அசுர மனங்கொண்ட மக்களைப் போலே இந்த வைஷ்ணவ மதத்திலும், புகழுக்கும் பொருளுக்கும் பூசைக்கும் மயங்கியவராய், இறைவன் பெயரையும் அவன் சிந்நத்தைத் தரித்து ஆந்மாவின் தன்மைக் கேற்ற செயல்கள் ஒன்று மின்றிக்கே, ஆந்ம இயல்புக்கு விரோதமானவற்றை விட்டொழிக்காமல், தேகத்தையே, உயிராக எண்ணி அதனைப் பெரிதாக விரும்புபவர்களாய் கெட்ட அகங்காரங் கொண்டவர்களாய், கிருஷ்ணனுடைய சிந்நங்களைத் தரித்து அக்கிருஷ்ணனோடு எதிரிட்ட பௌண்டரக வாசுதேவனைப் போலேயும், அமுதத்தை வேண்டி தேவர்கள் கூட்டத்தில் கலந்து புகுந்த இராகு கேதுக்களைப் போலேயும், தன்னுடைய பயனில் கண்ணு டையவராய், குரங்கு வேடத்தைத் தரித்த சுக சாரணரைப் போலேயும்,

திரிகிற பிறரைத் துன்புறுத்துதல், பிறர் மனைவியரைத் திருடுதல், பிறர்பொருளைத் திருடுதல் ஆகியவற்றில் ஈடுபடுகின்ற அசுரமனங் கொண்டவர்கள் வந்து கலந்தால், அவர்களை மயக்கித் தன்னை அடையாதவாறு செய்கைக்காக இறைவன் அவர்களைத் தனக்குத் துணையாக்கிக் கொண்டு அவர்களையே சிலர் பின்பற்றுவதற்கு எடுத்துக் காட்டாகக்

காட்டி, அவர்கள் வழியாக கெட்ட ஒழுக்கத்தை மேற்கொள் ளும்படி செய்து, அவர்களை விளையாட்டில் உபயோகங் கொள்ளுகிறான் என்று, பிரமாணத்தைப் பின்பற்றுகிறவர், ‘‘தெளிவுற்று வீவின்றி நின்றவர்க்கு’’ என்கிறபடி உறுதியான மனத்தையுடையவராயிருந்து, இறைவனாம் எம்பெருமா னேயானாலும், எம்பெருமானாரேயானாலும் வாய்திறந்து சொன்னாலும் அல்லது கனவுமுதலான நிலைகளிலே ஆணை யிட்டாலும்,

மூலம்:

இந்த்ர வேஷதாரியாய் அம்பரீஷனை ப்ரமிக்க வந்தாப் போலே பண்ணுகிற எண்ணிலாப் பெருமாயனானவனுடைய மாயாகார்யமென்று நினைத்து, அப்ராமாணிகக்ருத்யங்களை ஶிஷ்டாசாரமென்று ஆசரிக்கப் போகாது; அவரை தூஷிக்கவுங் கூடாது தான் கடக்க நின்று, ‘‘அவன் மாயங் கண்டீர் அது அறிந்தறிந்தோடு மினே’’ (திருவாய் 4-10-6) என்று ஆழ்வார் அருளிச் செய்தாப்போலே ஓடிப்போகவேணும். அவன், லீலா லோர்த்தமாப் பண்ணும் க்ருஷியை தூஷித்தானாகில் அதுவும், லீலாலோலனான அவனுக்கு இஷ்டமல்லாமையாலே, இது கூடாதே என்று சொன்னால் அவனுக்கொரு த்ருஷ்ட விஷயத்தில் அநர்த்தம் நந்திடும். மாமியார் கச்சையென்று(?) அவ்விடத்தில் நில்லாதே, ப்ரமாண பராந்த்ரராய் விஶ்வஸிக்கத்தக்க அதிகாரிகளோடே இவ்வர்த்தஞ் சொல்லிக் கொண்டு கடக்கப் போகவேணும். இவ்வதிமாத்ர ப்ரவ்ருத்திக்கு ஐதிஹ்யம், எம்பெருமானார் தர்ஶநம் நிர்வஹித்துக் கொண்டுபோருகிற காலத்திலே யாதவப்ரகாசன், இவருடைய வைபவமெல்லாங் கண்டிருந்தும், மாத்ருவசநத்தாலும் பகவத் ஆஜ்ஞையாலும் அவரை யாஶ்ரயித்து, ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்திலே ப்ரவ்ருத்திக்கக் கண்டு தத் புத்ர ஶிஷ்யர்கள் ஸஹிக்கமாட்டாதே, இத்தர்ஶநத்திலே அபேத ப்ருவ்ருத்தியுண்டாம்படி தூஷிக்க வேணுமென்று நினைத்து நம்பூர்வாசார்யர்கள்;

((தொடரும்)



# வேதநாயகன் விஷ்ணுவே

இதழ் 163இன்தொடர்ச்சி. ஆசிரியர்: இரும்பாநாடு ஸ்ரீ.உ.வே.சே.பத்மநாபன்.

மற்ற தேவர்கள் எல்லாம் இந்த பூமியில் வாழ்வதற் குரிய எல்லாச் செல்வங்களையும் தரக்கூடியவர்கள். ஆனால் மோக்ஷத்தைத் தர அவர்களால் இயலாது. ஆனால் பகவான் விஷ்ணுவோ எல்லாவற்றையும் தருவதோடு மோக்ஷத்தையும் அளிப்பவன். உலகளந்தபோது பகவானுடைய திருவடி ஸம்பந்தம் பெற்றதால் பூமியில் உள்ளவர்களுக்கு இந்த ஞானம் ஏற்பட்டிருக்க வேண்டும். இந்த ஞானம் பெற்ற பூவுலகத்தாரின் ஸங்கல்பம்தான் இந்த மந்திரம். தேவர்களில் நேரடியான வேண்டுதல் இம்மந்திரத்தில் சொல்லப்பட வில்லை. அப்படியிருந்தால் ‘‘காப்பாற்றுங்கள்’’ என்று வந்திருக்கும். ‘‘காப்பாற்றட்டும்’’ என்று வந்திருப்பதால் இது பொதுவான ஸங்கல்பமாகவே தெரிகிறது. ஸங்கல்பம் என்றால் விருப்பம். அதாவது விஷ்ணுவைத் தவிர்த்த மற்ற தேவர்கள் மனிதர்களுக்கு இந்த கர்மபூமியில் உள்ள வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் கொடுத்து அந்த வாழ்க்கையில் விருப்பத்தையே ஏற்படுத்துவர்.

அதனால்தான் கர்மபூமியின் வாழ்க்கைக்குத் தேவை யான செல்வங்களில் எங்களுக்கு ஆசையை தேவர்கள் ஏற்படுத்த வேண்டாம் என்று விரும்புகிறார்கள். அந்த ஆசையை தேவர்கள் ஏற்படுத்தாமல் இருப்பதுதான் அவர்கள் காப்பாற்றுவது என்பது. தேவர்கள் இந்திரியங்களை இயக்குப வர்கள் என்பதாலும் இந்திரியங்களே ஆசாபாசங்களை தூண்டுபவை என்பதாலும் ‘‘இப்பூமி வாழ்க்கையில் உள்ள ஆசாபாசங்கள் தொலைய வேண்டும்’’ என்ற மறைமுகப் பொருளில்தான் ‘‘பூமியிலிருந்து தேவர்கள் காப்பாற்றட்டும்’’ என்று சொல்லப்படுகிறது. இவ்வுலக வாழ்க்கையில் உள்ள ஆசாபாசங்கள் தொலைந்தால்தான் முக்தி ஏற்படும் என்பதா

லும் அந்த முக்தி என்பதே பகவான் விஷ்ணுதான் தரமுடியும் என்பதாலும் தான் ''எந்த பூமியிலிருந்து விஷ்ணு அளந்தருளினாரோ'' என்று சொல்லப் படுகிறது. அதாவது பூமியிலும் பூமியில் உள்ளவர்கள் மீதும் பகவான் விஷ்ணுவின் திருவடி பட்டுவிட்டதால் தான் அவர்களுக்கு இவ்வுலக இன்பங்களின் மீது வெறுப்பு ஏற்பட்டு மோக்ஷத்தில் நாட்டம் கொள்ளும் படியான ஞானம் ஏற்படுகிறது என்பது இம்மந்திரத்தின் மூலம் பெறப்படும் சாரமான விஷயம். நேரடியாகவே தேவர்களிடம் வேண்டு வதாகக் கொண்டாலும் ''தேவர்களே! உங்களிடம் நாங்கள் உலகச் செல்வங்களை வேண்டவில்லை. அது எங்களுக்குத் தேவையும் இல்லை. பகவான் விஷ்ணுவின் திருவடி எங்கள் தலையில் பட்டுவிட்டதால் இவ்வுலக இன்பங்களில் எங்களுக்கு விருப்பம் போய் விட்டது. ஆகவே இவ்வுலகப் பிடிப்பிலிருந்து எங்களை விடுவித்து, ஆசா பாசங்கள் என்ற இருளிலிருந்து எங்களை காப்பாற்றி பகவான் விஷ்ணுவை அடைய உதவி செய்யுங்கள்'' என்பதுதான் அந்த வேண்டுதல். தேவர்களே ப்ருக்ருத பந்தங்களுக்கு கட்டுப் பட்டவர்கள் என்பதால் இந்த வேண்டுகோளை அவர்களால் நிறைவேற்ற முடியுமா என்பது வேறுவிஷயம்.

நமக்கு மிக முக்கியமான ஒரு காரியம் ஆகவேண்டும் என்றால் அந்தக் காரியம் சீக்கிரம் நடக்கவேண்டும் என்ற பேராவலின் உந்துதலால் அந்தக் காரியத்தை நிறை வேற்றித்தர தகுதியில்லாதவர்களிடம் கூட சில நேரங்களில் சென்று உதவி கேட்பது உண்டு. அதற்குக்காரணம் அந்தக் காரியத்தின் முக்யத்வமும், அக்காரியத்தை நிறைவேற்றிக் கொள்வதில் நமக்கு உள்ள அவசரமும் ஆவலும் தான். அதைப் போலத்தான் உலகபந்தத்திலிருந்து விடுபட மக்கள் தேவர்களை வேண்டுவதாக இம்மந்திரத்தில் வருவதும். தேவர்களே பந்தத்தில் ஊறியிருப்பவர்கள். பந்தத்தில் ஊறியிருப்பவன் பந்தத்தில் உள்ள மற்றவனை எப்படி அந்த பந்தத்திலிருந்து விடுவிக்க முடியும்? காரியம் நடக்க வேண்டும் என்ற அவசரம் கலந்த ஆவலில் மெய்மறந்து தகாதவர்களிடம் உதவி கேட்பது போலத்தான் இது.



உலகபந்தத்திலிருந்து விடுபட வேண்டும் என்ற ஞானம் வந்ததே பகவானின் திருவடிபட்டதால்தான். அவன் ஒருவனால் தான் அந்த பந்தத்திலிருந்து விடுவிக்கவும் முடியும். ஏழு சந்தஸ்ஸுகள் (ஸப்ததாமபி:) என்றால் வேதங்கள். வேதமே சிருஷ்டி அனைத்திற்கும் காரணம் என்பதாலும் (அதாவது சிருஷ்டிக்குக் காரணமான ஞானம் வேதம் ஆகும்.) வேத ஞானத்தால் சிருஷ்டிக்கப்பட்ட சிருஷ்டிகள் அனைத்தும் பகவானின் திருவடியின் கீழ் அடங்கி விட்டதாலும், வேதமும் பகவானுடைய திருவடியில் ஒடுங்கி தூசி அளவாகிவிட்டது. அதாவது சிருஷ்டிக்குத் தேவையான வேத ஞானம் பகவானின் திருவடித்துகளுக்கு நிகரானது. வேதமே பகவானின் கால் தூசிதான் என்றால் பகவான் எவ்வளவு பெரிய ஞானஸ்வரூபனாக இருக்கவேண்டும்! கற்பனை செய்துகூடப் பார்க்கமுடியாத அளவிற்கு உயர்ந்த ஞானசக்தியின் உருவம் அவன்.

தனது திருவடியில் ஒன்றியிருக்கின்ற வேதத்தால் உலகை அளந்தான் அவன். தன் திருவடித்துகளாயிருக்கிற வேத ஞானத்தால் உலகோர் தன்னை உணர்ந்து உய்வடையட்டும் என்பதால் தான் வேதங்களை அடிகளாகக் கொண்டு அளந்தான் என்று சொல்லப்படுகிறது. வேதங்கள் படித்து வேத ஞான முடையவர்களாகச் சொல்லப்படுபவர்கள் எல்லாம் பகவானின் பரத்வத்தை உணராவிட்டால் அதனால் என்ன பயன்? வேதங்கள் சொல்லும் பொருளின் முடிவும் பகவானின் திருவடிதான் என்பதால் தான் வேதங்களைத் தன் திருவடிகளில் வைத்துக்கொண்டு அளந்தான் பகவான். வேதங்களின் உண்மைப்பொருளை உணர்ந்தவர்களுக்கும், வேதங்களுக்கும் இறுதிப் புகலிடம் பகவானின் திருவடியே. ''எந்த வேதங்களைப் படித்து, அவற்றில் சொல்லப்படும் வேத நாயகனும் பரம்பொருளுமான என்னைத் தெளிவாக உணராமல், வேறு ஏதேதோ இலக்குகளை நோக்கி அலைகின்றீர்களோ, அந்த வேதங்கள் என் காலின் தூசி ஆகும். இதோ என் காலில் அந்த வேதங்களை வைத்துக்கொண்டு உலகனைத்தையும் அளக்கிறேன் பாருங்கள்'' என்று பகவான் தான் பரமேஸ்வரன் என்பதை

உலகோர் உணரும்படி செய்து அவர்களை உய்வடையச் செய்யவே வேதங்களைத் தன் காலடிகளாகக் கொண்டு அளந்தான். அண்டசராசரத்திலும் உள்ள தேவர், மநுஷ்யர் முதலிய சகல ஜீவராசிகளுக்கும் இறுதிப் புகலிடம் பகவானது திருவடியே என்பதால் பகவான் தன் திருவடிகளை உலகத்தின் மீது வைத்தான். அவன் திருவடிபட்டவுடன் உலகோர் அனைவரும் (தேவலோகத்தில் உள்ளவர்களும் உட்பட) வைஷ்ணவராகி விட்டனர். அன்று முதல் தான் பகவானின் திருவடி வடிவமான திருமண்காப்பை ஸ்ரீவைஷ்ணவர்கள் நெற்றியில் இட்டுக் கொள்ள ஆரம்பித்தனர். ஆகவே இம்மந்திரம் பகவத்பரத்வத்தை தெளிவாகவும், உறுதி யாகவும் வெளிப்படுத்துகிறது. இம்மந்திரத்திற்கு உரை எழுத முற்பட்டவர் களில் சிலபேர் இம்மந்திரப் பொருளை சரியாக உணர முடியவில்லை என்று கூறிவிட்டனர். விளங்காதவர் களுக்கு ஒன்றுமே விளங்காதுதான். இம்மந்திரம் ரிக் வேதத்தில் மட்டுமே காணப்படுகிறது. ''இதம் விஷ்ணு'' என்று தொடங்கும் 17-ஆவது மந்திரம் யஜுர் வேதம் முதல் காண்டம் - 2ஆம் ப்ரச்நம் - 13 - 25-இல் சொல்லப்படுகிறது. அங்கு ''ஸமூள்ஹ'' என்பதற்கு பதிலாக ''ஸமூட'' என்றும் ''பாம்ஸுரே'' என்பதற்கு ''பாகும்ஸுரே'' என்றும் வந்துள்ளது. ஆனால் பொருளில் எந்த வேறுபாடும் இல்லை. ரிக்வேதத்தில் வரும் ''ள'' யஜுர்வேதத்தில் ''ட'' வாக மாறியிருக்கும். அவ்வளவுதான் இனி அடுத்த மந்திரத்தைப் பார்ப்போம்.

*த்ரீணி பத$_3$ா விசக்ரமே விஷ்ணுர் கே$_3$ாபா அத$_3$ாப்$_4$ய: |*
*அதோ த$_4$ர்மாணி த$_4$ாரயந் ||*

இதன் பொருள்: ''ஸகல லோகங்களையும் ரக்ஷிப்பவனும், யாராலும் தோற்கடிக்கப்பட முடியாதவனு மான விஷ்ணு மூன்று திருவடிகளை வைத்தான். அதனால் தர்மங்களைத் தாங்கினான்''.

இம்மந்திரம் பகவான் ஸர்வ ரக்ஷகன் என்பதைக் காட்டுகின்றது. தேவர்கள், அசுரர்கள், மநுஷ்யர்கள் முதலியோர் அடங்கிய இந்த அண்ட சராசரம் அனைத்தையும்



காப்பவன் பகவான் விஷ்ணு. மேலும் எதிர்த்து வரும் யாராலும் தடுத்து நிறுத்தப்பட முடியாத, தோற்கடிக்கப் படமுடியாதவன் அந்த பகவான். அவன் தனது திருவடிகளை மூன்று விதமாக வைத்து உலகை அளந்தான். அவன் அவ்வாறு அளந்தது ஏனெனில் தர்மங்கள் நிலை குலைய விடாமல் தாங்குவதற்காகவே. தர்மங்கள் என்பவை வேத வைதிக நெறிகள். அந்த தர்மங்களை சீர்குலைக்கும் சில தீய சக்திகளும், அந்த தர்மங்களை தங்களின் சுய நலத்திற்காகப் பயன்படுத்தும் சில கபட சக்திகளும் உலகில் இருக்கத்தான் செய்கின்றன. அந்த சக்திகளை அடக்கி ஒடுக்கவே பகவான் மூவடியால் உலகை அளந்தான். உலகைத் தன் திருவடியால் அளந்த பின் உலகமெல்லாம் அவனுக்கு சொந்தமாகிவிட்டது அவனது சொத்தாகிய உலகில் வேத வைதிக தர்மங்கள் முறைப்படி நடக்கும்படி அவன் செய்தபடியினாலே தர்மங் களைக் தாங்குவதற்கே/காப்பதற்கே உலகை அளந்தான் என்று சொல்லப்படுகின்றது. உலகை அவன் அளந்தாலும் அளக்காவிட்டாலும் உலகனைத்தும் அவனுக்குரிய செல்வம் தான். அவனது ப்ரபாவத்தையும் உயர்வையும் உணராத சில மூடர்களுக்காகவே அவன் உலகளந்து அவனது உண்மையைப் புரிய வைத்தான். பகவான் விஷ்ணுவின் ஒவ்வொரு செயல்பாடும் தர்ம ரக்ஷணத்தையே நோக்கமாகக் கொண்டது என்பதை இம்மந்திரம் உணர்த்துகிறது.

இதில் இன்னொரு சூக்ஷ்மார்த்தமும் இருக்கிறது. உலகில் செல்வச்செருக்கும் பதவி மோகமும் தேவர்கள் முதல் சாதாரண மனிதன் வரை இருக்கின்றன. தேவராஜாவான இந்திரன் ''நானே எல்லா தேவர்களுக்கும் அரசன்: உலகமெல்லாம் என் சொத்து'' என்ற கர்வத்துடன் இருக்கிறான். இதைப்போலவே எல்லா தேவர்களும் தங்களுக்குரிய செல்வம், பதவி இவற்றின் மோகத்தால் செருக்குடையவர்களாகவே இருக்கிறார்கள். அதைப்போல மானிட உலகிலும் அரசனாக இருப்பவன் ''இந்த நாடே என்னுடையது. அதனால் நான் சொல்வதுதான் நீதி'' என்று தனது செல்வச் செருக்காலும், பதவியின் கர்வத்தாலும் சில நேரங்களில் தர்ம விரோதமான காரியங்களைச் செய்கிறான்.

நாட்டில் உள்ள செல்வந்தர்களும் அப்படித்தான். சராசரி மனிதர்களும் தாம் பெற்றிருக்கிற செல்வம் சொத்து இவற்றுக்குத்தக்கவாறு செருக்கும் பொறாமையும் கொண்டு ''இது என்னுடையது; அது உன்னுடையது; என்னுடைய இடத்தில் கால் வைத்தால் உன்னை நான் வெட்டிவிடுவேன்'' என்றெல்லாம் மடத்தனமாக நடந்து கொள்கிறார்கள். இந்திரன் முதல் பூமியில் உள்ள சராசரி மனிதன் வரை இந்தச் செல்வச் செருக்கும் பதவி கர்வமும் இருக்கத்தான் செய்கின்றன. இது எதனால் என்றால் வேததர்மத்தை சரியாக உணராததுதான் காரணம். அதனால் தான் பகவான் விஷ்ணு தேவர்கள் முதல் சராசரி மனிதன் வரை உள்ள எல்லோரும் புரிந்து கொள்வதற்காகவும், செல்வச் செருக்காலும், அறியாமையாலும், அவர்கள் புரிந்துவரும் அதர்மங்களை அழித்து உண்மை தர்மத்தை நிலை நாட்டவும், மூவடியால் உலகை அளந்தான். தனது உலகளந்த செயலால் பகவான் உணர்த்த முற்படுவது யாதெனில் ''ஓ! தேவாசுர மனுஷ்யர்களே! உங்களுக்குள்ள செல்வத்தாலும் பதவி யாலும், நான் எனது என்ற செருக்கடைந்து தகாததை செய்கிறீர்கள். உண்மையில் நீங்களும் உங்களுடைய பதவி, பெருமை, செல்வம் அனைத்தும் என்னுடையவையே. எதுவும் உங்களுக்குச் சொந்தமானதன்று'' என்பதே, இந்த உலக மெல்லாம் பகவானுக்குச் சொந்தமான சொத்து என்பதே சத்தியம்.

இதுவே வேத தர்மம், இந்த தர்மத்தை நிலை நிறுத்தவும், இந்த தர்மம் நிலை குலையாமல் தாங்கவுமே பகவான் மூவடியால் உலகளந்தான். அனைத்தையும் காப்பவனும், யாராலும் எதிர்க்க முடியாதவனும், உலக னைத்தையும் தன் திருவடித் துகள்களாகக் கொண்டவனுமான விஷ்ணு ஒருவனே வேத வைதிக தர்மங்களை தாங்கி அவற்றை வளர்க்கும்படியான ஆற்றல் பெற்றவன் என்பதை இம்மந்திரம் அழகாக விளக்குகிறது. இம்மந்திரம் யஜுர் வேதம்- 2ஆம் அஷ்டகம், 4-ஆம் ப்ரச்நத்தில் -6-51-இல் வருகிறது. இனி 19-ஆம் மந்திரத்தைப் பார்ப்போம்.



*விஷ்ணோ : கர்மாணி பஶ்யத யதோ வ்ரதாநி பஸ்பஶே |*
*இந்த்$_3$ரஸ்ய யுஜ்ய: ஸக$_2$ா ||*

இதன்பொருள்: ''இந்திரனின் உற்ற நண்பனான விஷ்ணு வின் வீரச் செயல்களைப் பாருங்கள்! அதனால் விரத மிருப்பவன் தன் விரதங்களை முழுமையாக நிறை வேற்றுகிறான்.''

விஷ்ணுவின் வீரச் செயல்கள் மற்ற எந்த தேவர் களாலும் செய்ய முடியாத அற்புதமான செயல்களாகையால் ''விஷ்ணுவின் வீரச்செயல்களைப் பாருங்கள்'' என்று ஆச்சர்யத்தோடு சொல்கிறது வேதம். பகவான் விஷ்ணுவின் அத்யாச்சர்யமான செயல்களைக் கண்டபின்தான் ஒருவனுக்கு வைதிக தர்மத்தின்மீது நம்பிக்கை பிறந்து, வேத வைதிக கர்மங்களையும், வேதத்தில் சொல்லிய விரதானுஷ்டானங் களையும் முறைப்படி நிறைவேற்றுகிறான். பகவானின் செயல்பாடுகளை எப்படி அறிய முடியும் எனில் வேதத்தின் மூலமாகத்தான் அறிய முடியும். இதனால் பகவானின் ஆச்சர்யகரமான செயல்பாடுகளே வேத வைதிக தர்மத்தின் மீது ஒருவனுக்கு முழு நம்பிக்கை ஏற்பட வழி செய்கிறது. ''அதோ த$_4$ர்மாணித$_4$ாரயந்'' என்ற இடத்திற்கு விளக்கம் போல் இருக்கிறது இம்மந்திரம்.

வேத வைதிக தர்மங்கள் மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படவே பகவான் இப்படிப்பட்ட ஆச்சர்யகரமான காரியங் களைச் செய்கிறான் என்பது இதனால் தெளிவாகிறது. மேலும் விஷ்ணு தேவராஜனான இந்திரனின் உற்ற நண்பன் என்கிறது இம்மந்திரம். இந்திரன் உள்ளிட்ட ஸகல தேவர்களையும் உலகளந்தபோது தனது திருவடித்துகள்களாகக் கொண்டிருந் தவன், உலகம் முழுக்க வியாபித்திருக்கின்றபொழுது எல்லா தேவர்களையும் தன் சரீரத்தில் வைத்திருப்பவன், தனது உண்மையுருவை மறைத்துக் கொண்டு சாதாரண புருஷ ரூபத்தில் இந்திரனுக்கு அவ்வப்போது உதவி செய்யும் நண்பனாக இருக்கிறான். ஸர்வ சக்தனான பகவான் விஷ்ணு பல உருவங்களை எடுக்கக் கூடியவன். அசுரர்களால் மிகுந்த

தொல்லைகளுக்குள்ளாகும் போது இந்திராதி தேவர்கள் பகவான் விஷ்ணுவின் உதவியை நாடுவது வழக்கம். அசுரர்களை அழிக்கும் விஷயத்தில் தேவர்களுக்கு உதவி செய்பவர் பகவான். பெரியவர்கள் சிறியவர்களோடு இறங்கிப் பழகுவது என்பது பெரியவர்களின் சிறந்த பண்பாகும். அதைப்போலவே தனது பெருமையும் பரத்வத்தையும் மறைத்துக் கொண்டு தேவர்களுக்குள் ஒரு தேவனாகத் தானும் இருந்து கொண்டு தேவர்களுக்கு பகவான் உதவி செய்கிறார். அது பகவானின் ஸௌலப்ய குணத்தின் தன்மையாகும். அதே நேரத்தில் பெரியவர்கள் தங்கள் நிலையிலிருந்து இறங்கி சிறியவர்களோடு கலந்து பழகும் போது, சிறியவர்கள் அந்தப் பெரியவர்களின் உயர்ந்த அந்தப் பண்பை மதித்து அதற்கு ஏற்றபடி நடத்து கொள்ள வேண்டும். மாறாக சிறியவர்கள் அறியாமையால் அந்தப் பெரியவர்களின் தன்மையைப் புரிந்து கொள்ளாமல் நடந்தால் பிறகு அந்தச் சிறியவர்கள் பெருங்கஷ்டங்களுக்கு உள்ளாவார்கள். பகவத் பரத்வத்தை உணராமல் தேவர்கள் சில நேரங்களில் கஷ்டங்களை அனுபவித்ததும் உண்டு.

சிருஷ்டி காலத்தில் பகவான் விஷ்ணு தன்னுடைய பல்வேறு சக்திகளையும் வியாபிக்கச் செய்து அந்தத் தனித்தனி சக்திகளுக்கும் தனித்தனியாக நாம ரூபங்களைக் கொடுத்து அந்த சக்திகளை தேவர்கள் என்ற ஒரு பிரிவாக்கி விடுகிறான். அந்த தேவர்களின் சரீரங்கள் ப்ரக்ருதி மண்டலத்திற்கு உட்பட்டிருப்பதால் ப்ரக்ருதி குணங்களால் பாதிப் படைந்துள்ள தேவர்கள் தங்களின் சக்தியின் மூலம் பகவானே என்பதை உணராமல் இருக்கிறார்கள். ஸத்வம் மிகும் சில நேரங்களில் மட்டும் அதை உணர்கிறார்கள். தங்களைப் படைத்தவனை அவர்கள் உணராவிட்டாலும் தன்னால் படைக்கப் பட்டவர்கள் கஷ்டப்படும்போது அந்தப்பரமன் தன்னை உருமாற்றிக் கொண்டு வந்து அவர்களுக்கு உதவி செய்து அவர்களின் கஷ்டத்தை நீக்குகிறான். இந்த 19-ஆவது மந்திரம் யஜுர்வேதம் 1-ஆம் காண்டம் - 3- ஆவது ப்ரச்நம் 6-11-இல் வருகிறது. இனி 20-ஆம் மந்திரத்தைப் பார்ப்போம். (தொடரும்)

# திருவிருத்தத்தில் அகஇலக்கியக் கோட்பாடுகள்

இதழ் 163இன் தொடர்ச்சி. ஆசிரியர்: ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ. கிருஷ்ணமாசார்யர்.

**277. பாங்கி தமர்வரைவெதிர்ந்தமை தலைவிக்குணர்த்தல்:**

**பாங்கி தமர் வரைவு எதிர்ந்தமை தலைவிக்கு உணர்த்தல் என்பது, பாங்கி தலைவன்றமர் மணங்கூறி வந்துழித் தலைவி தமர்மணம் எதிர்ந்தமை தலைமகட்குக் கூறல்.**

**278. தலைமகளுவகையாற்றா துளத்தொடு கிளத்தல்:**

**தலைமகள் உவகையாற்றாது உளத்தொடு கிளத்தல் என்பது, தலைவி மகிழ்ச்சி யடங்காது நெஞ்சொடு கூறல்.**

**279. தலைவனைப்பாங்கி வாழ்த்தல்:**

**வண்டு உண்ணும் கள்பொருந்திய மாலை மணங் கமழும் மார்பனே, மறந்துவிடாத அம்பலையுடைய சேரியாகிய பொய்கைத் துறையிலே தோன்றிய அலர் வாட நின் அழகாகிய மணக்கோலத்தால் அன்று சூட்டின அலரை இன்று பலருமறியத் தூரியமும் சங்கும் அதிர நீ சூட்டிக்காட்டு; நெடுங்காலம் வாழ்வாயாக என்றவாறு.**

**280. தலைவி மணம்பொருட்டாக அணங்கைப் பராநிலை காட்டல்:**

**தலைவி மணம்பொருட்டாக அணங்கைப் பராநிலை காட்டல் என்பது, தலைவி மணம்பொருட்டாகத் தெய்வத் துக்குச் சிறப்புச் செய்து வாழ்த்திக்கொண்டு நிற்கும் நிலையைப் பாங்கி தலைவற்குக் காட்டல்.**

**281. பராநிலைகண்ட தலைவன் மகிழ்தல்:**

மான் தொகுதியினம் நாணப்பட்ட மெல்லிய நோக்கை யுடையாள் மணங் காரணமாக நறும்புகையைப் புகைத்து நாட்கொண்ட அழகையுடைய மலரைத் தூவித் தெய்வத்தை வாழ்த்துஞ் சிறந்த முறைமையாகிய இவ்வல்லபம் இவட்குப் பொருந்தியது எப்படி என்றவாறு.

வரைவுமலிவு முற்றிற்று.
இத்துணையும் ஐம்பத்தொன்றாநாட்
செய்தியென்றுணர்க.

## II. அறத்தொடு நிற்றல்

அறத்தொடு நிற்றல் - உண்மை கூறுதல். உண்மை கூறலே அறமாதல் காண்க. அறம் என்பதற்கு கற்பு என மற்றொரு பொருளும் உண்டு. இம்முறையில் கற்பின் நிலையில் நிற்றல் என்றாகும் தலைவிக்கும், தலைவனுக்கும் நடந்துவரும் களவொழுக்கத்தைத் தலைவி பாங்கிக்கும், பாங்கிச் செவிலிக்கும், செவிலி நற்றாய்க்கும், நற்றாய், தந்தை தமருக்கும் தெரிவித்தல்.

தலைவியின் கண், மிக்க துயரத்தினால் கண்ணீர் வடித்தது. இதைக்கண்ட தோழி தலைவிக்குப் பல தேறுதல் கூறியும் பயனற்றது. பின்பு தோழி தலைவியின் அருகிருந்து அவள் கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருந்தாள். இது நிற்க, இதற்கு முற் பிரிவில் மணச் செய்தியினால் மகிழ்ந்திருந்த தலைவி இங்கு வருந்துதற்குக் காரணம் யாது எனச் சிறிது ஆராய்வோம். அவர்களுக்குண்டான களவுப் புணர்ச்சியால் உலகம் அலர் தூற்றிற்று. பெற்றோர் வெறுப்படைந்து மணத்தை மறுத்தனர். அஃதுணர்ந்த தலைவன் பிரிந்தேக, அவ்வாற்றாமைத் தலைவியை வருத்திற்று.

மிக வருத்தத்திலாழ்ந்த தலைவி ''என்னுடன் கூடி இனி உன்னைப் பிரியேன் எனத் தெய்வத்தை காட்டிச் சூளுரைத்த



தலைவர் இப்போது பிரிந்து போயினர். அவர் வார்த்தையை மெய்யென நம்புவது என் அறியாமையே. இனிப் பெரியோர் சொற்றவறார் எனக் கருதுதல் யாங்ஙனம்! தெய்வத்தின் முன் உரைத்த சபதம் தவறினால் அவருக்கு யாது கெடுதி யுண்டாகுமோ என என் மனம் வருந்துகின்றது'' எனத் தன் வருத்தத்திற்குக் காரணத்தைத் தோழியிடம் பகர்ந்தனள். அது தோழிக்குக் கோபத்தை மூட்டியது. ஆதலின் அவள், ''அவர் மனம் கல் போலும், நின் அன்பின் திறத்தை அவர் சிறிதும் உணர்ந்தாரில்லை. தெய்வத்தின் முன் சூளுரைத்ததையும் மறந்து நின்னைப் பிரிந்த அவர் நல்லவரல்லர்'' எனச் சினந்துரைத்தனள்.

இவ்வார்த்தைகள், தலைவியின் மனத்தைப் புண் படுத்தின. அவள் தோழியை நோக்கி, ''நீ அங்ஙனம் கூறுதல் தகுதியுடையதன்று. அவர் தாமதித்தற்கு ஏதோ தக்க காரணம் ஒன்றிருத்தல் வேண்டும். இன்றேல், சொன்ன சொல் பிறழ அவர் முற்பட்டிரார். அவர் எத்தெய்வத்தை நோக்கி வாக்குறுதி செய்தனரோ அத்தெய்வம் மிகக் கொடியது. அது சத்தியம் தவறியதற்காக அவருக்குத் தீங்கிழைப்பினும் இழைக்கும். ஆதலின் நாமிருவரும் அத்தெய்வத்தினிடம் சென்று பலி தூவி தலைவரைப் பொறுக்குமாறு துதிப் போமாக'' எனச் செப்பினள்.

அத்தலைவியின் மேல், பெண்கள் தூற்றிய அலர் நற்றாயின் செவிக்கெட்டியது. அதைப் பொறுக்கலாற்றாத நற்றாய், ஈத்துண்ணா லோபிகள் புதைத்து வைக்கும் பொன் போலத் தலைவியை வீட்டில் வைத்துக் காவல் செய்தனள். இருட் குறியின் கண் வந்த தலைவனை ஒரு நாள் செவிலி உணர்ந்தனள். இவற்றைத் தலைவி தோழியிடம் செப்பி வருந்தினள். அவ்வமயம் செவிலி அவ்விடம் வந்து, ''என் மகள் பசலை நிறம் அடைதற்கும், கண்ணீர் காலுதற்கும், இனிய பாலையும், என் சொல்லையும் உட்கொள்ளாமலி ருத்தற்கும் காரணம் யாது?'' எனத் தோழியை வினவினள். தனக்கு ஒன்றும் தெரியாது எனத் தோழி விடையிறுத்தனள்.

தாய் முதலியோர் வெறியாட்டாளனை யழைத்துக் கேட்டு, அவள் வேறுபாட்டிற்குக் காரணம் பேயென்றெண்ணி முருகனுக்குச் பூசை செய்து ஆடுபலியிட எண்ணினர். அங்ஙனம் ஆட்டைப் பலியிடுதல் பயனற்றதெனவும், அதனால் தலைவியின் நோய் தீராதெனவும் தோழி விலக்கினள். இது செவிலிக்குக் கோபத்தை மூட்டியது. அவர்கள் மேற்கொண்ட முருகன் வழிபாட்டைத் தடுத்த தோழியே தலைவியின் மெலிவிற்குக் காரணத்தைத் தெளிவுறக் கூறல் வேண்டுமெனச் செவிலி அவளை வற்புறுத்தினள். அதற்குத் தக்க விடையிறுக்க எண்ணிய தோழி, ''நாங்கள் தினைப்புனத்தில் இருந்தபோது, மாலையணிந்த உயர் தோளினையுடைய ஒருவர், 'இம்மலரும் நின்னொடு உறவுடையது' எனக் கூறி நீலப்பூ ஒன்றைத் தலைவியின் கையில் கொடுத்தார்.

மற்றொரு நாள் காவிரியில் நீராடும்போது நின் மகள் நீர்ச்சுழியில் அகப்பட்டுத் துன்புற்றாள். அவ்வமயம் அப்பெரியார் அவளைக் கரையேற்றி விட்டார். வேறொரு நாள் மதம் பிடித்த யானையொன்று அவளைத் துறத்தி வந்தது. அதைத் தம் வேலால் அடக்கித் தன் பிராணனை நோக்காது அவளைக் காத்தனர். பிற்றை நாள் உன் செல்வி ஒரு மரத்தின் நுனிக்கொம்பிலிருந்த பூவை இமை கொட்டாது நோக்கியதை, அவ்வழிச்சென்ற அத் தலைவர் தன் உடல் நலத்தைப் பேணாமல் அம்மரத்திலேறி புட்பத்தைக் கொய்து அவள் ஆற்றலை ஆற்றினார்.

அந்நாள் தொடங்கி நின் மகள் அவர் மாட்டே நினைவுற்றுள்ளாள்'' எனப் பொய்க் காரணங்களினால் தலைவிக்கு ஒருவன் மாட்டு அன்பு சென்றிருத்தலை வெளிப்படுத்தினாள். இவைச் செவிலிக்கும் உண்மையை உணர்த்தின. தலைவியின் வேறுபாடுகள் நற்றாய்க்கும் ஐயத்தை உண்டாக்கின. அவனும் செவிலித் தாயைக் கேட்டு உண்மையை யுணர்ந்தாள். பின்பு அவ்விஷயம் தமருக்குத் தெரிந்தது.

(தொடரும்)



## 'கோயிலொழுகு' என்னும் தலைப்பில் திருச்சி அகில இந்திய வானொலி முதல் அலை வரிசையில் 28.11.2012 அன்று இரவு ஒன்பதரை மணிக்கு ஒலிபரப்பப்பட்ட பாஞ்சஜன்யம் ஆசிரியரின் உரை.

இதழ் 164இன் தொடர்ச்சி. ஆசிரியர்: ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ. கிருஷ்ணமாசார்யர்.

*கி.பி.1609-ஆம் ஆண்டில் நடைபெற்ற நிகழ்ச்சி களுக்குப் பிறகு* **கோயிலொழுகு முதல்பாகம் ஸம்பூர்ணம்** *என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கி.பி.1609-ஆம் ஆண்டிற்குப் பிறகு நிகழ்ந்த நிகழ்ச்சிகளைப் பற்றி அறிவதற்குத் தற்போது* **கோயிலொழுகின்** *இரண்டாம் பாகம் (கி.பி.1609 முதல் கி.பி.1803 ஈறாக) அச்சு வடிவில் நமக்குக் கிடைக்கவில்லை. ஆயினும் முனைவர் ஹரிராவ் அவர்கள்* **கோயிலொழுகு** *இரண்டாம் பாகத்தின் கையெழுத்துப் பிரதியினை கோயில் நிர்வாகத்தினரிடமிருந்து பெற்று அதனுடைய ஆங்கில மொழி பெயர்ப்பினைச் செய்துள்ளார். பாண்டிய மன்னனான முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி.1250-1284) பெரியபெருமாளுக்குச் செய்த கைங்கர்யங்களை விவரித்துக் கூறும்* **கோயிலொழுகு** *ஹொய்சாள மன்னர்களுடைய திருப்பணிகளைக் குறிப்பிடுகின்றது. ஹொய்சாள மன்னர்களான இரண்டாம் வல்லாள தேவன் (கி.பி.1173-1220) சோமேச்வரன் என்று அழைக்கப்படும் இரண்டாம் நரசிம்மன் (கி.பி.1232-1240), வீரராமநாதன் (கி.பி.1256-1269), அவர்கள் காலத்துப் படைத் தலைவர்களான சிங்கணதண்டநாயகர், கம்பைய தண்ட நாயகர், கரியமாணிக்கதண்டநாயகர் ஆகியோர்களைப் பற்றிய குறிப்புகள்* **கோயிலொழுகில்** *அமைந்துள்ளன.*

உத்ஸவரான அழகியமணவாளன் கி.பி.1311-ஆம் ஆண்டு நிகழ்ந்த படையெடுப்பின் போது திருவரங்கத்தை விட்டு அகன்றாரா? அல்லது கி.பி.1323-ஆம் ஆண்டு நிகழ்ந்த படையெடுப்பில் திருவரங்கத்தைவிட்டு அகன்று பல ஆண்டுகள் கழிந்த பின்புதான் ஆஸ்தானம் திரும்பினாரா? துலுக்க நாய்ச்சியார் வைபவத்தை எடுத்துரைக்கும் **கோயிலொழுகு** கி.பி.1311-ஆம் ஆண்டு படை யெடுப்பிற்குப் பின் இந்த நிகழ்ச்சி நடைபெற்றதாகக் குறிப்பிடுகிறது. ஆனால் அழகிய மணவாளன் ஆஸ்தானம் திரும்பிய செய்தியைக் கி.பி.1323-ஆம் ஆண்டு படை யெடுப்பின் பின் நடந்த நிழ்ச்சிகளோடு இணைத்துக் கூறுகிறது. இரண்டு அழகியமணவாளர்கள் எவ்வாறு திருவரங்கத்தில் கோயில் கொண்டனர் என்பதை விவரிப் பதிலும் சில தடுமாற்றங்கள் காணப்படுகின்றன. திருவரங்க மாளிகையார் எனப்படும் உத்ஸவர் எதற்காக, எந்த காலத்தில் கோயில்கொண்டார் என்பதிலும் தெளிவு இல்லை.

ஈரங்கொல்லியான ஸ்ரீவைஷ்ணவ வண்ணாத்தான் ஸ்ரீரங்க விமானத்தோடு திருவரங்கத்திற்கு வருகைதந்த அழகிய மணவாளனே நம்பெருமாள் என்ற திருநாமம் சாற்றிக் கொண்டாடினான் என்று தெரிவிப்பதிலும் சில சிக்கல்கள் உள்ளன. கி.பி.1323-ஆம் ஆண்டு படையெடுப்பின் போது திருவரங்கத்தைவிட்டு அகற்றப்பட்ட உத்ஸவ திருமேனிகளில் திருவரங்கமாளிகையாரும் இருந்தாரா? திருமலையில் ஆராதிக்கப்பட்டு வந்த அழகியமணவாளனின் உத்ஸவ திருமேனிகள் ஒன்றா? அல்லது இரண்டா? போன்ற பல கேள்விகளுக்குக் **கோயிலொழுகு** மூலம் தெளிவான விடையைத் பெற இயலவில்லை.

**கோயிலொழுகு** ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யர்களைப் பற்றி விரிவாகக் குறிப்பிடுகின்றது. ஸ்ரீமந் நாதமுனிகளுடைய கைங்கர்யங்களை விரித்துக்கூறும் **கோயிலொழுகு** மிக சுருக்கமாக உய்யக்கொண்டார், மணக்கால் நம்பிகள், ஆளவந்தார் ஆகியோருடைய கைங்கர்யங்களை எடுத்துரைக் கின்றது. இராமானுசர் திருவரங்கம் பெரியகோயிலில் மேற்கொண்ட கைங்கர்யங்கள் விரிந்த அளவில் இந்த நூலில்



காணப்படுகின்றன. அவர் மேற்கொண்ட- கோயில் நிர்வாகச் சீர்திருத்தங்கள், கைங்கர்யக் கொத்துகளைப் (குழுக்களைப்) பல பிரிவுகளாக ஏற்படுத்திய செய்திகள் இடம் பெற்றுள்ளன. **கோயிலொழுகு** தெரிவிக்கும் செய்திகளிலே மிக முக்கியத்துவம் வாய்ந்தது இந்தப் பகுதியாகும். இராமானுசருடைய சிஷ்யரான கூரத்தாழ்வான் அவருடைய திருக்குமாரர்களான ஸ்ரீபராசரபட்டர், ஸ்ரீவேதவியாச பட்டர் ஆகியோரைப் பற்றிக் குறிப்பிடும் **கோயிலொழுகு** ஸ்ரீரங்கநாராயண ஜீயர் பட்டத்தை அலங்கரித்த கூரநாராயண ஜீயருடைய கைங்கர்யங்களைப்பற்றி விரிவாகக் குறிப்பிடுகிறது.

கி.பி.1323-ஆம் ஆண்டு நடைபெற்ற உலுக்கானுடைய படையெடுப்பிற்கு பிறகு மதுரை சுல்தான்கள் கண்ணனூர் என்றழைக்கப்படும் சமயபுரத்தில் நிலைகொண்டதையும் அதன் பிறகு அவர்கள் மதுரையைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்டதையும் கோயிலொழு குறிப்பிடுகின்றது. பதினான்காம் நூற்றாண்டின் இறுதியில் மதுரை சுல்தான்கள் ஆட்சி எவ்வாறு முடிவுக்கு வந்தது என்பதையும் அது விரித்துரைக்கின்றது. கோபண்ண உடையார், விருப்பண்ண உடையார் ஆகியோர்களது கைங்கர்யங்களைக் குறிப்பிடுவ தோடு உத்தமநம்பி வம்சத்தவர்கள் எவ்வாறு திருவரங்கம் கோயில் நிர்வாஹங்களில் முதன்மை நிலை பெற்றனர் என்பதையும் தெரிவிக்கின்றது.

தளர்வுற்றிருந்த திருவரங்கம் கோயிலின் நிதிநிலை மையை வழியடிமை நிலையிட்ட உத்தமநம்பியும் அவரது உடன்பிறந்தவரான சக்கர ராயரும் எவ்வாறு உயர்நிலைக்குக் கொண்டு வந்தனர் என்பதையும், விஜய நகரப்பேரரசைச் சார்ந்த மன்னர்கள், இளவரசர்கள், படைத்தலைவர்கள், மண்டலாதிகாரிகள் ஆகியோர் திருவரங்கம் கோயிலில் மேற்கொண்ட கைங்கர்யங்களைப் பற்றியும் அடுத்து விவரிக்கின்றது. முகம்மதியர்களுடைய படையெடுப்பால் பாழ்பட்டிருந்த மண்டபங்களையும் கோபுரங்களையும் விஜயநகரப் பேரரசைச் சார்ந்த பலர் புனர்நிர்மாணம் செய்தனர்.

*பெரிய ஜீயரான ஸ்ரீமணவாளமாமுனிகள் திருவரங்கத்திற்கு எழுந்தருளி திருவரங்கம் திருப்பதியே இருப்பாகப் பெற்ற வைபவத்தினையும் அவர் செய்தருளிய கைங்கர்யங்களையும்* **கோயிலொழுகு** *குறிப்பிடுகிறது. கி.பி.1529-ஆம் ஆண்டுமுதல் கி.பி.1736-ஆம் ஆண்டு முடிய ஆட்சி செய்து வந்த மதுரை, தஞ்சை நாயக்கர்கள் திருவரங்கம் கோயிலுக்குச்செய்த தான தர்மங்களைப் பற்றிக் குறிப்பிடும்* **கோயிலொழுகு** *அவர்களுடைய குலகுருவாய்க்* **கோயில் கந்தாடை** *வாதூல* **தேசிக வம்சத்தவர்கள்** *விளங்கி வந்ததையும் தெரிவிக்கின்றது. மராட்டியர்களுக்கும் ஹைதராபாத் நிஜாமிற்கும் நடந்த போர்கள் சுருக்கமாக குறிப்பிடப்படுகிறது. முகம்மதுஅலிக்கும் சந்தா சாஹிப்பிற்கும் நடந்த கர்நாடக போரில் எவ்வாறு பிரெஞ்சுப் படைகளும் சந்தா சாஹிப்பின் படைகளும் திருவரங்கம் வீதிகளில் பல ஆண்டுகள் முகாமிட்டிருந்தன என்பதையும் அந்த நூல் குறிப்பிடுகிறது.*

**சதாசிவராயருடைய ஆட்சிக்காலத்தில் அவருடைய முதன் மந்திரியாகவும் சேனாதி பதியாகவும் விளங்கிய ஆரவீடு ராமாராஜா, அவனுடைய தம்பியான ஆரவீடு திருமலை மற்றைய ஆரவீடு வம்சத்தவர்கள் காலத்திய நிகழ்வுகள் இரண்டாம் பகுதியில் காணப்படுகின்றன. துளுவ வம்ச மன்னர்கள் காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட மதுரை, தஞ்சை மற்றும் செஞ்சி நாயக்க மன்னர்களுடைய ஆட்சி காலத்திய செய்திகள் மிகப்பரந்த அளவில் கோயிலொழுகில் இடம் பெற்றுள்ளன. இடைவிடாத போர்களால் 17ஆம் நூற்றாண்டில் திருச்சிராப்பள்ளி மற்றும் திருவரங்கம் பகுதிகளில் பெரும் பஞ்சம் நிலவியிருந்தது.**

**18ஆம் நூற்றாண்டில் மதுரை நாயக்கவம்ச மன்னர்களுடைய வீழ்ச்சிக்குப் பிறகு சந்தாசாஹிப் மற்றும் முகம்மது அலிக்கு இடையே ஏற்பட்ட அரசுரிமைப் போராட்டத்தின் விளைவாக இந்த நாட்டில் வாணிபம் செய்யவந்த கிழக்கிந்தியக் கம்பெனியர் எவ்வாறு நாட்டை ஆளும் உரிமையினைப் பெற்றனர் என்பதையும், சுமார் 48 ஆண்டுகள் சந்தாசாஹிப், பிரெஞ்சுப் படையினர்,**



**நந்திராஜாவின் தலைமையில் முகாமிட்டிருந்த மைசூர்ப்படையினர், ஆங்கிலேயர்கள் மீண்டும் பிரஞ்சுப் படையினர் ஆகியோருக்குத் திருவரங்கம் திருக்கோயில் பாதுகாப்பு நிறைந்த இடமாக அமைந்திருந்தது என்பதையும் கோயிலொழுகு தெரிவிக்கின்றது.**

**கி.பி. 1736ஆம் ஆண்டு தொடங்கி கி.பி. 1784ஆம் ஆண்டு ஈறாக 48 ஆண்டுகள் திருவரங்கத்திலும் அதைச் சார்ந்துள்ள பகுதிகளிலும் மக்கள் சொல்லொணாத் துயரங்களுக்கு ஆளாயினர். நம்பெருமாள் கண்டருளும் பல உத்ஸவங்கள் நான்முகன் கோபுர வாசலுக்கு உட்பட்ட வீதிகளிலே நடைபெற்று வந்தன. திருவரங்கத்து மக்கள் அனைவரும் ஒவ்வொரு நாளும் போர் அபாயத்திற்கு உட்பட்டே வாழ்க்கையை நடத்தி வந்தனர். குறிப்பாக பிரெஞ்சு படையினர் முகாமிட்டி ருந்தபோது அவர்கள் அத்துமீறி வீடுகளில் உட்புகுந்து உணவுப் பொருட்களைக் கொள்ளை கொண்டதோடு மட்டுமல்லாமல் அங்கு வாழ்ந்துவந்த பெண்களையும் கவர்ந்து சென்றார்கள். முகாமிட்டிருந்த முகம்மதியப் படைகளோ, பிரெஞ்சுப் படைகளோ நான்முகன் கோபுர வாயிலைத் தாண்ட முற்பட்டபோது திருவரங்கம் வாழ்மக்கள் தங்கள் உயிரைப் பணயம் வைத்து இந்தக் கோயிலைக் காத்து வந்தனர்.**

**கி.பி. 1790ஆம் ஆண்டு திப்புசுல்தான் ஸ்ரீரங்கத்தை அழிக்க முற்பட்டபோது அவனுக்குப் பெரும் அளவில் தங்க நகைகளையும் பொற்காசுகளையும் கொடுத்து அழிவிலிருந்து திருவரங்கத்தை காப்பாற்ற முற்பட்டனர் ஸ்தலத்தார்கள். ஆயினும் ஆங்கிலேய படையைக் கண்டு அஞ்சி திண்டுக்கல்லுக்கு இடம் பெயர்ந்தான் திப்புசுல்தான். திருவரங்கத்திற்கு ஏற்படவிருந்த பேராபத்து இவ்வாறு விலகியது.** *கி.பி.1801-ஆம் ஆண்டு கர்நாடகப் போரின் முடிவில் எவ்வாறு ஆட்சிப் பொறுப்பு கிழக்கிந்தியக் கம்பெனியர்களிடம் சென்றது என்பதைக் கூறி திருச்சி மாவட்ட ஆட்சியாளரான திரு.வாலஸ் துரை திருவரங்கம் திருக்கோயிலில் தென்கலை மரபுப்படித்தான் கைங்கர்யங்கள் நடைபெற வேண்டும் என்னும் வரலாற்று முக்கியத்துவம்*

*வாய்ந்த தீர்ப்பினை வழங்கிய செய்தியோடு கோயிலொழுகு முற்றுப் பெறுகிறது. இவ்வாறு கோயிலொழுகு பெரிய பெருமாள் அயோத்தியிலிருந்து திருவரங்கத்திற்கு எழுந்த ருளிய நாள் தொடங்கி கி.பி.1803ஆம் ஆண்டு திரு.வாலஸ் துரையால் கோயிலொழுகின் படிகள் எடுக்கப்பட்டுக் கருவூலத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்ட நிகழ்ச்சி வரை பல்வேறு செய்திகளைத் தருகின்றது.*

**கோயிலொழுகின் நடை**

ததநந்தரம், ராஜமஹேந்த்ரன், ப்ரதிஸம்வத்ஸரமும் திருக்காவேரி பெருகிவந்தால் திருவணுக்கன் திருவாசலுக் குள்ளே ஊற்று ஊறலாயிருக்கையில், அத்தைத் துற்பித்து, திருவனந்தாழ்வான் கண்வளர்ந்தருளுகிற விடமும் முதலாகத் தளவரிசை பண்ணுவித்து, கோயிலாழ்வாரைச் சூழ எழுந்தருளியிருக்கிற நாராயணர், நாபிநளிநர், நாக சயநர், நாரஸிம்ஹர் இருக்கிற தளவரிசை மட்டத்துக்கு மேலேயும் எடுத்துக்கட்டி, தூணும் எழவீசிக் கட்டிவைத்துத் தளவரிசையும் படுப்பித்து, இரண்டாம் ஆவரணத்துத் திருமதிள்களும், தெற்குத் திருவாசல் கோபுரமும், வடவண்டைத் திருவாசலும், தர்மவர்மாவின் வகை கைங்கர்யமான திருக்கோபுரநயினார் சேநைமுதலியார் கோவில் தவிரத் திருக்கோபுரமும் தளவரிசையும் ராஜமஹேந்த்ரசோழன் கைங்கமாகையாலே, ராஜ மஹேந்த்ரன் திருவீதி என்று வ்யவஹாரம் நடந்து வந்தது.

**விளக்கம்**

திருவரங்கம் திருப்பதியில் இரண்டாம் திருச்சுற்றான ராஜமகேந்திரன் திருச்சுற்று ராஜமகேந்திரன் என்னும் மும்முடிச்சோழனால் கட்டப்பட்டது. இவனுடைய ஆட்சிக் காலம் கி.பி. 1058 - 1062. அக்காலக்கட்டத்தில் திருவரங் கத்தில் ஸ்ரீராமானுஜர் ஸ்ரீவைஷ்ணவ ஆசார்ய பீடத்தில் எழுந்தருளியிருந்தார். ராஜமகேந்திரன் செய்த திருப்பணி களாகக் கோயிலொழுகு சில குறிப்புகளைத் தருகிறது. இந்தத் திருப்பணிகள் உடையவர் திருவரங்கத்தில் எழுந்தருளியிருந்த காலத்தில் அவருடைய நியமனப்படி நடைபெற்றிருக்க வேண்டும்.



முதலாம் ராஜராஜசோழன் கி.பி.985 முதல் 1014-வரை அரசு புரிந்தான். இவனது காலத்தில் பாண்டி மண்டலம் முழுமையாகச் சோழர்களின் ஆட்சிக்குக்கீழ் வந்தது. பாண்டி மண்டலத்தை ராஜராஜப் பாண்டிநாடு என்று அழைக்கலாயினர். ராஜராஜன் தனது மகன் (முதலாம்) ராஜேந்திரனுக்கு 1012இல் முடி சூட்டினான். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ராஜராஜன் இறந்தான். கி.பி. 1014ஆம் ஆண்டிலிருந்து ராஜேந்திரன், சோழ மாமன்னன் ஆனான். ராஜேந்திரனின் படைகள் கங்கைவரை சென்று வெற்றியடைந்தன. (ஸ்ரீராமானுஜர் திருஅவதாரம் செய்தருளிய பிங்கள ஆண்டில் -கி.பி. 1017இல் சோழ மாமன்னனாய் விளங்கியவன் முதலாம் ராஜேந்திர சோழன்.)

ராஜேந்திரன் 1018இல் தன் மூத்தமகனான ராஜாதிராஜனுக்கு இளவரசுப்பட்டம் கட்டினான். இந்த மன்னனே ராஜமன்னார்குடி என்று இன்று அழைக்கப்படும் ராஜாதிராஜ சதுர்வேதி மங்கலத்தை ஏற்படுத்தியவன். ராஜேந்திரனின் அம்பாசமுத்திரம் பிரம்மதேசம் மன்னார் கோயில் கல்வெட்டு (ARE. 112/1905) மதுரையில் ஆட்சிபுரிந்த சடையவர்மன் உடையார் சுந்தரசோழ பாண்டியன் என்பவன் ராஜேந்திரனின் மகனாவான் என்பதை உறுதி செய்கிறது. ராஜேந்திரனின் 24ஆம் யாண்டு நாள் 128, சுந்தர சோழ பாண்டியனின் 15ஆம் யாண்டுக்குச் சமம்.

ராஜேந்திரனின் இரண்டாவது மகன் கி.பி. 1021-22-இல் மதுரையில் சோழ பாண்டியனாக அமர்த்தப்பட்டான். (இவனே இரண்டாம் ராஜேந்திரன் ஆவான்.) ராஜமகேந்திரன் கி.பி. 1058-59இல் முடி சூடினான் என்று கொள்ளலாம். இவனது கல்வெட்டுகள் நான்காம் ஆட்சியாண்டு கி.பி. 1062க்குப் பிறகு கிடைத்திலது. கி.பி.1054-இலிருந்து கி.பி. 1064வரை சோழப் பேரரசனாக இருந்தவன் இரண்டாம் ராஜேந்திரன். ஆகவே இரண்டாம் ராஜேந்திரன், ராஜமகேந்திரனுக்குக் கி.பி. 1058-59இல் இளவரசுப் பட்டம் சூட்டியிருக்க வேண்டும்.

முதலாம் ராஜேந்திரனின் புதல்வர்கள் அறுவர். அவர்களில் மூன்றாமவனுடைய பட்டப் பெயர் மும்முடிச் சோழன் என்பதாகும். இவன் கங்கவாடியில் சோழ கங்கனாக கி.பி.1054 வரையிலும், பிறகு மதுரையில் கி.பி.1055லிருந்து மாறவர்மன் பராக்கிரமசோழபாண்டியன் என்ற பெயரிலும் கி.பி.1062ஆம் ஆண்டின் முற்பகுதி வரை ராஜமகேந்திரன் என்ற மன்னனாகவும் ஆட்சி புரிந்துள்ளான். ராஜமகேந்தி ரனுடைய காலத்தில் தென்திருக்காவிரி தற்போதைய தெற்கு ராஜகோபுரத்திற்கு வெகு அருகில் மேற்கு கிழக்காகப் பெருக்கிட்டு ஓடிக்கொண்டிருந்தது. அதேபோன்று வடதிருக் காவிரி எனப்படும் கொள்ளிடமும் வடக்கு கோபுர வாசலுக்கு வெகு அருகில் ஓடிக் கொண்டிருந்தது. காவிரியில் நீர்ப்பெருக்கு ஏற்படும் போதெல்லாம் கர்ப்பக்கிரஹத்தில் திருவனந்தாழ்வானைச் சுற்றி நீர் ஊற்றாய் அமைந்திருந்தது. ராஜமகேந்திரன் அந்த நீர் ஊற்றினை அடைத்துத் திருவனந் தாழ்வான் எழுந்தருளி யிருக்கிற இடத்திலே தளவரிசை யிட்டு நீர் ஊறுவதைத் தடுத்தான்.

திருஉண்ணாழி திருச்சுற்றிலே எழுந்தருளியிருக்கிற நாராயணர், நாபிநளினர், நாகசயனர், நாரஸிம்ஹர் ஆகியோர் எழுந்தருளியிருக்கிற இடத்தில் தளவரிசையை எழுப்பி தூண்களையும் நிறுத்தி இரண்டாம் ஆவரணத்தில் திருமதிள் களை கட்டுவித்தான். ராஜமகேந்திரன் மேற்கொண்ட இந்தத் திருப்பணியால் இரண்டாம் திருச்சுற்றுக்கு ராஜமகேந்திரன் திருச்சுற்று என்ற பெயர் நிலை கொண்டது. நம்பெருமாள் எப்போது புறப்பாடு கண்டருளினாலும் இந்தத் திருச்சுற்றை வலம் வந்தே சந்தன மண்டபத்தில் எழுந்தருளுவார். அதுபோன்றே மற்றைய புறப்பாடுகளிலும் ராஜமகேந்திரன் திருச்சுற்றினை வலம் வருவார். நாழிகை கேட்டான் வாசல் கோபுரமும் வடவண்டை திருவாசலும் (தொண்டைமான் மேட்டுக்கு மேற்குப் பகுதியில் இந்தத் திருவாசல் அமைந்துள்ளது. இந்தத் திருவாசல் வழியாகச் சென்றால் விரஜாநதி ஸ்தானத்தில் அமைந்துள்ளதும் பரமபத வாசலுக்கு மிக அருகில் அமைந்துள்ளதுமான விரஜாநதிக் கிணற்றை அடையலாம்.) ராஜமஹேந்திரன் மேற்கொண்ட திருப்பணிகள் ஆகும். ***



# மாறன் பாப்பாவினம்

இதழ் 163இன் தொடர்ச்சி. டாக்டர். அருட்கவி அரங்க சீனிவாசன்.

அழலைக் குருமணியும் மதியினை மூங்கில் முத்தும் இடியைத் தொண்டகப் பறையும் புலியை நாயும் ஆலத்தை விழியும் ஒப்பாயிருந்தே வென்றனவாகப் புகன்றமையால் இது ஒத்தது வென்றது என்னும் உவமையணியாதல் காண்க

களவொழுக்கத்தை மேற்கொண்ட தலைவன் இரவில் வந்து தலைவியைக் கலந்து மகிழ்ந்து கொண்டிருந்தான். இந்நிலையில் அவன் மறைந்துவர இயலாமல், தாயும் நாயும் ஊரும் துஞ்சாமை, காவலர் கடுகுதல், நிலவு வெளிப்படுதல், கூகை குழறுதல், கோழி குரல்காட்டுதல் முதலிய இடையூறுகள் நேர்ந்தமை கண்ட தலைவி வருந்துவதாக அமைந்தமையால், இது காப்புச் சிறைமிக்க கையறு கிளவித் துறையானது.

மாதர் -அழகிய. மதிப்பிளவு - பிறைச்சந்திரன். இமிழ் இசைய - ஒலிக்கின்ற இசையையுடைய. ஓதம் - கடல், படு விடம் - உண்டான நஞ்சு. துற்று - உண்டு. உரவிடை யார்க்கு இடர் இழைத்த மேதையான் - வலிய உரவிடை யார்க்குத் துன்பம் செய்த சிவன். இடம்தழீஇ - இடப் பாகத்திலே பொருந்தியிருந்து. திருமகள் காமுறும் பெருமான் - திருமகளால் விரும்பப்படும் திருமால்.

அலகிலா - அளவில்லாத. வண்தமிழ் - திருவாய் மொழி. பொருநைத் திருநாடன் - நம்மாழ்வார். திமிரம் - கருநிறம். விற்றுணை - இருவிற்கள்; (புருவத்துக்கு உவமை.) துடரி - ஒருமலை. குறுந்துளைப்பல் - குறிய துவாரமுடைய பல்லைக் கொண்ட. பணி - பாம்பு. உமிழ்ந்த-கக்கிய. துரீஇ - துரத்தி, அழலினும் - நெருப்பைக் காட்டிலும். நிலைய - நிலையையுடையன.

புறக்காழ் - வெளிப்பக்கம் வயிரமுடைய, பணை - மூங்கில், உகுத்த - சொரிந்த. மதியினும் - சந்திரனைக் காட்டிலும். கொண்டலினூங்கு இடி - மேகத்தினிடமாகிய இடி. கோதையில் - பூதத்தைக் காட்டிலும், பேதுற மதிமயங் கும்படி. குளிறுதல் - ஒலித்தல். தொண்டகம் - குறிஞ்சிப் பறை.

ஆளி - சிங்கம். பொறிவரிய - பொறித்த வரிகளை யுடைய. புலியில் - புலியைக் காட்டிலும். ஞாளி -நாய். நடுக்கு - நடுக்கம்.

உபயநமன் - இருநமன்கள். பொருவும் - போன்ற. உருவிற்றாய் - உருவமுடையதாய். வெற்றாலத்தினும் - வெறிய நஞ்சைக் காட்டிலும். ஒருசிறை - ஒருபுறம். நீளிடை வாழ்பவர் - தொலைவில் வாழ்பவர்.

கங்குல் - இரவு. சேண் - வானம். புணர்முலைக்கு வட்டு - நெருங்கிய மலைபோன்ற முலைகளில்.

இமிழ்இசைய ஓதநீர்ப் படுவிடம்துற்று உரவிடை யார்க்கு இடர்இழைத்த மேதையான் இடம்தழீஇ மேம்படு பெருமான் என்றும். மாதர்வாள் முகத்துஇருள்தீர் மதிப்பிள வொத்து வில்துணை செகுத்த திலகவாணுதல் செவ்வாய்த் திருமகள் காமுறும் பெருமான் என்றும் கூட்டிப் பொருள் காண்க. ஒலிக்கின்ற கடல்நீரில் உண்டானவிடம் உண்டு பகைவர்க்குத் துன்பம் செய்த சிவபெருமானுக்கு இடப்பாகத் தில் பொருந்தி மேம்பட்ட பெருமான் என்பதும், வாள்முகமும் மதிப்பிளவும் ஒத்த திலகவாணுதலும் வில்துணை செகுத்த புருவமும் உடைய திருமகள் விரும்பிய பெருமான் என்பதும் பொருள்.

திருமாலின் குணக்கடலில் ஆழ்ந்து வண்தமிழ் கூர்ந்த நம்மாழ்வாருக்குரிய துடரிமலையிடத்து.

குறுந்துளையுடைய பல்கொண்ட பாம்பு உமிழ்ந்த மணிகள் இருளைத் துரத்தி, பகல்போன்று நெருப்புப் போன்று ஒளி வீசுகின்றது.



மூங்கில் உகுத்த முத்துக்கள் சந்திரனைக் காட்டிலும் இருளைத் துரத்துகின்ற தன்மையுடையனவாக உள்ளன.

மேகத்தினிடமாயுள்ள இடிபோல (பூதத்தைக் காட்டி லும் முழக்கமிடுகின்ற) தொண்டகப்பறை ஒலி துயர் இயற்றுகின்றது. ஆளி, புலிகளைக் காட்டிலும் வலிபடைத்த நாய்களின் குரைப்பொலி உயிர்க்கு நடுக்கத்தைச் செய்கின்றது.

நல்ல தாயாரின் நஞ்சினும் கொடிய விழிகள் தூங்க வில்லை. ஊர் தூங்கவில்லை. தூங்கினாலும் அருகிலுள்ள அயலார் தூங்க மாட்டார்கள். தூரத்தில் உள்ளவர் தூங்கி யதால் யாது பயன்?

இப்படியே எண்ணி எண்ணி இரவு கழிகின்றது. சந்திரன் இனி வானத்தில் தோன்றிவிடுவான். இந்நிலையில் என் கள்வர் என் முலைகளைத் தழுவ வரமாட்டாரே! என்பது திரண்டபொருள்.

மணிமல்கு திரைத்திருப்பாற்
கடல்நடுவண் வரியரவின்
அணிமல்கும் அமளியின்மேல்
அறிதுயில்கொள் வுழிமதமா
அழுங்கஞர்கூர்ந்து அழைத்தகுரற்கு
அலர்மடந்தை முகுளமுலைக்
கொழுங்களபத் தினில்அழுந்திக்
குழைதிருமார் பையும்நெகிழ்த்துப்
பூங்கழல்வன் னிலத்துறைப்பப்
பொலந்துகில்சுற் றவிழஇருள்
தூங்குநறுந் துணர்க்குஞ்சி
சுவல்புரளத் துணைத்தோளால்
தாங்குகலு ழனைக்கொடுதாய்த்
தாய்இடங்கர் முரண்முருக்கித்
தேங்கமலத் தடம்புடைசூழ்
தென்னரங்கத்து அமர்ந்துளாய்.
(இது எட்டடித் தரவு)

ஆங்கும்

ஆன்ற கதிர்போன்று
        அணுக்கள்தொறும் வீற்றிருத்தல்
சான்றவர்மெய்ஞ் ஞானம்
        தரிப்ப உலகனைத்தும்
ஈன்றருள்நின் மாயை
        யினைத்தெருளா தேஇறப்பை
தோன்றுவைநீ என்பதுஎவன் சொல்.

கற்பனசால் கோதமனார்
        கற்படிவம் கைக்கொண்டாள்
சற்படிவம் ஆகியதைத்
        தாள்தா மரைதருதூள்
பொற்படிவம் செய்ததுறார் போன்ம்.

முருந்தின் நகையாள்
        முறுவலிப்பப் பூந்தாள்
இருந்தை யதனை
        இளவரச தாக்கிப்
பொருந்த அளித்ததுஉறார் போன்ம்.

அஃதான்று

அணங்கொருத்தி தன்னை
        அளித்திளன என்னால்
தணந்தவன்நிற் கென்னத்
        தணந்தவளை நோக்கப்
புணர்ந்தவரே அல்லாதுஅப்
        புண்ணியன்கா ணாதது
உணர்ந்திலரோ மூடம்உணர்ந் தோர்.

காத்தலால் உந்திக்
        கமலமலர் அண்டமெலாம்
பூத்த திறம் அறியார் போன்ம்.
(இவை ஐந்தும் கொச்சகம்)

(தொடரும்)

# பன்னிரு பாட்டியலும் ஆழ்வார்கள் அருளிச் செய்த அந்தாதி மற்றும் மடல் இலக்கியங்களுக்கான இலக்கணங்களும்

இதழ் 162இன் தொடர்ச்சி. ஆசிரியர்: திரு. ம.பெ.சீனிவாசன்.

சிவஞானபோத முதற் சூத்திரம் இறைவனை, 'அந்தம் ஆதி' எனக் குறிக்கின்றது. இக்குறிப்பு எச்சமயத்தார்க்கும் உடன் பாடான ஒன்றேயாகும். ஆதலின் இறைவனைப் பாட அருளாளர்கள் அந்தாதி இலக்கியத்தைத் தேர்வு செய்ததிலும் ஒரு பொருத்தம் காணப்படுகிறது. ''... அந்தாதிக்கு ஒரு பிரத்தியேக அழகு இருக்கிறது. ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதியை யாம்பாட வென்றே பிறந்த வகையோ என்று தோன்றுகிறது'' என்னும் பிரேமா நந்த குமாரின் கூற்றும் இதனை வலியுறுத்துகின்றது.

## 'ஆசார்ய' அந்தாதிகள்

இறைவனை மட்டுமின்றி இறைவனைக் காட்டும் ஆசாரியனைத் துதிப்பதற்கும் இவ்வந்தாதி ஏற்றதாகக் கொள்ளப் பெற்றது. இவ்வகையில் மதுரகவியாழ்வாரின் கண்ணிநுண் சிறுத்தாம்பு வழிகாட்டி ஆகின்றது. இது பற்றியே, மதுரகவியின் 'தொல்வழியே நல்வழி' என்றார் வேதாந்த தேசிகர். அந்த 'நல்வழி'யிலேயே இராமாநுசர் மீது அமுதனார் பாடிய, 'இராமானுச நூற்றந்தாதி' தோன்றியது. இது நூற்றெட்டுப் பாசுரங்கள் கொண்டது. ஆழ்வார் காலத்தினும் 'ஆசாரிய பக்தி' பதின்மடங்கு பெருகியதற்கு அடையாளமாகத் திகழும் நூல் இது. 'இராமாநுச நூற்றந்தாதி' வைணவத்தில் ஆசாரியனைப் போற்றி எழுந்த இரண்டாவது அந்தாதி ஆகலாம். ஈசுவரன், சேதனன் ஆகிய இருவர்க்கும்

ஆசாரியன் உபகாரகன் என்று குறிப்பிடுகின்றது ஸ்ரீவசன பூஷணம். எனவேதான் தெய்வத்தைப் போற்றும் திவ்வியப் பிரபந்தத்தில் ஆசாரியனைப் போற்றும், 'இராமாநுச நூற்றந்தாதி' இயற்பாவை அடுத்துச் சேர்க்கப்பெற்றது. ஆசாரியனைப் போற்றும் மற்றொரு நூல் கம்பரின் 'சடகோப ரந்தாதி'யாகும். இதனைப் பாடுதற்கும் அவர் மதுகவியாழ் வாரின் கண்ணிநுண் சிறுத்தாம்பையே வழிகாட்டியாகக் கொண்டார். கம்பர் காட்டிய வழியில் பின்னர் ஆசாரியனைப் போற்றியெழுந்த பிறிதொரு நூல் தண்டபாணி சுவாமிகளின் 'சடகோபர் சதக அந்தாதி'யாகும். வைணவத்தில் வடகலை, தென்கலைப் பிரிவுகள் ஏற்பட்ட பின்னர் அவ்வக்கலையின் தலைவர்களைப் போற்றி அந்தாதி நூல்கள் தனித்தனியே எழுந்தன. வடகலை ஆசாரியரான வேதாந்ததேசிகரைப் பற்றித் 'தேசிக நூற்றந்தாதி' என்னும் ஒரே பெயரில் இரண்டு நூல்கள் தோன்றியுள்ளன. தென்கலை ஆசாரியரான மணவாளமாமுனிகளைப் பற்றி அனந்தாழ்வான் என்பார் 'மணவாளமாமுனி நூற்றந்தாதி' என்றொரு நூல் பாடியிருக் கிறார். அஃது இந்நூற்றாண்டில் எழுந்ததாகும்.

வைணவத்தில் ஆசாரியன் அல்லது குருவைப் போற்றி இத்தகு அந்தாதிகள் எழுந்ததற்கும் ஒருவகைப் பொருத்தம் காணப்படுகிறது. குருபரம்பரைக்கு, இங்கு சிறப்பான இடம் உண்டு. அதனால் இறைவனும் ஆசாரிய நிலையை விரும்பியதாகக் கூறுவர். திருவடிசம்பந்தத்தின் மூலம் ஒருவர் விட்ட இடத்தினை மற்றவர் தொட்டுத் தொடர்கின்ற இடைவிடாத் தொடர்ச்சியைக் குருபரம்பரை பெறுகிறது. அதுமட்டுமன்றிச் சீடராயிருப்பவர் பின் குருவாவதும், குருவாயிருப்பவர் முன் சீடராயிருந்ததும் இக்குருபரம்பரையில் காணமுடிகின்றது. ஒரு பாட்டின் முடிவையே அடுத்த பாட்டின் தொடக்கமாகக் கொள்ளும் அந்தாதி அமைப்பை இது நினைவூட்டுகிறது. எனவேதான் வைணவர்களிடம் ஆசாரியனைப் போற்றும் இராமாநுச நூற்றந்தாதி போன்ற நூல்கள் சிறப்பிடம் பெறுகின்றன என்பர். மாலை போல் உள்ள, 'ஆசார்யரத்ன ஹாரம்' என்னும் குருபரம்பரை, அந்தாதி அமைப்புடன் ஒத்திருப்பதையும்



அவர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். இவற்றை நோக்க, அந்தாதி என்னும் இலக்கிய வகையினை வைணவர்கள் தம் தத்துவம் சார்ந்த கோட்பாட்டு அடிப்படையிலும் புரிந்து கொண்டனர் என்று அறியலாம்.

**மண்டலித்து வரும் அந்தாதிகள்**

இங்ஙனம் பாடப்பெறும் அந்தாதி நூல்களில் ஈற்றுச் செய்யுளின் அந்தமே முதற் செய்யுளின் ஆதியாக அமைய வைத்தல் மண்டலித்தல் எனப்படும். திவ்வியப்பிரபந்தத்தில் எட்டு அந்தாதிகள் இங்ஙனம் மண்டலித்து வந்துள்ளன. 'வையம்' என முடிகின்றது இரண்டாம் திருவந்தாதி. 'திருக்கண்டேன்' எனத் தொடங்கி, 'திரு' என முடிகின்றது மூன்றாம் திருவந்தாதி. 'நான்முகன்' எனத் தொடங்கி, 'நான்' என முடிகின்றது நான்முகன் திருவந்தாதி. 'பொய்ந்நின்ற' எனத் தொடங்கிப் 'பொய்ந்நிலத்தே' என முடிகின்றது திருவிருத்தம். 'முயற்றி' எனத் தொடங்கி, 'முயல்' என முடிகிறது பெரியதிருவந்தாதி. 'உயர்வற' எனத் தொடங்கி 'உயர்ந்தே' என முடிகிறது திருவாய்மொழி. 'கண்' எனத் தொடங்கிக் 'காண்மினே' என முடிகிறது கண்ணிநுண் சிறுத்தாம்பு.

நம்மாழ்வாரின் திருவாசிரியமும் பெரியாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகிய இருவரும் அந்தாதி அமைப்பிற் பாடிய திருமொழிகளும் மண்டலித்து வரவில்லை.

ஒரு செய்யுளின் அடிகளுக்குள்ளேயே அந்தாதித் தொடையமைப்பு முதலில் தோன்றிப் பின்னர்த் தொடர்ந்து செல்லும் அந்தாதிப் பாக்களாக வளர்ந்து, அதன் பின்னரே மண்டல அந்தாதிகள் தோன்றியிருக்க வேண்டும். இறுதிப் பாடலின் இறுதியும் முதற் பாடலின் முதலும் ஒன்றாக இணையும்படி மண்டலித்து மாலை போலத் தொடுத்து முடிப்பது என்பது, அந்தாதி மேன்மேலும் பெற்ற வளர்ச்சிக்கு அடையாளம் போல் உள்ளது. அதுமட்டுமன்றி, 'முடிவு' (அந்தம்) என்பதை விரும்பாத மனித மனம் அந்தாதியின் இறுதியில் உள்ள சொல்லை, நூலின் தொடக்கத்தில் உள்ள

முதற்சொல்லாகவே இருக்கும்படி பார்த்துக் கொண்டது. முடிவிலும் ஒரு தொடக்கம். இத்தகைய மனப்போக்கு மண்டல அந்தாதிகள் தோன்றியதற்குக் காரணம் ஆகலாம்.

**எண்ணிக்கையிலும் யாப்பிலும் முன்னோடியாய் அமைந்த அந்தாதிகள்**

திவ்வியப்பிரபந்த அந்தாதிகளின் பாடல் எண்ணிக் கையை நோக்கினால் அவை பதிற்றந்தாதியாகவும் நூற்றந் தாதியாகவும் (பதிற்றுப்பத்தந்தாதி) அந்தாதி ஆயிரமாகவும் பெருக்கல் முறையில் அமைந்த புதுமையைக் காணலாம். பதிற்றந்தாதி, நூற்றந்தாதி என்னும் பிற்கால வழக்குகள் முறையே பத்தும் நூறுமாக அந்தாதி அமைப்புக் கொண்ட செய்யுள் நூல்களைக் குறிக்கின்றன. இவைபோல ஆயிரம் பாடல்களைக் கொண்ட அந்தாதி நூலைக் குறிக்கும், 'பதிற்றுநூற்றந்தாதி' என்னும் சொல் தோன்றவில்லை. நம்மாழ்வாரின் திருவாய்மொழியைத் தவிர ஆயிரம் பாடல்கள் கொண்ட வேறு அந்தாதி நூல்கள் தோன்றவில்லையாதலால் அத்தகையதொரு சொல்லாட்சிக்கு இடமில்லாமற் போயிற்றுப் போலும்.

முதல் மூவரின் அந்தாதிகள் நூறு, நூறு பாடல்கள் கொண்டவையாயினும் அவற்றை நூற்றந்தாதி எனக் குறிக்கும் வழக்கு அந்நாளில் (நாதமுனிகள் நாலாயிரத்தைத் தொகுத்த போதும் அதற்கு முன்னரும்) எழவில்லை. 108 பாடல் களுடன் இராமாநுசர்மீது அமுதனார் பாடியஅந்தாதி, 'இராமாநுச நூற்றந்தாதி' என்று குறிக்கப்படுதல் சற்றுப் பிந்திய வழக்காகலாம்.

**யாப்பு வகை**

'அடுத்து, திவ்வியப்பிரபந்த அந்தாதிகளின் யாப்பு வகை கருதத்தக்கது. முதல் நான்கு திருவந்தாதிகளும் பெரிய திருவந்தாதியும் வெண்பா யாப்பின. திருவிருத்தம் கலித் துறையால் ஆனது. திருவாசிரியம் ஆசிரியப்பா; கண்ணி நுண் சிறுத்தாம்பு கலிவிருத்தத்தால் அமைந்தது.

(தொடரும்)



# கற்கோயில்கள் (கற்றளிகள்) பல்லவர் - பாண்டியர் காலக் கோயில்கள்

இதழ் 161இன் தொடர்ச்சி. ஆசிரியர்: கே.ஆர். சீனிவாசன்.

ஐந்தாவது, ஆறாவது வரிசைகளில் உள்ள சிற்பங் களும் எழுத்து விவரங்களும் மிக்க சேதம் அடைந்துள்ளன. கருங்களிற்றின் தலை போன்ற ஒன்றைக் கண்ட இரணிய வர்மன் அஃதென்ன வென்று கேட்பது போலத் தோன்றுகிறது. அதை இஃது கரிய யானையின் தலையன்று. பல்லவமன்னர் களுடைய மணிமுடியும் அரசுச் சின்னங்களும் என்று தரணி கொண்ட போசர் கூறி இரணியவர்மனுடைய குழப்பத்தைப் போக்கியது போன்று தோன்றுகிறது.

ஏழாவது வரிசையிலுள்ள எழுத்துக்கள் ''இரணியவர்ம மகாராசனும் தரணி கொண்ட போசரும் பல்லவ மன்னனைப் பார்த்து நீங்கள் மேற்செல்லலாம்'' என்று விடைகொடுத்த பிறகு தான் அமர்ந்திருந்த சிவிகையை விட்டிறங்கி இருவரையும் வணங்கி விடைபெற்றதைக் கூறுகின்றன எனக் கொள்ளலாம்.

எட்டாவது வரிசையில் காணப்பெறும் விவரம் பின்வருமாறு படிக்கப்பெற்றது. அங்கு நின்றும் போந்து பல கிரி, நதி, வன ககனங்களைக் கடந்து வருகின்றமை கேட்ட பல்லவாதி அரையர் எதிரே மகாபலத்தோடும் வந்த யானை ஏற்றிக் கொண்டு காஞ்சி மாநகரத்தருகில் மரிந்து போந்த இடம் இக்கல்வெட்டு வாசகத்தை ''பல மலைகளையும் ஆறுகளையும் நெருக்கமான காடுகளையும் கடந்து காஞ்சி புரத்திற்கு வந்த பல்லவ மன்னனைப் பல்லவாதி அரையர் ஒரு பெருஞ்சேனையோடு வந்து வரவேற்று யானைமீது ஏற்றிக் கொண்டு காஞ்சிப் பெருநகருக்குள் நடத்திச் சென்ற இடம்'' என முன்னர் விளக்கப்பட்டது. ஒன்பதாவது அணி வரிசையில் ''பல்லவ மன்னன் யானையின் மீது அமர்ந்து

**வருவதைக் கண்ட மகாசாமந்தர்களும் நகரத்தார்களும் மூலப் பிரகிருதியாரும் காடக முத்தரையரும் சேர்ந்து எதிர் கொண்ட ழைக்க எல்லோரும் நகருக்குள் புகுந்தனர்.''**

**பத்தாவது வரிசையில் பல்லவ மன்னன் அரண்மனைக் குள்நுழைந்த பிறகு மந்திரி மண்டலத்தாலும் (சேனைத் தலைவர்களும்) மகாசாமந்தர்களும் (சிற்றரசர்களும்) உபய கணத்தார்களும் (இரண்டு நாட்டைச் சேர்ந்த ஊர்க்காரிய நிர்வாகிகள்) கடிகையாரும் (ஊர்ச்சபையினரும்) சேர்ந்து பல்லவமன்னனுக்கு ''நந்திவர்மன்'' என்ற அபிஷேக நாமத்தைச் சூட்டி முடிசூட்டி விழாவும் நடத்தினர். அரசபதவிக்குரிய ''காரிவை'' என்ற அவனுடைய தேருக்கு வெண்கொற்றக் குடையையும், ''சமுத்திர கோஷம்'' என்ற சங்கையும் கட்வாங்கக் கொடியையும் இடப இலச்சினை யையும் அளித்து ''விடேல் விடுகு'' என்ற அரசாணை முத்திரையையும் அளித்தனர்.**

இதே காலக்கட்டத்தைச் சார்ந்த, காஞ்சியில் உள்ள ஏனைய கோயில்கள், அளவில் சிறியதான போதிலும் கட்டுமானக்கலை, கடவுட்படிமங்கள் ஆகியவற்றால் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. முக்தேஸ்வரம், மதங்கேஸ்வரம், ஐராவ தேஸ்வரம், வாலீஸ்வரம், இராவதனேஸ்வரம், பிரவதனேஸ்வரம் ஆகிய கோயில்கள் ஆகும். பெரிதும் மணற்பாறைகளால் உருவாக்கப்பட்டுள்ள இக்கோயில்களின் அடிப்பகுதியும் அதிஷ்டானத்தின் மேற்புறமும் கருங்கற்பாளங்களால் உருவாக்கப்பட்டுள்ளன. கோயிலின் தோற்றத்தைப் பெரிதாக்கிக் காட்ட கிழே உப்பீடமேடை சேர்க்கப்பட்டிருந்தால் அதுவும் கருங்கற்பாறையால் ஆக்கப்பட்டிருக்கும். இவையாவும், சதுர அமைப்புடைய விமானங்களையும் எண்ணிக்கை வேறுபடும் தளங்களையும் கொண்ட கலப்பு வகையாகும். செயற்படாத நிலையிலுள்ள மேற்புறத்தளங்கள், கீழ்த்தளங்களின் பிரஸ்தாரத்தின் ஹாரங்களின் மீது மிக அணுக்கமாக அமைக்கப்பட்டுள்ளதுடன், கிரீவம், சிகரம் பகுதியில் பல்வேறு வகையான அமைப்புக்களைக் கொண்டுள்ளன. இராவத னேஸ்வரம், திரிபுரந்தாகேஸ்வரம் ஆகிய இருகோயில்களும் இருதளங்களாலான, முழுவதும் சதுர அமைப்பிலானவை.



இவற்றின் கிரீவமும் சிகரமும் சதுர அமைப்பிலுள்ளதால் இவை நாகர வகையின. மூன்று தளங்களை உடைய மதங்கேஸ்வரர் கோயிலும், முக்தேஸ்வரர் கோயிலும் சதுர அமைப்பிலான தளங்களையும் வட்டவடிவமான கிரீவம், சிகரம் இவற்றையும் கொண்டிருப்பதால் வேசர வகை சார்ந்தவையாகும். இருதளமுடைய பிரவதனேஸ்வரம், மூன்று தளமுடைய வாலீஸ்வரம் கோயில்களின் தளங்கள் சதுர வடிவிலும், கிரீவமும் சிகரமும் எண்கோண அமைப்பிலும் காணப்படுவதால், அவை திராவிட வகையைச் சார்ந்தவை. ஐராவதேஸ்வரம் கோயிலின் மேற்கட்டுமானம் சிதிலமாகிவிட்டது. திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருப்பத்தூரில் உள்ள கைலாசநாதர் கோயில் மணற்பாறை யாலான மிகப்பெரிய விமானத்தையுடையது. காஞ்சியிலுள்ள கைலாசநாதர் கோயிலைப் போன்றது இது. கி.பி. எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்த இக்கோயில், பல்லவ மன்னர்களின் நயமான விமான அமைப்பிற்குச் சிறந்த சான்றாகும்.

இரண்டாம் நந்திவர்ம பல்லவ மன்னனின் நீண்ட ஆட்சிக்காலத்தின் மையப்பகுதிக்குப் பின்னர், கி.பி. 8 ஆம் நூற்றாண்டின் இறுதியில், முழுவதும் கருங்கற்களால் கோயில்கள் கட்டப்படலாயின; கருங்கற்களின் வார்ப்பாகவும், செதுக்கியும், சிற்பங்களாகியும் இக்கோயில்கள் அமைந்தன; இரண்டாம் நந்திவர்ம பல்லவனைப் பின்தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பேற்ற தந்திவர்மனின் ஆட்சிக்காலத்தில் உருவான காஞ்சி வைகுந்தப்பெருமாள் கோயில், செங்கற்பட்டு மாவட்டம் உத்தரமேரூர் சுந்தரவரதப்பெருமாள் கோயில் ஆகியவற்றில் கருங்கல்லாலான அதிஷ்டானம் காணப்படுகிறது. ஏனைய சிறிய கோயில்கள் சிலவற்றிலும் இப்பண்பைக் காணலாம். வைகுந்தப்பெருமாள் கோயிலில் மாடங்களில் சுதையாலான உருவங்கள் இடம்பெற்றுள்ளன. சுந்தரவரதப்பெருமாள் கோயிலில் பாளக்கல் புடைப்புச் சிற்பங்கள் காணப்படு கின்றன.சுந்தரவரதப்பெருமாள் கோயிலில் கல்லாலான அதிஷ்டானத்தின் மீது மூன்று தளங்கள் செங்கற் கட்டு மானங்களாக உள்ளன. மூன்று தளங்களும் செயற்பாட்டில் இருக்கும் தனித்தன்மைமிக்க இக்கோயிலில் மூன்று தள கருவறைகளிலும் விஷ்ணுவின் நின்ற, இருந்த, கிடந்த

திருக்கோலங்கள் காணப்படுகின்றன. இரண்டு கீழ்ப்புற தளங்களின் தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய மூன்று பக்கங்களிலும் ஒட்டியதாக உள்ள சிறிய கருவறைகளில், விஷ்ணுவின் ஏனைய ஆறு முதன்மை வடிவங்களான, சத்யமூர்த்தி, அச்சுதன், அநிருத்தன், நரநாராயணன், நரசிம்மமூர்த்தி, வராகமூர்த்தி, ஆகியன உள்ளன. மேலே குறிப்பிட்ட விஷ்ணுவின் மூன்று திருக்கோல மூர்த்தங்களும் இந்த ஆறும் சேர்ந்த ஒன்பது மூர்த்தங்கள் அல்லது நவமூர்த்திகள் வைகானச ஆத்ம விதிகளுடன் இயைந்து வருகின்றன. இந்த இரண்டு கோயில்களும் தென்னார்க்காடு மாவட்டம் திருவதிகையிலுள்ள அளவில் பெரியதும் நன்கு புதுப்பிக்கப்பட்டதுமான செங்கல்லாலான கோயிலும் நமக்கு ஓர் உண்மையைப் புலப்படுத்தி நிற்கின்றன. கல்லாலான அதிஷ்டானத்தின் மீது செங்கல் கட்டுமானக் கோயில்களாக இவை உள்ளன. கல்லில் என்னதான் சாகசங்கள் நிகழ்த்தினாலும் செங்கல்லும் மரமும் தொடர்ந்து பயன்பாட்டில் இருந்துவந்துள்ளன என்பதையும் அளவில் பெரிய கட்டுமானங்களில் இந்த ஆற்றல் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டது, போற்றப்பட்டது என்பதையும் அறிகிறோம்.

திருச்சி மாவட்டம் ஸ்ரீனிவாசநல்லூர் கோரங்கநாதர் கோயில், கும்பகோணம் நாகேச்வரர் கோயில், புஞ்சை நற்றுணை ஈச்வரர் கோயில், புள்ளமங்கை பிரம்மபுரீச்வரர் கோயில் ஆகிய, காலத்தால் முற்பட்ட சோழர் கோயில்களும் இவ்வாறே முழுவதும் கற்களாலான, சிற்பங்களுக்குப் பெயர் போன ஏனைய பழமையான கோயில்களாகும். இவற்றில் இடம் பெற்றுள்ள ஆண், பெண், மனித சிற்பங்கள்கூட அருள் பொழியும் நேர்த்தியுடன் செதுக்கப்பட்டுள்ளன. கி.பி. 1000 ஆண்டையொட்டி முன்னும் பின்னும், நூறுக்கணக்கான இத்தகைய கற்றளிகள் தமிழ்நாடெங்கும் கட்டப்பட்டன. முற்காலத்தில் செங்கல், மரம் கொண்டு கட்டப்பட்ட கட்டுமான அமைப்புகளை மாற்றியும், சைவ, வைணவ அடியார்களான நாயன்மார்களாலும் ஆழ்வார்களாலும் பாடப் பட்டு புனிதம் பெற்ற இடங்களில் நினைவு போற்றுவதற் காகவும் இவை கட்டப்பட்டன. (தொடரும்)



# திருவேங்கடவன் உலா

ஆசிரியர்: தி.பொ. பழனியப்ப பிள்ளை.(பதிப்பாசிரியர்-1950ஆம் ஆண்டு திருவேங்கடவன் கீழ்க்கலை ஆராய்ச்சிக்கழகம் பதிப்பித்த நூலில் அமைந்துள்ள குறிப்புகள்.) இதழ் 162இன் தொடர்ச்சி.

*58. நகமிதுன தேசமே நண்ணினோ னாத*
*மிகுமிதுனத் தோன்றுய்ய மேகஞ் - சுகமிகுத்த*

(இடபநகம் - இருஷபகிரி. மிதுனம் - இரட்டை.

**குறிப்பு:** மேற்கண்டவாற்றால் சோதிட நூற்பெயர்கள் சிலவற்றைத் தொனிக் குறிப்புடன் பழமையான உலாப் பிரபந்தம் ஆகிய திருவானைக்காவுலாவில் அதனை இயற்றிய காளமேகப் புலவர் கையாண்ட முறை சிறந்து தோன்றியமை கண்டு பிற்காலப் புலவர் பலரும் அங்ஙனம் சில தொனிக் குறிப்புகள் தோன்றுமாறு செய்துள்ளார்கள். அந்த வகையில் இவ்வுலாப் பிரபந்தகாரரும் நட்சத்திரப் பெயர்களை மட்டும் தொனிவகையிற் காட்டியிருத்தலைப் பிற்காலத்தார் கண்டு பிற சோதிடப் பெயர்களாகிய இராசி, வாரம், மாதப் பெயர்களையும் தொனிக் குறிப்புடன் தோற்றுவிக்கக் கருதிப் பின்னுள்ள கண்ணிகளைச் செய்து இயைத்தனர் போலும். அவர் யாப்புநெறி நன்குணராக் குறையால் இக் கண்ணிகளுள் பல தளைசிதைய அமைந்துள்ளன. நூலாசிரியரின் சிறந்த வாக்குடன் இடைச் செருகலாக இவை அடைந்த தன்மை இவற்றின் பொருட் சிறப்பில்லா நடையானும் காணலாம். திருவானைக்கா வுலாவில் சோதிட நூற்பெயர்கள் தொனிவகையால் வந்தமை கீழ்க்காட்டும் கண்ணிகளிற் காண்க.

அஉ(82). ................................ தக்கதிரு

*“வாதிரையான் மூலமறை யத்தத்தான் மகத்தா*
*னோதமெறி நாகைக்கா ரோணத்தான்-சோதியான்*

கெச்சைதனி லாடியான் கேதகையொன் றாவணியா
னச்சமனை யன்று புரட்டாசியான்-பிச்சை
யடர்ந்திட்ட மாமுனிவ ராச்சிரமந் தோறும்
படர்ந்திட்ட மையற் பசியான்-கொடுங்கூற்
றெடுக்கைக் குவந்துபிறந் தேங்காத் திகையான்
கடுக்கைத் தொடைமார் கழியான் - பொடிச்சுதையான்
வன்னி வளர்க்குஞ்சோ மாசியான் வஞ்சகமே
பன்னு மவர்நெஞ்சத்தற் பங்குனியா-னன்னீராற்
றீவணத் தங்குஞ் சித்திரையான் சிறுவனையாழ்
காவணத்தி லேனோர் வைகாசியான்-மூவரைவிட்
டப்புரத்தா னார்க்குமளித்த வுயிரானி யான்''.

இங்ஙனமே சிறுபுலியூர் உலாவினும் ஒரு பகுதி வந்துள்ளமை காண்க.

ருங(53)''பன்னகத்தி லாடியான் பண்டுமெமக் காவணியான்
பொன்னனுடல் கீண்டு புரட்டாதியான்-முன்னுலகுண்
கொள்ளைப் பசியான்வெங் கூற்றினடங் கார்த்திகையான்
வள்ளத் தனத்திருவை மார்கழியா-னுள்ளினரை
மீண்டுடம்பு தையான் விதிமறைக்கு மாசியான்
பாண்டவர்போரிற்காண்டீ பங்குனியான்-வேண்டினோர்
தஞ்சித் திரையான் றமிழ்மறை வைகாசியான்
அஞ்சப் புகும்வினைக்கோ ரானியான்''

59. கற்கடகம் வந்தொன்றக் கற்கடகம் போந்தொன்றக்
கற்கடகம் சேர்ந்த காத்தினான்-கற்கடகன்

60. சிங்கக் கொடியோனைச் சின்னபின் னஞ்செய்தோன்
சிங்கமலை மேவுநர சிங்கஞ்-சிங்கத்தி

61. லேறுகன்னிக் கேதிகிரி யீந்தோ னிலக்குவனைக்
கூறுகன்னி யாகுமரி கொள்கின்றோன்-வீறுகன்னி

62. மாடத் துலாவுகின்ற மாதுபொருட் டால்வாளி
சூடத் துலாக்கடலைத் தூர்த்தோன்-தாடகையாம்

63. விருச்சிகத்துக் கொப்பான வீணிதலை பேய்போல்
விருச்சிகத்தை வேவ விடுத்தோன்-விருச்சிகத்துத்



64. தனுசுபடர் நெஞ்சுபோற் றண்ணந் துழாயான்
தனுசுபடா வின்பிற் றரிப்போன்-தனுசுவத்தின்

65. மகரகுண்ட லத்தான் மாமகர வாருதியின்
மகரரைவென் றோனைவென்ற மாயன் - மகுடங்கள்

66. கும்பங் குடங்கரிணைக் கொங்கையரைக் கூத்தாட்டுங்
கும்பறி கும்பன்விழக் கோவித்தோன்-கும்ப

67. கருணன் றலையைக் கடன்மீனங் கவ்விக்
கருணமிடத் தூண்டும் கணையான - கருணையா

68. லாதித் தனைச்சசியை யங்கா ரகன்றன்னைப்
போதித்த நம்புதனைப் பொன்னவனை-வாதித்த

69. வெள்ளி தனைச்சனியை வெட்டுண்ட துட்டர்தமைத்
தள்ளி விடவே சலிகைதந்தோ-னொள்ளிய

70. சித்திரை தானென்றோன் தேவா திபதேவன்
சித்திரைதா னென்றோரைச் சீறுவோன்-சித்திரையாய்

71. வையாசி கூறு மறையோர்கள் சிந்தனையே
வையாசி யீந்த வரதன்-வையகான்

72. றானிய மத்திடவே யாகு கசடர்களுக்
கானிய மத்தை யறிவிப்போன்-நானிலமே

73. லாடி வராதிருந்தா லாகா தெனத்தள்
ளாடிவர வேயரவி லாடிவந்தோ - னாடிபா

74. லாவணியைக் கூடாம லாகவரை யேந்தினோ
னாவணியி லோசைதனி லாசையா-னாவணியில்

75. வந்தபுரட் டாதியெல்லா மாற்றுவோன் வீடணனை
வந்தபுரட் டாதிலங்கை வைகென்றான்-வந்துபுர

76. மற்பசித்த பேர்களை யாரெவரென் றன்னமிட்டா
னற்பசிக்குந் தீங்குக் கணுகாதோ-னற்பசிக்குஞ்

77. சிந்தியா னோகார்த் திகையார்க்குச் செல்வமே
பந்தியாக் கார்த்திகைக்கா பாலியா-னிந்தையாய்

78. மார்கழியா மாலை மணிமாவு ளான்மங்கை
மார்கழியா தெய்யு மகன்றாதை-மார்கழியா

79. மாத்தையி லேமலைவான் வானெறியே நேயனுக்கு
மாத்தையிலே சொர்க்கம் வழங்குவோன்-மாத்தையிலே

80. மாசியா வேத வழியா மகம்புரிசோ
மாசியாம் வேதன் வணங்குவோன்-மாசிமாப்

81. பங்குனிக்குப் பிஞ்சு பலிக்குங் குருநாடு
பங்குனிக்கச் சொன்ன பரந்தாமன் - பங்குநனைத்

(பரந்தாமன் - விஷ்ணு. பங்குநன் - அருச்சுனன்.)

82. தேரிருக்கச் சொல்லிச் செலுத்தினான் தேவருக்குப்
பாரிருக்கச் சொல்லிப் படிவித்தோன்-தாரிருக்குஞ்

(இவ்வடி திருமால் அருச்சுனனுக்குத் தேர் செலுத்திப் பார்த்தசாரதி எனப் பெயர் பெற்றமை கூறுவது. தார் - மாலை.)

83. செப்போ டிருக்குந் திருவிருக்கு மார்பினோ
னெப்போது மென்னெஞ் சினிலிருப்போ-னப்பேழுங்

(செப்பு - பூப்பேழை. திரு-இலக்குமி. அப்பு - நீர். அப்பு எழும் - ஏழு கடலும்.)

84. காயத்தா னெய்தகருங் காயத்தான் மேலையா
காயத்தா னாயேன்ச காயத்த-னாயிரநா

(காய - நீர்வற்ற. கருங்காயத்தான் - கரிய திருமேனி யுடையான். இவ்வடி முதல் சொல் மடக்கு வருதல் காண்க. மேலை ஆகாயத்தான் - வைகுண்டம். நாயேன் சகாயத்தான் - அடித் தொண்டனாய எனக்கு உதவியாளன்.)

(தொடரும்)



# நெல்லி நகர் அருளாளதாசரின் பாகவதம்

இதழ் 161இன் தொடர்ச்சி. ஆசிரியர் மு. அருணாசலம்.

*(இதுகாறும் நெல்லைநகர் அருளாளதாசரின் பாகவதம் என்று தலைப்பிடப்பட்ட கட்டுரையினை இனிமேல் நெல்லி நகர் அருளாள தாசரின் பாகவதம் என்று திருத்தி வாசித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.)*

கைவளைகள் கலகலென ஆடீரூசல்
காலிலணி சிலம்பார்ப்ப ஆடீரூசல்
மொய்யணி ஐம் பாலிலெழ ஆடீரூசல்
மூவுலகில் நிகரில்மின்னே ஆடீரூசல்
மெய்யுரைசெய் நாவுடையீர் ஆடீரூசல்
விதர்ப்பனருள் மெல்லியலீர் ஆடீரூசல்
பையரவில் நடித்திடுவான் தேவியான
பங்கயமேற் பசுங்கிளியே ஆடீரூசல்

திருமணம் முடிந்த பிறகு, கண்ணனும் உருக்குமிணியும் ஊசலில் அமர்கிறார்கள். அந்த இடத்தில் ஆசிரியர் எட்டுப் பாடல்கள் கொண்ட ஓர் ஊசல் பிரபந்தமே பாடுகிறார்.

நீலமணி யொடுமாலின் மணியு மாட
நித்திலத் தாமமுமாட நிறைந்த பூவின்
மாலைகளும் அசைந்தாட வண்டுமாட
மருங்கெழின்மே கலையாடக் குழையு மாட
வேல்களெனும் விழிகுழையோ டாடக் காதின்
விளங்குதிருக் குண்டலமும் தோடு மாட
ஆலினமர் பழம்பொருளே ஆடீரூசல்
அழகுசெறி உருக்குமிணி ஆடீரூசல்

அடுத்த ஏழு பாடல்களில் ஊசலாடினார்கள் என்றே சொல்கிறார். பின்னும் சத்தியபாமை திருக்கல்யாணம் முதலான இடங்களிலும் ஊசலாடினார்கள் என்றே சொல்லிக் கொண்டு போகிறார்.

பள்ளி எழுச்சியும் இதுபோல, பாற்கடலில் பள்ளி கொண்டு யோகத்துயில் புரியும் பரந்தாமனை இந்திரன் முன்னிட்ட தேவர்கள் சென்று வணங்கித் துயிலெழுப்புகிறார்கள். இவ்விடத்து ஆசிரியர் பத்துப்பாடல் கொண்ட ஒரு பள்ளி எழுச்சிப் பிரபந்தமே பாடியிருக்கிறார். இங்கு கூர்மம், ஆதிமூலம், மீனம், வராகம், நரசிங்கம், வாமனன், இராமன், கண்ணன் ஆகிய அவதாரங்களை முறையாகப் பாடுகிறார்; பல இடங்களிலும் இவர் கூறும் குறிப்பால், கஜேந்திரனுக்கு அருள் செய்து வந்த ஆதிமூலத் தோற்றத்தையும் ஓர் அவதாரமாகவே கருதினார் என்று தெரிகிறது.

*வெற்பினைக் கடைமத்தென வேலையுள் நிறுவிச்*
*சற்பம் வண் கயிறாகிடக் கடைந்தமிர் தத்தை*
*அற்ப மாமசுரர்க் கிடாதெமக் குவந் தளித்த*
*அற்புதா அமலா பள்ளி புணர்ந்தரு ளாயே.*

மண நிகழ்ச்சிகள் மிகவும் அதிகமாக வருகின்றன என்று குறிப்பிட்டோம். முதலாவதாக வசுதேவர் தேவகியை மணம் புரிவதிலிருந்து வாணாசுரன் மகள் உடாங்கனையை (உஷையை) அநிருத்தன் மணம் புரிகிறவரையில் சொல்லப் பட்ட பதினைந்து திருக்கல்யாணங்களிலும் மாலையிடுதல், கனலிடை ஆகுதிகள் சமித்துடன் நிரைத்தல், மங்கல நாணினைப் பூட்டுதல், பொரி அக்கினியிற் பெய்தல், அம்மி மிதித்தல், அருந்ததி காட்டல் என்ற சடங்குகளைத் தவறாது குறிப்பிடுகிறார்.

*அங்கியின் னிறை யாகுதி பெய்தனர்*
*சங்குபேரி கழன்றிடச் சாகைமா*
*நங்கை நப்பினை நற்கந் தரத்தினிற்*
*செங்கை மங்கல நாண் செறித் தானரோ.*



*மற்று மாகுதி செய்து வலமுறச்*
*சுற்றித் தேயுவைத் தாய் மலர்த் தாளிறை*
*பற்ற அம்மி மிதித்துப் பல் லாண்டெழ*
*உற்று நோக்கினர் உம்பர் அருந்ததி.*

மற்றுமோரிடமும் குறிப்பிடுவோம். கண்ணன் மகனான சாம்பன் துரியோதனன் மகள் இலக்கணையை மணம் புரிகிறான். அந்த இடத்தில் ஒரு பாடல்:

*அருமறை யவர்களெல்லாம் ஆகுதி செய்யச் சாம்பன்*
*தெரிவைதன் கந்தரத்திற் சிறந்தமங் கலநாண் சாத்தி*
*அரிவைதன் னுடனே தீயை வலம்வர அம்மி மீதின்*
*மருவமர் குழலி காலால் மிதிக்கவான் வடமீன் கண்டார்.*

சில இடங்களில் படலமுடிவில் பல சுருதியும் சொல்கிறார்.

பாகவத புராணம் கண்ணன் வரலாற்றைக் கூறும் முகத்தால் திருமால் பரத்துவம் கற்பிக்க எழுந்தது. ஆதலால் சிவபிரானும் திருமாலைத் துதித்தார் என்று கூறுவதே இதன் இயல்பு. இந்த இயல்பைப் பல இடத்தும் காண்கிறோம். சிவபெருமான் தம் முன் தோன்றிய அரியைப் பன்னிரு நாமமும் சொல்லித் துதித்தல்:

*கேசவ நாமவே நாரண நமவே*
*கிளரொளி மாதவ நமவே*
*மாசறு சுடர்க்கோ விந்தனே நமவே*
*வண்மைசேர் விண்டுவே நமவே*
*ஏசற உயர்ந்த எழிலுறு மதுசூ-*
*தனநம இடரினை யகற்றும்*
*தேசுறு திருவிக் கிரமனே நமவே*
*சிறந்திடும் வாமனா நமவே.*

பல இடங்களிலும் சிவபெருமானைக் குறிப்பிடும்போது, முறையாக ஆகுவாகனன், தோகை மாமயிற் சண்முகன், கணங்கள் முதலியன தவறாது குறிப்பிடுகின்றார். பின்னர் பஸ்மாசுரன் என்னும் வருகாசுரனுக்குப் பரமேசுவரன் 'நீ யார்

தலையில் கை வைத்தாலும் அவர் அழிவர்' என்று வரங் கொடுக்கவும், அவன் அவர் தலையிலேயே கைவைக்கப் பார்க்கிறான். அவர் ஓடவும், திருமால், அங்கு தோன்றி அவன் தன் தலையிலேயே கைவைத்து அழியும்படி செய்து 'மருளனாகிய அசுரனுக்கு இவ்வரம் அருளவே அவம்' என்று அறிவுறுத்துகிறார்.

அம்பிகா வனப் படலத்தில், அம்பிகையை நந்த கோபன் முதலான யாதவர் சென்று வழிபடுவதைச் சொல்லும்போது விநாயகரையும், சண்முகரையும் குறிப்பிடு கிறார். அங்கு அம்பிகை பாகன் ஆலயமும் உள்ளது என்கிறார். இதுபோலவே, நாச்சியார் தேறேறு படலத்தில், கண்ணன் வராதது கண்டு உருக்குமிணி அம்பிகைக்கு அருச்சனை செய்து வேண்டுகிறாள். அம்பிகையை அங்கு துர்க்கை என்று கூறுகின்றார்.

தட்சகப் படலத்தில், அரி அரனுடனே, 'உன்னை எள்கினரேல் என்னையும் அகற்றினராம். உன்றனைத்தான் யானென உணரார் சாந்தியை உறார்' என்று ஓதுகிறார். கயிலாச யாத்திரைப் படலத்தில் அரி அரன் இருவரும் ஒருவரையொருவர் துதித்துக் கொள்வது காணத்தக்கது.

*வரையினைத் தனுவாய் வளைத்தருள் முதல்வா*
*நம, உனை மதிக்கிலா அசுரர்*
*திரிபுர மெரித்த சிவநம, இந்து*
*திகழ் கின்ற வேணியாய் நமவே,*
*கரியுரி தனைப் போர்த் தருளுவாய் நமவே*
*கறை மிடற் றிறைவனே நமவே,*
*அரகரா நமவே, பசுபதி நமவே,*
*அந்தகாந் தகநம என்றான்.*

சிவபிரான் திருமாலைத் துதித்தது 'கேசவ நமவே' என்ற பாடல் முன்னே காட்டப்பட்டது. மேலும், சிவபிரான் வருணனையைக் கூறும்போது இவர் சைவ சம்பிரதாயம் முழுமையும் தழுவியே பாடுகிறார். (தொடரும்)

## One Day National Seminar on 'An Interdisciplinary Study of Tulasi on 20.12.2012. At the Academy of Sanskrit Research Melkote.

மேலக்கோட்டை திருநாராயணபுரத்தில் இயங்கிவரும் ஸம்ஸ்கிருத ஆராய்ச்சிக் கழகத்தின் ஆதரவில் ‘துளசி’ என்ற தலைப்பில் ஒரு நாள் மகாநாடு ஒன்று நடைபெற்றது. கீழ்க் கண்ட தலைப்புகளில் அறிஞர்கள் பலர் உரையாற்றினர்.

1. "Strategies for conservation Tulasi" - a case study - Dr. Sundararajan, Bangalore.
2. "Tulasi and Ayurveda" - Dr. Umashankar, Mysore.
3. "Tulasi-its Botany and folklore" - Dr. S.N. Ramasamy, Mysore.
4. "Medicinal aspects of Tulasi" - Dr. Gurubasavaraj, Mysore.
5. "Ethonobotanical aspects of Tulasi" - Dr. Sudarshan, Mysore.
6. "Aspects of Tulasi in Vaikhanasa Agama" - Dr. Ranganatha, Tirupati.
7. "Tulasi - an Appreciation in Tamil - hymans of Alwars" - SrivaishnavaSri A. Krishnamachari - Srirangam.
8. "Diversity in Tulasi" - Vid. Umakanta Bhatta, Melkote.
9. "Tulasi in Purana" - Dr. Chakravarthi Ramachandran, Mysore.
10. "Tulasi Prabhavah" - Dr. Sampathkumaran, Bangalore.
11. "Aspects of Tulasi in Pancharatra Agama" - Sri Krishnan, Research Scholar A.S.R. Melkote.

Sri:

# "Tulasi - an Appreciation in Tamil - hymans of Alwars"

## Paper presented by Sri Vaishnava Sri A. Krishnamachari (Editor Panchajanyam) at the seminar on Tulasi in the Academy of Sanskrit Reserch - Melkote on 20.12.2012.

### Tulasi the sacred plant:

In Indian Cultural tradition Tulasi plant is considered as the most sacred plant. It is stated to have been originated from the tears of joy of Dhanvantari when he arose with the pot of nectar from the ocean at the time of the churning. This metaphor indicates its medical value. It is further strengthened by the belief that all deities, all rivers and all holy places are present in it. Our ancient scriptures have heralded the importance of Tulasi, so also the Azhwars in their hymns.

This plant takes minimum water and grows by drawing a variety of essential minerals and supplies them in an assimilable form to mankind. It has the positive manifestations and it is this which has perpetuated from generations to protect our environment and has been imbibed into the Indian culture as a heritage and tradition. It creates life for other plants, animals and for man. This plant Tulasi is a saviour of both environment and mankind.

### Tulasi and its varieties:

Ocimum sanctum (Tulasi) is perhaps the most com-



mon and most revered of all household plants in India. Its leaves, seeds and whole plant is useful. It attains a height of about 75 to 90 cm when mature. These are aromatic because of the presence of a kind of scented oil in them. A variety of Tulasi with green leaves in called Shri Tulasi and one with reddish to brown leaves is called Krishna Tulasi. Tulasi flowers are small and tiny being purple or reddish in colour. These arise in small compact clusters on cylindrical spikes. The fruits are small and the seeds are yellow to reddish in colour.

### Chemical constituents of Tulasi:

Thulasi leaves contain a kind of bright yellow volatile oil, which is useful against insects and bacteria. The principal constituents of this oil are Eugenol, Eugenol methyl ether and carvacrol (2- hydroxy-para-cymene). The oil is reported to possess anti-bacterial properties and acts as an insecticide. Tulasi also called Basil in English, the name of this plant literally means 'matchless'. The tulasi is believed to be Goddess Lakshmi's incarnation on earth.

### Tulasi's role in benefiting the mankind:

All parts of Tulasi are sacred including the soil. Nammazhvar in Thiruvirutham Hymn 53 states as follows.

**வாராயினமுலையாளிவள் வானோர்தலைமகனாம் ✸**
**சீராயின தெய்வநன்னோயிது ✸தெய்வத்தண்ணந்துழாய்த்**
**தாராயினும்தழையாயினும்தண்கொம்பதாயினும் கீழ்**
**வேராயினும் ✸ நின்றமண்ணாயினும்கொண்டு வீசுமினே.**

Tulasi Archana makes one to escape from the cycle of Birth and Death. Tulasi plants in front of the house protects one from Yama Kinkaras.

In daily pujas, archanam, naivedhyams, thirthams, festivals, carnivals and other ceremonies the use of Tulasi has been made compulsory. In addition, on such occasions they use Tulasi in their food products and necessarily one has to take one dhala in his thirtha prasadam. Thus, in day-to-day routine he gets Tulasi in his food, which directly or indirectly helps, in his blood-cholesterol management. Thus our sampradhayams have vital role in benefiting mankind and his survival.

**Divya Prabanda literature - the 4000 hymns of the Azhwars:**

Divyaprabandha literature of Azhvars is a perfect treasure trove of pious and philosophic thoughts, and of household hints on moral conduct and purity of life. Our countrymen in the North admittedly understand little or nothing of Visishtadvaita Philosophy and the scientific thoughts of South Indian authors, and their logical conception of Religion and path of Salvation; and our youth in the Tamil, Telugu and Kannada lands know even less than foreigners, and therefore need a stimulus to study the Hymns of Azhvars and Lyrics in praise of God, His Panchayuthas, and Tulasi.

**"Azhwars" - why they are called so?**

Azhwars are the supreme devotees of Lord Vishnu. They are foremost amongst the Sri Vaishnava teachers. They are overwhelmed by the desire for incessant communion with the Lord. They remain immersed in singing the divine glories of the Lord. The songs composed and sung by them is referred to as "Divya Prabhandam". There are in all 4000 songs - all in Tamil. These songs are a literary beauty and brings out effectively "Saranagathi approach" to God realisation. There are twelve (12) Azhwars who spread the cult of Vishnu Bhakti. Azhwars are considered to be incarnation of Nitya-suris in Vaikuntam.



Azhwars laid the foundation for the spread of the bhakthi movement in the south on the substratum of truths contained in Sruti, Smrithi, Ithihasas and Puranas in a medium that common people of the land could understand namely in Tamil. Hence the Divya Prabhandam is hailed as 'Dravida Vedam'.

The Azhwars popularised and expounded the Visishtadvaita system of thought. Their literary works were enshrined in the Nalayira Divya Prabandams which, as Sri Ramanujacharya emphasises, are regarded as equally important as the Sanskrit scriptures. Sri Vaishnavism can be called a tradition of spiritual enjoyment. The basis of the tradition is the Alwars enjoyment (anubhava) of the Lord. Secondly. there is the commentators, enjoyment of the hymns of the Alwars. The commentators did not consider their task of commenting a pedantic work, but rather the very embodiment of their own enjoyment, their commentaries in turn became a literature to be enjoyed by the subsequent generations. In the Sri Vaishnava tradition enjoyment of the Lord can also be a indirect enjoyment of Him throught the hymns of the Azhwars. The commentaries are testimonies of the spiritual experience of this tradition.

The Azhwars had great respect for the Upanishadic attainments of truth and indeed we could discover the several "vidyas" in the Hymns.

The individual contributions of the Azhwars cannot be really distinguished. We are in the presence of mystics whose consciousness does not work in compartments. A

new type of mind is at work. Their apprehensions of God or Man or Nature is of a different order. Being deep mystics they perceived God in all his quintuple aspects (Para, Vyuha, Vibhava, Antaryami, Archa forms of the Lord.) or statusses, and not one of them was capable of being perceived apart from the others. Every single hymn almost reveals this integral experience. Evidently this is a new experience to the world-conscionsness, something similar to the Vedic seers who saw all deities in the One - Ekam sat. The experience of the soul also is something that is unique - its separation from God and its unity with God are such as make the individual pass from the status of apparent separation to the union in all ways known to man - God's illimitabe Grace which permits and enjoment of Him by the Soul in all its parts and wholly is more suitable to the philosophy of Self or sarira-sariri relationship.

**Reference to Tulasi in the hymns of the Azhwars:**

There are references to Tulasi in the Divya Prabhandam in more than hundred hymns. Like the Panchayuthas of the Lord, the Tulasi is worn by the Lord at all times. Tulasi is adorning the crown of the Lord and also the Holy feet of the Lord.

Nammazhwar is celebrated as a saint in the Srivaishnava tradition primarily because of his writings. His is the largest share of the Nalayira Prabhandam, or the "Collection of Four Thousand". The Tiruvaymozhi is a long poem, consisting of eleven hundred and two stanzas.

**Mysticism of the Azhwars:**

Nammazhwar sometimes enjoys a kind of ecstasy in which he loses consciousness of his surroundings and is aware only of his love for God. The term "mystic", or



"mystical" has such a wide variety of uses in the history of religion especially in the hymns of Azhwars.

**Nammazhwar as a maiden, known as Parankusa Nayaki:**

In a large proportion of the Tiruvaymozhi the theme is that of a maiden whose love is frustrated by the absence of her lover who evidently is callously unaware of her suffering. The persona of these stanzas varies, and may be either the maiden Parankusa Nayaki herself, the mother or the close companion of the maiden. When the mother speaks she wonders why her daughter is acting so strangely. why she is so distracted she does not carry on her normal life, why she is wasting away; or she may know that it is the love of her daughter for Kannan that makes her act so, and wonders how relief from her suffering may be obtained; or she may pray that God will act to deliver her daughter from her anguish. The central figure in the love poems, however, is the young woman (nayaki) who fallen in love.

**Glorification of Tulasi in - Thiruvoimozhi 4-2:**

Thiruvoimozhi fourth centum second decad is one such mystical experience of Nammazhwar. While making an efrort to get others to turn to His Feet, the Azhwar himself got deeply involved in the Lord. He wanted to experience Him right away. He wanted to experience Him/His leelas in conditions prevailing in past periods and places. This desire took a turn into 'a separate condition' (Avastha). This led to Azhwar assuming 'Naayaki bhaava'. This Naayaki's behaviour, smitten with love, is described by her mother.

The naayaki remembers the scene of a small child lying in Kshiraabdhi on a banyan leaf with Tulasi maala decorating the child's Holy Feet; and she asks for that particular 'Tulasi maala' to be brought instantly. The mother says even the Lord Himself cannot get that 'Tulasi Maala' and that such a desire is the result of her (i.e. mother's) sins. The Azhwar also notices that the devotees like Brahma and Rudra have placed for Alankaaraa, the garlands of vedas; the Gopikas during Raasa Kreeda trampled on the Tulasi maala adorning His Holy Feet when the redolence (Pleasant smell) increased many fold; after killing seven bulls for marrying Nappinnai Piraatti, Krishna had danced (Ghata narthana) with tulasi malla cooling His Holy Feet; in Varahaavataara when the Lord saved Bhoodevi He was having Tulasi Maala at His Feet; the naayaki aspires for those Tulasi Maalas which even the Lord cannot obtain now.

The mother of Parankusa Nayaki says that she is 'finished' since she cannot get the Tulasi Maala which the Lord, adorned with Sri Mahalakshmi on the chest, is wearing on the Feet. This may be all right, but how can anybody accept or approve of her desire of getting that particular Tulasi Maala which Sri Rama was wearing when He consigned Mahalakshmi, Sita Devi, to Agni for a test. The mother is at a loss to understand her behaviour which she describes as unwise (without 'viveka') and as being due to separation from the Lord.

Thiruvaimozhi Fourth Centum, Second Decad (IV-2) (Palan ay, El ulaku untu)

In this decad, the Azhwar's God-hunger has lifted up its head once again, the recoiling, as it were, of the



Azhwar's advice to the worldlings on the Azhwar himself. Well, this is precisely what happened when Vibhisana advised Ravana. Vibhisana's advice, as we all know, fell on deaf ears but, at the same time, it led to Vibhisana himself getting into Sri Rama's camp. And then, take the case of Prahlada. The little lad's advice to an unresponsive and uncom promising fiend of a father (Hiranya) only tended to enrich the former's God-love. The Azhwar's God-love having been excited, he longs for the Lord's vision, as during His Avataras, in the days gone-by. So deep is his longing that the frustration resulting from its non-fulfilment renders the Azhwar insensate, like a female forsaken by her lover after their erstwhile union. The mother steps in, once again, to describe the critical condition of her daughter, the Parankusa Nayaki.

It is worth recalling, in this context, how Bhimasena prayed to Hanuman, when the former met the latter several thosands of years after Sri Rama had gone back to the Celestium, that Hanuman be pleased to exhibit the gigantic form he had assumed while flying across the ocean to get into Lanka. Well, Bhimasena a was not that ludicrous sort to ask for the impossible. Actually, he was well aware of Hanuman's great prowess and his ability to meet the demand in question.

Likewise, the Azhwar was also quite conscious of the Lord's capacity to take him through back periods, eutting across even the proverbially irretrievable past. This knowledge of the Azhwar, coupled with his irrepressible longing to enjoy the Lord's past Avataras, could very well form the background for this decad.

பாலனாய் ஏழுலகுண்டுபரிவின்றி ✸
ஆலிலைஅன்னவசஞ்செய்யும் அண்ணலார் ✸

தாளிணைமேலணி **தண்ணந்துழாயென்றே**
மாலுமால் ✸ வல்வினையேன் மடவல்லியே.

Palan ay, el ulaku untu, parivu inri,
alilai annavacamceyyum annalar
tal-inaimel ani tan am tulay enre
malumal-valvinaiyen mata valliye. (IV-2-1)

Alas! this fell sinner's tender daughter, like unto a creeprer young
Is madly in love with the Lord and keeps pinning
For the tulaci garland, cool and nice, on His feet worn,
When He, as a bebe, held in His stomach, the worlds seven,
With no effort, reposing on a Fig-leaf thin.

"It is amazing", the Mother exclaims, "that my daughter should pine, at this distance of time. for the Tulasi garland worn on the Lord's feet when He contained, in His stomach, all the worlds and reposed, as a tender babe, on a fig-leaf, floating on the vast expanse of water. Had the Lord gulped down the worlds as an adult, it might not agitate my daughter's mind so much.

She is indeed worried that He should have done it, as a mere babe, even as children are generally prone to gulp down the mouth constantly uttering the words, 'Tulasi, cool and lovely, at the feet of the Lord' confounded that she is with deep love but she longs to have it, right now. If a person comprehends as fire the lustre shed by a gem, should the heat of this imaginary fire be also felt? How strange is my daughter's stance indeed!"

வல்லிசேர்நுண்ணிடை ஆய்ச்சியர்தம்மொடும் ✸
கொல்லைமைசெய்து குரவைபிணைந்தவர் ✸
நல்லடிமேலணி **நாறுதுழாயென்றே**
சொல்லுமால் ✸ சூழ்வினையாட்டியேன் பாவையே.



valli cer nun itai-aycciyar-tammotum
kollaimai ceytu, kuravai pinaiantavar
nal atimel ani naru tulay enre
collumal-cul vinaiyattiyen pavaiye. (IV-2-2)

Ha! the statuesque daughter of this sinner dire
Always pines for the Tulasi fragrant, worn on the lovely feet
Of the Lord who (as Krsna) did around Him gather
The thin-waisted shepherdesses and on them unleash
Many a wily Prank and with them merrily danced.

It was a glorious, the night of nights, when the classical dance, known as 'Rasa Krida', in Sanskrit and 'Kuravai', in Tamil, took place in Vrindavan. Sri Krsna, assuming several forms, enchanting beyond description, danced in between one Gopi and another, His hands being locked up with theirs. Parankusa Nayaki now Pines for the fragrant Tulasi worn by the Lord on His feet at that time, being a legitimate aspirant, comparable to the Gopis in question. Perhaps, the gnostic mother had pointed out to the Nayaki that her pining for the Tulasi worn by the Lord during the great deluge as a measure of universal protection, in a remote Past, was not merely out of date but also out of place.

பாவியல்வேத நன்மாலைபலகொண்டு ✸
தேவர்கள்மாமுனிவர் இறைஞ்சநின்ற ✸
சேவடிமேலணி **செம்பொன்துழாயென்றே**
கூவுமால் ✸ கோள்வினையாட்டியேன் கோதையே.

pa iyal veta nal malai pala kontu,
tevarkal ma munivar irainca ninra
cevatimel ani cem pon tulay enre
kuvumai-kol vinaiyattiyen kotaiye. (IV-2-3)

This dire sinner's daughter, with locks lovely,
Pines for the pretty tulaci, like red-gold, at the Lord's feet comely,
(That spanned the worlds), adored by Devas and Sages great, Chnating the Vedas, set in metres apporpriate,
Like unto many a garland exquisite.

The Nayaki covets the Tulasi, worn at the feet of the lord. When He spanned the universe long, long ago and the great Sages and Devas worshipped Him with beautiful garlands, namely, the sweet metrical compositions of the Vedas. The Mother is indeed surprised that her lovely daughter of ravishing beauty, the garland coveted by the Lord Himself, should covet yet another garland.

கோதிலவண்புகழ் கொண்டுசமயிகள் ✸
பேதங்கள்சொல்லிப் பிதற்றும்பிரான்பரன் ✸
பாதங்கள்மேலணி **பைம்பொன்துழாயென்றே**
ஓதுமால் ✸ ஊழ்வினையேன் தடந்தோளியே.

kottu ila van pukal kontu, camayikal
petankal collip pitarrum piran, paran
patankalmel ani paim pon tulay enre
otumal-ulvinaiyen tatan toliye. (IV-2-4)

Ha! this terrific sinner's daughter, with shoulders fair,
Craves for the Tulasi, pretty like Gold, fresh and pure,
That decorates the feet of the Supreme Lord in heaven,
whose traits flawless are debated upon
By the votaries over there with great fascination.

The mother having pointed out that the Lord's incarnate forms belonged to the irretrievable past, like the rivers, once in spate, having gone dry, the Nayaki would be satisfied if she could at least get hold of the Tulasi garland from the Lord, in His trancendental abode.

(to be continued)



# துணுக்குத் தோரணம்

**1. சென்னையில் உள்ள கோவில் நிலத்திற்குத் தனியார் பெயரில் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது. அறநிலையத் துறை அலுவலகத்துக்கு அருகிலேயே!. (சிட்டிபோஸ்ட், 16.12.2012. தேதியிட்ட இதழில் வெளிவந்துள்ள செய்தி.)**

**பல்வேறு மாவட்டங்களில் இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான, நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள், தனியார் பெயருக்கு, பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இதைக் கண்டறியும்பணி மிகப்பெரியது. இவைகளை, மீண்டும் கோவில் பெயருக்கு பட்டா மாற்றும் நடவடிக்கை மேற்கொள்ள உரிய நடவடிக்கை தேவை என்ற கருத்து, பரவலாக எழுந்திருக்கிறது.**

**தமிழகத்தில், இந்துசமய அறநிலையத்துறைக்குச், சொந்தமாக, பல லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் உள்ளன. இதில், வாடகைக்கு இருந்தவர்கள், குத்தகைக்கு எடுத்தவர்கள், முறைகேடான வகையில், சூழ்நிலையைச் சாதகமாக்கி தங்கள் பெயரில் பட்டா மாற்றம் செய்துள்ளனர். இந்து சமய அறநிலையத்துறை, அந்தந்த மாவட்ட வருவாய்த் துறை மூலம், கோவில் நிலங்களை, கோவில் பெயரில் பட்டா மாற்றம் செய்யும் வேலைகளில் ஈடுபட்டு வந்தது. ஆரம்பத்தில், தனியார் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்ட நிலங்களை குறித்து, ஆராய்ந்து உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால், சமீப காலத்தில், இப்பணிகளில் பெரும் தொய்வு ஏற்பட்டுள்ளது. தற்போது அந்நிலங்களை மீட்டு, மீண்டும் குத்தகைக்கு விட்டால், வருடத்திற்கு பல கோடி ரூபாய் வருமானம் வரும். கோவில் நிலங்களை**

பல தலைமுறைகளாக வைத்திருப்போர், உழவு செய்ய முடியாத அல்லது அந்த ஊரை விட்டு வெளியேறும் போது, வேறு சிலரிடம் ஒப்படைத்தது உண்டு. அது. காலப்போக்கில் தனித்தனி குடும்பங்களுக்கு சொந்த நிலமாக மாறிவிட்டது.

ஆனால் இப்போது கோவில்களுக்கு உள்ள சொத்துக் களைப் பட்டியலிட்டால், அதில் காணாமல் போன சொத்துக் கள் ஏராளம். தற்போது அதன் உரிமையாளர்களாக இருப்ப வர்கள், ஏற்கெனவே தாங்கள் அந்த சொத்தை வாங்கும் போது தந்த பணம், அது தற்போதைய மதிப்பில் என்ன விலை என்று கணக்கிட்டால், அது பல ஆயிரம் கோடி ரூபாய் களாக வரும். இதை கணக்கீடு செய்யும்முறை முழுவீச்சில் நடத்தப்பட அதற்கேற்ற சட்டநெறிமுறைகள் இந்துசமய அறநிலையத்துறையிடம் இருக்கிறதா என்பதை யாரும் விளக்க முன்வரவில்லை. ✱✱✱

**2. கோவில் சொத்துக்களை இந்து மதம் சம்பந்தப்பட்ட வற்றுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். விச்வ ஹிந்து பரிஷத் முதல்-அமைச்சருக்கு விடுத்த கோரிக்கை. (சிட்டி போஸ்ட், 16.12.2012. தேதியிட்ட இதழில் வெளி வந்துள்ள செய்தி.)**

விச்வ ஹிந்து பரிஷத் ஆலோசகர் திரு. எஸ். வேதாந்தம், முதல்-அமைச்சர் ஜெயலலிதாவுக்கு அனுப்பி யுள்ள கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது:

‘‘தமிழ்நாடு விச்வ ஹிந்து பரிஷத் சார்பாக கீழ்க்கண்ட கோரிக்கைகளை தங்களின் பார்வைக்கு வைக்கிறோம். கோவில் சொத்துக்களை இந்துமத சம்மந்தப்பட்ட விஷயங் களுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். அதாவது, வேதபாடசாலை, ஆகம பாடசாலை, தேவார, திருவாசக, திவ்யப்பிரபந்தப் பயிற்சி வகுப்புகள், கோசாலைகள் போன்ற விஷயங்களுக்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும். இந்த மாதிரியான செயல்களைச் செய்ய விரும்பும் இந்த அமைப்பு களுக்கு மட்டுமே கோவில் நிலங்களை குத்தகைக்கோ வாடகைக்கோ விட வேண்டும். பக்தர்கள் கோவில்களுக்கு



நிலங்களைத் தானம் செய்வது கோவிலின் பயனுக்காகவும், இந்து மதத்தின் ஆலயப் பண்பாட்டின் வளர்ச்சிக்காகவும் தானே தவிர சமூகப் பொதுநலன்களுக்காக அல்ல. ஆகவே, நிலங்களை எந்தக்காரணத்துக்காக நன்கொடையாக அளிக் கப்பட்டதோ, அதற்காகத் தான் பயன்படுத்தப்பட வேண்டும். கோவில் நிலங்களை எதற்காக பயன்படுத்துவது போன்ற முடிவுகளை எடுப்பதற்கு முன், அறநிலையத்துறை எங்களையும், பிற இந்து இயக்கங்களையும் அழைத்து ஆலோசனை செய்த பிறகே முடிவு எடுக்க வேண்டும். நல்ல முடிவு எடுக்க நாங்கள் உதவுவதற்கும், ஆதரவு தருவதற்கும் தயாராக இருக்கிறோம். இவ்வாறு திரு. எஸ். வேதாந்தம் கூறியுள்ளார்.

**3. கேலிக்கூத்து அரங்கேற்றம். 23.12.2012. தேதியிட்ட தர்ம சக்தி இதழில் வெளிவந்த கட்டுரை.**

தமிழக முதல்வர் ஜெயலலிதா அவர்கள் கலந்து கொண்ட கிறிஸ்துமஸ்விழாவானது சென்னையில் நடை பெற்றது. இதனை செய்தித்தாள்களில் பார்த்திருப்போம். ஒருவருக்கொருவர் கேக் ஊட்டுவதாகப் படங்களுடன் செய்திகள் வெளிவந்துள்ளன. தமிழக முதல்வர் வழக்கமாக தான் படித்த கான்வென்ட் படிப்பின் பெருமையை இந்த விழாவிலும் உதிர்த்தார்.. இதில் என்ன விசேஷம் என்கிறீர்களா? இருக்கிறது. முதல்வரின் அருகில் நின்றவர் பிஷப் பாதிரியார்(?) சின்னப்பா.

அந்தப் பிஷப் சின்னப்பாவின் மீதுதான் நீதிமன்றம் பிடிவாரண்ட் போட்டிருக்கிறது. ‘பிடி வாரண்ட்’ போட்டுள்ள ஒருவருக்கு முதல்வர் அருகில் நிற்கிறார். அவருக்கு முதல்வர் கேக் ஊட்டுகிறார். அவரும் முதல்வருக்கு கேக் ஊட்டுகிறார். கேக் என்றால் வாய்திருக்கும் பிஷப்.. சர்ச் கணக்கு வழக்குகளைக் கேட்டால் வாய்மூடிக்கொள்கிறார்.. மிரட்டுகி றார்.. சர்ச் நிர்வாகத்தில் உள்ள கிறிஸ்தவர்கள் அவர் மீது கோர்டில் வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

சர்ச் முறைகேட்டிற்கு துணைபோய் பலன் அடைந் தவர் என்ற முறையில் நீதிமன்றம் சின்னப்பாவிற்கு

பிடிவாரண்ட் பிறப்பித்துள்ளது. முதல்வர் அருகில் இருப்பவர் கோர்ட்டால் தேடப்படுபவர் என்பதுகூடவா காவல் துறைக்குத் தெரியாது? அப்படியிருக்கும்போது ஏன் கைது செய்யவில்லை? எப்படி கைது செய்வார்கள்? சரி! கான்வென்ட் பண்புகளை முதல்வர் கற்றுக்கொண்டு இன்றும் அது துணைபுரிவதாக கூறியிருக்கிறார். அந்தப் பண்புகளில் ஒன்றுகூட பிஷப்பிடம் இல்லையா?

அதுதான் கிறிஸ்தவ கல்வி தரும் பண்பின் வெளிப்பாடா? முஸ்லீம், கிறிஸ்தவ மதத் தலைவர்கள் பாரத நாட்டின் நீதிமன்றத்தை அவமதித்தே வந்துள்ளார்கள் என்பது சுதந்திரம் கிடைத்த நாளிலிருந்தே நமக்குத் தெரியும்! ஆனால் நீதிமன்றத்தை அவமதிக்கும் ஒரு பண்பாளருக்கு(?) முதல்வர் கேக் ஊட்டி மகிழ்கிறார்! கொடுமையடா சாமி!

ஓட்டுப்பித்துத் தலைக்கேறிபோனதால் கருணாநிதியும், பா.ம.க. ராமதாசும் இன்னும் பிற கட்சி தலைவர்களும் கிறிஸ்துமஸ் தா(த்)தாவின் கோமாளித் தொப்பியை அணிந்து போட்டோவிற்கு போஸ்கொடுப்பார்கள்! ஜெயலலிதா தானும் சளைத்தவர் இல்லை என்று கோமாளியாகி காட்சி தருகிறார்!

**ஆசியர் குறிப்பு:** ரம்ஜான் நோன்பின்போது குல்லாய் அணிந்து கஞ்சி குடிப்பது. பெண் ஆனால் முட்டாக்குப் போட்டுக் கொண்டு கஞ்சி குடிப்பது. கிறிஸ்துமஸ் வந்தால் விழா எடுப்பது, கேக் ஊட்டுவது போன்ற செயல்களில் தமிழ் நாட்டின் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் ஈடுபடுகிறார்கள். இந்த நாட்டிலேயே புனிதப் பழக்க வழக்கங்களைக் கைக்கொள்ளுபவர்கள் கிறிஸ்தவர்களும், முகம்மதியர்களும் மட்டுமே, என்றெல்லாம் பேசுவார்கள். ஆனால் இந்துமதப் பழக்க வழக்கங்களை இகழ்வது இவர்களுக்குக் கேக் சாப்பிடுவது போலே இனிக்கும். ஓட்டு வங்கியை கணக்கிட்டு அரசியல் களத்தில் இருப்போர் இதுபோன்ற 'திருப்திப்படுத்தும்' செயல்களில் ஈடுபட்டு வருகிறார்கள். இதுதான் இந்திய ஜனநாயகம். இதுதான் செகுலரிசத்தின் உண்மையான வெளிப்பாடு. வாழ்க இந்திய ஜனநாயகம்! ✱✱✱

பக்கம் 16இன் தொடர்ச்சி.

இந்துசமயஅறநிலையத்துறை உயர்அதிகாரிகளி டமோ அல்லது மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சரின் கவனத்திற்கோ அல்லது இந்தத் தொகுதியிலிருந்து வெற்றி பெற்று, முதல்மந்திரியாய் பொறுப்பேற்றிருக்கும் ஜெய லலிதாவின் கவனத்திற்கோ இந்த ஆக்ர மிப்பை அகற்றிடு மாறு ஸ்ரீவைஷ்ணவப் பெருமக்கள், ஜீயர் ஸ்வாமிகள், ஆசார்யபுருஷர்கள் ஆகியோர் ஒன்றுபட்டு இந்தக் கோரிக்கையை முன்வைக்க வேண்டும் ஒரு தீர்வும் காணப்படவேண்டும். தினந்தோறும்

*அடியார்கள்வாழ அரங்கநகர்வாழ **
*சடகோபன்தண்தமிழ்நூல்வாழ * - கடல்சூழ்ந்த*
*மன்னுலகம்வாழ * மணவாளமாமுனியே!*
*இன்னும்ஒருநூற்றாண்டுஇரும்.*

என்று வாழ்த்திடுவது ‘பொருளற்ற கடலோசையாக’ ஆகாமல் பார்த்துக்கொள்வது நம் கடமையல்லவா!

பாஞ்சஜன்யம் ஆசிரியர் முதல்மந்திரியின் தனிப்பிரிவிற்குப் பலமுறை அனுப்பிவைத்த கடிதத்தி லிருந்து சில பகுதிகள் தரப்பட்டுள்ளன.

‘‘ஸ்ரீமணவாளமாமுனிகளின் திருவரசானது ஆள வந்தார் படித்துறைக்குக் கிழக்கே தவராசன் படுகை எனப் படும் தற்போதைய சர்வே எண் T.S.No.2421இன் கீழ் சுமார் 1.82 ஏக்கர் பரப்பளவில் இந்த சர்வே எண்ணுக்கு உட்பட்ட நிலமானது திருவரங்கம் கோயிலுக்குச் சொந்தமானது என்று 1998ஆம் ஆண்டு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. இந்தப் புன்செய் நிலத்தில் தற்போது திரு.முத்தமிழ் செல்வனும், அவருடைய உறவி னருமான திரு.பாலகிருஷ்ணனும் குடியுரிமை பாத்யதை கொண்டாடி வருகின்றனர். தற்போது இந்த நிலத்தை கூட்டு ரிமை பெற்றுள்ளதாக Zonal Deputy Tahsildar, Manikandam 25/11/2011இல் சான்றிதழ் வழங்கியுள்ளார்.

திருச்சி இந்துசமய அறநிலையத்துறை இணை ஆணையர் பதிவேடுகளை-ஆய்வு-செய்து-இருதரப்பு வாதங் களையும் கேட்டபின்னர், டி.எஸ். எண்.2421க்கு உட்பட்ட 1.82 ஏக்கர் திருக்கோயிலுக்குச் சொந்தமானது என்று 29-5-2006ஆம் நாள் தீர்ப்பளித்து உள்ளார். ஆக்ரமிப் பாளர்களை அகற்றி இந்த இடத்தை திருவரங்கம் கோயில் நிர்வாகம் தனது நிர்வாகப் பொறுப்பின் கீழ்க்கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாக இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் அலுவலகக் கடித எண். ந.க.கி. 61378-2006 ஆர். 3/8-12-2006ஆம் தேதியிட்ட கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும் திரு. முத்தமிழ்செல்வன், மற்றும் அவருடைய உறவினர்கள் திருச்சி மாவட்ட கூடுதல் சப்கோர்ட்டில் திருச்சி இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் அளித்த தீர்ப்பை எதிர்த்து முறையீடு செய்துள்ளனர். (O.S. 260/2006) இந்த வழக்கு நிலுவையில் உள்ளது. பல ஆண்டுகளுக்கு இந்த வழக்கு இழுத்தடிக்கப்படும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழை வளர்த்த ஸ்ரீமணவாளமாமுனிகளின் நினைவிடத்தில் தக்கதொரு நினைவாலயம் எழுப்பிட வழி செய்திட வேண்டும். நீதி மன்றத்தில் இந்த வழக்கு பல ஆண்டுகளுக்கு தேங்கிக் கிடக்கும். ஆகவே வேறு உரிய முறைகளைக் கையாண்டு சட்டவிரோதமாக கோயிலுக்குச் சொந்தமான வரலாற்றுப் புகழ்மிக்க இடத்தில் உரிமை கொண்டாடும் முத்தமிழ் செல்வன், மற்றும் அவரது உறவினர்களை வெளியேற்று வதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து அந்த நிலத்தை திருக்கோயிலுக்கு உரியதாகச் செய்ய வேண்டும். இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்கள் உரிய நினைவாலயத்தை எழுப்பிட திவ்யதேச பாரம்பரிய பாதுகாப்புப் பேரவைக்கு அனுமதி அளித்திடுவதாக தம்முடைய கடிதத்தில் (ந.க.கி.61378-2006 ஆர் 3/ 8-12-2006ஆம் தேதியிட்டது) குறிப்பிட்டுள்ளார்''.



மேற்குறிப்பிட்டுள்ள குறிப்புகளை மாண்புமிகு முதலமைச்சரின் தனிப்பிரிவிற்கும், இந்துசமய அறநிலை யத்துறை ஆணையருக்கும், திருவரங்கம் கோயில் இணை ஆணையருக்கும் பலமுறை அனுப்பி வைத்துள்ளேன். எந்தவித பதிலும் பெறப்படவில்லை. செல்வாக்குமிக்க ஸ்ரீவைஷ்ணவ பெருமக்களிடமும், தற்போதைய நிலவரம் குறித்து அவ்வப் போது பேசியும் வருகிறேன். யாரும் இது பற்றி கண்டுகொள்ள வில்லை. இந்நிலையில் தென்கலை ஸ்ரீவைஷ்ணவர்களில் யாரேனும் திருவரசை மீட்பதற்கு உதவி செய்ய முன்வருவார் களா? ஒன்றுமட்டும் நிச்சயம். ஸ்ரீமணவாளமாமுனிகள் பாஞ்சஜன்யம் ஆசிரியருக்கு மட்டுமே உரித்தான ஆசார்யன் அல்லர். சமுதாயத்திற்குச் சொந்தமான அவதார புருஷர் ஆவார்.

***

**துணுக்குத் தோரணம் தொடர்ச்சி.**

**4. இந்துக்களை அரசு என்ன செய்ய நினைக்கிறது? 9.12.2012 தர்மசக்தி இதழில் வெளிவந்த செய்தி.**

பாரதம் சுதந்திரம் அடைந்தபின் இந்துக்களின் நிலை பரிதாபகரத்திற்குரியதாய் ஆகிவிட்டது. ஜாதி ரீதியாக, மாநில வாரியாக, மொழி வாரியாகப் பிரித்து பலவீனப் படுத்த, வியாபாரம் செய்ய வந்த கொள்ளையடிக்க வந்த முகலாயனாகிய முகம்மதியர்களால், வெள்ளைக்காரனாகிய கிறிஸ்தவர்களால் முடியவில்லை. ஆனால் பாரதம் சுதந்திர நாடானபின் அரசாள வந்த முகம்மதியனின், வெள்ளைக் காரனின் பிரதிநிதியாக நினைத்துக் கொண்ட அரசியல்வாதி கள் பிரித்தாளும் சூழ்ச்சியில் அவர்களையெல்லாம் விஞ்சி விட்டார்கள். இந்துக்களை இரண்டாந்தர... இல்லை நாலாந் தரக் குடிமக்களாக நடத்துகிறார்கள். கோயில்கள், இந்து அறக்கட்டளைச் சொத்துகள் எல்லாம் அரசியல்வாதிகள், அரசின் பிடியில் சிக்கி சின்னாபின்னமாகி வருகின்றன... குளங்கள், ஏரிகள் பினாமிகளின் சொத்துகளாகிக் காணாமல் போய்விட்டன.

சென்னையில் பல தெருக்கள், குளங்கள் பெயர்களில் இருக்கின்றன. குளங்களைத்தான் காணவில்லை... வருமானம் இல்லாத கோயில்களை அறநிலையத்துறையோ, அரசோ ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. கேட்பாரில்லாத பல்லாயிரக் கணக்கான கோயில்கள் பாழடைந்த மண்டபங்களாயும், ஆக்கிரமிக்கப்பட்டும், தொலைந்து போய்க் கொண்டிருக் கின்றன. இந்நிலையில் சட்டசபையில் தமிழக முதல்வர் ஜெயலலிதா அறநிலையத்துறை சட்டத்திருத்தம் 32/ 2012இன் படி இந்து குருமார்களின் ஜீவசமாதிகளை அரசு எடுத்துக் கொள்வதாகத் தெரிவித்துள்ளார்.

முகம்மதியர்களின் சமாதிகளான தர்காக்களில் கை வைக்குமா அரசு? கிறிஸ்தவக் கல்லறைகளில் கைவைக் குமா? இப்படிக் கேட்டுக்கேட்டு அலுத்துவிட்டோம். இந்துக்களை மட்டும் வளைச்சு வளைச்சு மிதிக்கிறார்கள். 'இவர்களை எவ்வளவு அடிச்சாலும் தாங்கர நல்லவங்க' என்று வடிவேல் ஜோக் போல் நாம் வேதனையிலும் சிரிக்கலாம்.. நமக்கு உணர்ச்சியில்லை, வெட்கமில்லை, ரோஷமில்லை.. ஜீவசமாதிகளை அரசு எடுத்து என்ன செய்யப்போகிறது? வருமானமில்லாத சமாதியை வைத்துக் கொண்டு, அதனைச் சுற்றியுள்ள கட்டடத்தை வணிகவளாக மாக்கும், அரசின் மற்ற துறைகளுக்கு மாற்றிக்கொடுக்கும். கொஞ்சநாளில் சமாதிகள் காணாமல் போகும்.

இப்போதும் நாம் அமைதியாக இருந்தால் குருமார் களின் சாபத்திற்குத்தான் ஆளாக நேரிடும்! ஒவ்வொரு இந்துவும் போராட முன்வருவோம். உரிமையை மீட்போம்.

***

**5. பலகோடி மதிப்புள்ள கோயில் நிலம் ஆக்கிரமிப்பில் இருந்து மீட்கப்படுமா? ஒரு சதுரஅடி நிலத்திற்கு வாடகை 66பைசாக்கள் தான்! தினமணி 5.12.2012 நாளிதழில் வெளி வந்த செய்தி.**

ஈரோடு மாவட்டம் பெருந்துறை, ஸ்ரீசெல்லாண்டி அம்மன் கோயிலுக்கு சொந்தமான நிலத்தில் 30க்கும்



மேற்பட்ட கடைகள் மற்றும் தனியார் பள்ளி, பெட்ரோல் பங்க்குகள் என சுமார் 50 வாடகைதாரர்கள் உள்ளனர். இவர்களில் பலர் நீண்ட காலமாக வாடகை செலுத்தாமல் உள்ளதாகக் கூறப்படுகிறது. இதே பகுதியில் பேரூராட் சிக்குச் சொந்தமான கடைகள் ஒரு சதுர அடி ரூ. 115வரை வாடகைக்கு ஏலம் கேட்கப்பட்டுள்ளன. ஆனால் கோயில் நிலத்தை அனுபவித்து வருபவர்கள், ஒரு சதுர அடிக்கு 66 பைசா மட்டுமே வாடகை செலுத்தி வருவதாகக் கூறப் படுகிறது. இதைக்கூட பல ஆண்டுகளாக பலர் செலுத்தவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அறநிலையத்துறைக்குச் செலுத்த வேண்டிய வாடகை பாக்கி மட்டும் ரூ. 4 கோடிக்கு மேல் இருக்கும் எனவும் கூறப்படுகிறது. இது குறித்து ஸ்ரீசெல் லாண்டியம்மன் கோயில் நற்பணி மன்றத் தலைவர் எம். செல்லமுத்து கூறயது:

கடந்த 40 ஆண்டுகளுக்கு முன் காலி மனையிடங் களாக இருந்த 10.87 ஏக்கர் நிலத்தை பலர் தொழில் செய்வதற்காக கோயில் நிர்வாகத்திடம் இருந்து வாடகைக்குப் பெற்றனர். தொடர்ந்து முறையாக வாடகை செலுத்தி வந்த வர்கள் பிறகு தவணை தவறியும், அதன் பிறகு வாடகை செலுத்தாமலும் இருந்தனர். இவர்கள் மீது துறை அதிகாரிகள் முறையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

பல ஆண்டுகளாக பெரும்பாலான வாடகைதாரர்கள் வாடகை செலுத்தாமல் உள்ளனர். தற்போதைய வாடகை பாக்கி மட்டும் ரூ. 4 கோடிக்கும் மேல் உள்ளது. சிலர் குறைந்த வாடகையை அறநிலையத்துறைக்கு செலுத்திவிட்டு மாதம் ரூ. 15ஆயிரம் முதல் ரூ. 40 ஆயிரம் வரை கடைகளை உள்வாடகைக்கு விட்டுள்ளனர். சில வாடகைதாரர்கள் கோயில் பெயரில் இல்லாமல், தங்களது பெயரில் சொத்துவரி செலுத்தியுள்ளனர்.

இதனால் பலகோடி ரூபாய் மதிப்புள்ள கோயில் சொத்து பறிபோகும் நிலையில் உள்ளது. இந்த விவகாரத்தில்

அரசு நேரடியாகத் தலையிட்டு, கோயிலுக்குச் சொந்தமான சொத்துக்களை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

இது குறித்து கோயில் செயல் அலுவலர் (பொ) இரா. சுகுமார் கூறியது:

கோயில் சொத்தை ஆக்கிரமித்திருப்பவர்கள், வாடகை செலுத்தாதவர்கள் குறித்த பட்டியலும், வாடகை பாக்கி குறித்த முழு விபரங்களும் சேகரிக்கப்பட்டு வருகிறது. முழுவிபரமும் கிடைத்தவுடன் ஆக்கிரமிப்புப் பகுதிகளை மீட்க பாரபட்சமின்றி சட்டப்படியான நடவடிக்கைகளை அறநிலையத்துறை எடுக்கும் என்றார்.

பெருந்துறையில் பல ஆண்டுகளாக தனியார் ஆக்கிர மிப்பில் இருந்த அரசுக்குச் சொந்தமான 1.25 ஏக்கர் நிலத்தை, கடந்த மாதம் வருவாய்த்துறை அமைச்சர் தோப்பு என்.டி. வெங்கடாசலம் மீட்டு அரசிடம் ஒப்படைத்துள்ளார். இதே போல் அறநிலையத்துறைக்குச் சொந்தமான ரூ. 300 கோடி மதிப்புள்ள இந்தச் சொத்தையும் முதல்வரின் கவனத் திற்கு எடுத்துச்சென்று, அமைச்சர் மீட்டுத்தர வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். ***

**6. அருள்மிகு சுப்பிரமண்யஸ்வாமி திருக்கோயில் திருச்செந்தூர் தணிக்கை அறிக்கை (பசலி 1416 - 1418)**

யானைக்கு யானைக்கால் நோய் வந்தால் எப்படி யிருக்கும், அதைப்போலத்தான் இந்தத் தணிக்கை அறிக்கை அமைந்துள்ளது. 50கோடி பணப்புழக்கமுள்ள ஒரு நிறுவனத்தில் 25கோடிக்கு ஊழல் நடந்தால் எப்படி யிருக்குமோ, அப்படித் தான் இந்தத் தணிக்கை அறிக்கை பல திடுக்கிடும், திகைக்க வைக்கும், கண்ணீர் சிந்த வைக்கும், உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளது. அவற்றில் சில வற்றை இனிக் கருத்தில் கொள்வோம். திரு. முருகன் என்ற தணிக்கை அதிகாரி யாருக்கும் அஞ்சாமல் இந்த அத்து மீறல்களை வெளிப்படுத்தியுள்ளார். திருச்செந்தூர் முருகனே தணிக்கை அதிகாரியாக வந்து நாளும் நடக்கும் அத்து மீறல்களை பொருத்துக் கொள்ள முடியாமல் இந்தத் தணிக்கை



அறிக்கையை தயார் செய்துள்ளான் என்றே நாம் கொள்ள வேண்டும். ஒரு பானை சோற்றுக்கு ஒருசோறு பதம்போல், இந்துசமய அறநிலையத் துறையின் பகற்கொள்ளைக்கு ஆதாரம் வேண்டுமானால் திருச்செந்தூர் திருக்கோயில் தணிக்கை அறிக்கை ஒன்றே போதும். (தணிக்கை என்பது தறிகெட்டு ஓடும் குதிரைக்கு அணிவிக்கப்படும் கடிவாள மாகும். ஆனால் தணிக்கை அறிக்கைகள் குப்பைத் தொட்டியில்தான் அடைக்கலம் கொள்கின்றன. நாட்டின் உயர் தணிக்கை அதிகாரியான இஅஎயையே பந்தாடும் வல்லமைமிக்கவர்கள் நம் அரசியல்வாதிகள் ஆகவே திருச்செந்தூர் கோயில் தணிக்கை அறிக்கைக்கு என்னகதி நேர்ந்ததோ அதை அந்த முருகன் தான் அறிவான் இது போன்ற பல தணிக்கை அறிக்கைகளை ஒன்று திரட்டி பொதுப்பணம் கொள்ளைபோவதைத் தடுக்க வேண்டும். *அந்தப் புனிதப்பணி விரைவில் தொடங்கப்படும். 2013 பிப்ரவரி மாதஇதழில் திருவரங்கம் அரங்கநாதர் கோயில் தணிக்கை அறிக்கையில் கண்டுள்ளகுறிப்புகள் வெளி யிடப்படஉள்ளது).*

வரிசை எண் 1. தணிக்கை அறிக்கை பத்தி எண் 2. கோசாலைகள் 5389 கால்நடைகளைப் பெற்று மோசடி செய்தது - மோசடி வழக்கு தொடரப்பட்டு இழப்பினை ஈடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படாமை - அறங்காவலர் குழு உறுப்பினர்கள் கால்நடைகளைப் பெற்று பலனடைந்தது கடுமையான முறைகேடு.

வரிசை எண் 2. தணிக்கை அறிக்கை பத்தி எண் 3. குத்தகை விதிமுறைகளை மீறி பத்து மடங்கு கட்டணம் வசூலித்தும் ஆலய இலவசக் கழிப்பிடத்தையே அத்துமீறி ஆககிரமித்து கட்டணம் வசூல் செய்தும் வரும் குத்தகைதாரரால் ஆலயத்திற்கு பேரிழப்பு ரூ. 18,37,224/- குத்தகையினை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்து இழப்பும் ஈடு செய்யப்பட வேண்டும்.

இத்திருக்கோயிலின் மத்திய பண்டகசாலையின் பின்புறம் ஆண் பெண் இருபாலாருக்கும் தனித்தனியே கட்டப்பட்டுள்ள தொட்டிகளில் பக்தர்கள் குளிப்பதற்கு கட்டணம் (நபர் 1-க்கு ரூ1/- வீதம்) வசூல் செய்யும் உரிமம் 06.10.09 முதல் 30.06.10 வரையுள்ள காலத்திற்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. திரு ஆர்.வெங்கடேஷ் என்பவர் ரூ. 6,72,072/-க்கு குத்தகைக்கு எடுத்துள்ளார்.

ஏல தனி நிபந்தனை ஷரத்து 1-ன் படி பக்தர்கள் குளிக்க நபர் ஒன்றுக்கு ரூ1/- வீதம் கட்டணம் வசூல் செய்யப்பட வேண்டும். தனி நிபந்தனை வ.எண். '3'-ன் படி திருக்கோயிலிருந்து வழங்கப்படும் தண்ணீரின் அளவுக்கு விதிகளின்படி தண்ணீர் கட்டணம் திருக்கோயிலுக்குச் செலுத்தப்பட வேண்டும். வ.எண். '4'- ன்படி கழிவறையாக எதனையும் பயன்படுத்தக் கூடாது வ.எண். '6'-ன்படி கட்டண விபரத்தை பக்தர்களுக்கு தெரியும் வண்ணம் அறிவிப்பு பலகையில் உரிமதாரரின் முகவரியுடன் எழுதி வைக்க வேண்டும்.

பொது நிபந்தனை வ.எண். '16'-ன்படி கட்டண விகிதங்களை பக்தர்களுக்கு நன்கு தெரியும் வண்ணம் உரிமதாரர் பெரிய எழுத்தில் எழுதி வைக்கவும், தவறினால் திருக்கோவில் நிர்வாகத்தால் இதற்கான அறிவிப்புப் பலகை எழுதி வைக்கப்பட்டு அதற்கான செலவுத் தொகை உரிமம் தாரரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டும். நிபந்தனை வ.எண். '26'-ன்படி உரிமதாரர்கள் தனக்கு வழங்கப்பட்ட உரிமம் பொருட்களைத் தவிர கண்டிப்பாக இதர பொருட்களை விற்பனை செய்யக்கூடாது. அப்படி விற்பனை செய்ய பட்டால் அவர்களது உரிமம் ரத்து செய்யப்படும். நிபந்தனை வ.எண். '35'-ன் படி திருக்கோவில் அலுவலக மாதிரிப்படி கட்டணச் சீட்டுகளை அச்சீட்டு கட்டணச் சீட்டுகளில் அலுவலக முத்திரை பெற்றுக் கொள்ள வேண்டும்.

தணிக்கையின்போது இவ்விதிமுறைகள் கடை பிடிக்கப் படுகிறதா என 23.12.09 அன்று காலை 11.30



மணியளவில் தணிக்கையாளர்களால் பார்வையிடப்பட்டது. அப்போது கட்டணம் வசூல் செய்யும் பணியில் திரு.வசந்த் என்பவர் இருந்துள்ளார். அவரிடம் விசாரித்ததில் குளிப்பதற்கு நபர் ஒருவருக்கு ரூ.10/-ம் கழிப்பறைக்கு ரூ.3/-ம் வசூலிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. நிபந்தனைப்படி ரூ.1/- குளிப்பதற்கு வசூலிக்கப்பட வேண்டியதற்கு ரூ.10/- வசூலிப்பது கடுமையான முறைகேடாகும்.

ஆலயத்திற்கு சொந்தமான இலவசக் கழிவறையை அத்துமீறி ஆக்கிரமித்து தகர ஷீட்டில் குறியலறையுடன் இணைத்து அதற்கும் ரூ.3/- வீதம் குத்தகைதாராரால் வசூல் செய்யப்பட்டு வருவது கடுமையான முறைகேடாகும்.

நிபந்தனையின்படி கட்டணம் விபரம் உரிமதாரர் பெயருடன் பெரிய எழுத்துக்களில் அறிவிப்புப் பலகையில் எழுதி வைக்கப்பட வேண்டும். ஆனால் எழுதி வைக்கப் படவில்லை. ''நவீன கட்டண குளியலறை கழிப்பிட வசதி உள்ளது'' என எழுதப்பட்டுள்ளது. குத்தகைதாரரால் அறிவிக்கப்படும் கழிப்பிடம் ஆலயத்திற்குச் சொந்தமான இலவச கழிப்பிடமாகும். கட்டண விபரம் எழுதி வைக்கப் படாத நிலையில் நிர்வாகமே எழுதி வைத்துவிட்டு செலவுத் தொகையினை ஈடு செய்ய வேண்டும். இவ்விதி கடைபிடிக் கப்படாததும் கடுமையான முறைகேடாகும்.

நிபந்தனைப்படி கட்டணம் வசூலிக்கும் உரிமம் பெற்றவர் கட்டணச் சீட்டுகள் அச்சிட்டு ஆலய முத்திரை யிட்டு வழங்க வேண்டும். இவ்விதியும் பின்பற்றப்படாமல் தன்னிச்சையாக வசூல் செய்யப்பட்டு வருவதும் கடுமையான முறைகேடாகும்.

நிபந்தனைப்படி அனுமதிக்கப்பட்ட பொருட்களைத் தவிர இதர பொருட்களை விற்பனை செய்யக் கூடாது. ஆனால் விதிகளை மீறி சோப், பற்பசை, பல்பொடி, ஷாம்பு, குடிநீர் பாக்கெட் போன்ற பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருவதும் கடுமையான விதிமீறலாகும்.

மேலும் குளிக்குமிடத்தில் இரண்டு குழாய் கிணறுகள் அமைத்து குளிக்க தண்ணீர் எடுக்கப்பட்டு வருகிறது. நிபந்தனைகளில் இதற்கு இடமே இல்லை. நிர்வாகத்திற்குத் தெரிந்தே குழாய் கிணறு அமைக்கப்பட்டதா எனத் தெரியவில்லை.

குத்தகைக்கு விட்டவுடன் குத்தகைதாரர் விதிமுறைகள் மீறுகிறாரா என்பதைக் கண்காணித்து இணை ஆணையர் / செயல் அலுவலர் கவனத்திற்குக் கொண்டு வந்து நடவடிக்கை எடுக்கச் செய்ய வேண்டிய பொறுப்பும் கடமையும் ஆலய வருவாய் பிரிவுக்குரியது. இதுகுறித்து தணிக்கை நறுக்கு எண் 4/24.12.2009ல் இணை ஆணையர்/ செயல்அலுவலர் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டது. இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ஆனால் நிபந்தனைகள் மீறி திருக்கோவில் நிர்வாகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வண்ணம் செயல்படும் குத்தகைதாரர் உரிமத்தை ரத்து செய்ய உயரதிகாரிகளின் கவனத்திற்கு வருவாய் பிரிவினர் கொண்டு செல்லாதது ஏன் என்று தெரியவில்லை.

06.10.09 முதல் 30.06.10 வரை நபர் ஒருவருக்கு ரூ.1./- வீதம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் 260 நாட்களுக்கு ரூ. 6,72,072/- ஆகும். கட்டணம் ரூ.10/- என நிர்ணயித்து ஏலமிட்டால் கூட 10 மடங்கு கேட்டு அதிகரிக்கும் என்பது திண்ணம். ஆனால் வசூலிப்பதோ ரூ.10/- (பத்து மடங்கு கேட்பு) என்ற அடிப்படையில் 06.10.09 முதல் 23.12.09 வரையுள்ள காலத்திற்கு கேட்பில் இழப்பு 79 நாட்களுக்குக் கீழ்கண்டவாறு ரூ. 18,37,224/- ஆகும்.

விதிமுறைகளை மீறிய குத்தகைதாரர் உரிமத்தை ரத்து செய்வதோடு இழப்பும் ஈடு செய்யப்பட வேண்டும். ஆலயத்தின் இலவச கழிப்பிடத்தை ஆக்கிரமித்து கட்டணம் வசூல் செய்யும் குத்தகைதாரர் மீது வசூலுக்கு ஏற்ப இழப்பு கணக்கிடப்பட்டு ஈடு செய்யப்படுவதோடு ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு குத்தகையும் ரத்து செய்யப்பட வேண்டும்.



ரத்து செய்யப்படும் வரை தொடர் இழப்பினையும் கணக்கிட்டு ஈடு செய்யபட வேண்டும். விதிமீறல்களையும், முறைகேடுகளையும் கண்டும் காணாது விட்டு இணை ஆணையர்/செயல் அலுவலர் கவனத்திற்கு கொண்டு வரத் தவறிய வருவாய் பிரிவினர் மீது தக்கநடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

வரிசை எண் 3. தணிக்கை அறிக்கை பத்தி எண் 4. சரவண பொய்கையில் குளிக்கக் கட்டணம் வசூலிக்கும் உரிமம் குத்தகைக்கு விட்டது. ஒப்பந்தக்காரரால் வெளிப்படையாக அதிகக் கட்டணம் அதாவது 25 மடங்கு கட்டணம் வசூலிக்கப்பட்டு வருவது. ஆலயத்திற்குப் பேரிழப்பு ரூ.23,76,775/-

வரிசை எண் 4. தணிக்கை அறிக்கை பத்தி எண் 5. நாலு-மூலைக்-கிணறு-கிராமத்தில் கோசலை அமைக்கப் போதிய வசதி இல்லாத இடத்தில் கோசாலை அமைக்க முடிவெடுத்தது - கட்டடம் கட்டுதல் மற்றும் இதரச் செலவுகள் வீண் செலவு ரூ. 34,40,068/-

வரிசை எண் 5. தணிக்கை அறிக்கை பத்தி எண் 6. கட்டணச் சீட்டுகள் பங்குத் தொகை வழங்கியது. அசல் சீட்டுகள் பெறப்படாமல் தொகை பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. சட்டவிதி மற்றும் ஆணையர் உத்தரவுக்குப் புறம்பானது பற்றுச் சீட்டுகள் தாக்கல் செய்யப்படாதது தொகை ஈடு செய்யப்பட வேண்டும். கடுமையான முறைகேடு ரூ. 9,34,626/-

வரிசை எண் 6. தணிக்கை அறிக்கை பத்தி எண் 7. வேலையாகுடில் குத்தகைக்குவிடப்படாமை. விடுதிகள் மூலம் வரவு குறைந்தமை. கட்டணச் சீட்டுகள் விற்பனைத் தொகை குறைந்தமை, படங்கள் டாலர்கள் விற்பனைத் தொகை குறைந்தமை, கிளைக்கோயில்கள் வருமானம் உண்டியல் வசூல் குறைந்தமை, நிகர மதிப்பீடு வருமானம் வருடந்தோறும் 15% உயர்வின்மை பேரிழப்பு - நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

வரிசை எண் 7. தணிக்கை அறிக்கை பத்தி எண் 8. கட்டணச் சீட்டுகள் - விலை உயர்வு செய்யப்பட்டு 12 ஆண்டுகளுக்கு மேலாகியும் உயர்வு செய்யப்படாமல் மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வருவது ஆண்டு ஒன்றுக்கு 26 இலட்சத்திற்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ளது. விலை உயர்வு செய்து இழப்பினைத் தவிர்க்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

வரிசை எண் 8. தணிக்கை பத்தி எண் 9. கட்டணச் சீட்டுகள், பங்குத்தொகை அதிகமாக நிர்ணயம் செய்யப் பட்டது. ஆலயத்திற்கு இழப்பு ரூ. 5,91,087/-

வரிசை எண் 9. தணிக்கை அறிக்கை பத்தி எண் 10. பேருந்து நிலையம் அருகில் 24 அறைகள் கொண்ட நவீன விடுதி கட்டுதல், மதிப்பீடு தவறாகத் தயாரிக்கப்பட்டது, முறையின்றி வேலை இடையில் நிறுத்தப்பட்டது. கடுங்குறைபாடு - இழப்பு.

வரிசை எண் 10. தணிக்கை அறிக்கை பத்தி எண் 11. திருக்கோயில் மகா மண்டபத்திற்கு குளிரூட்டும் பணி ஏர் கண்டிசனர் ஸ்பிலிட் ஏசி அமைத்தல். ஏற்கெனவே அமைக்கப் பட்டிருந்த ஏர்கூலர் உதிரிபாகங்கள் அமைப்பு மற்றும் மோட்டார் கணக்கில் கொண்டுவரப்படாமை, முடி வறிக்கை தயார் செய்யப்படாமை, உரிய அபராதம் வசூலிக் கப்படாமை, காப்பீடு செய்யப்படாமை, ஏர் கூலர்களை வெயில் மற்றும் உப்புக் காற்றிலிருந்து பாது காப்பாக வைக்கப்படாமை, பழுது ஏற்பட்டு ஆலயத்திற்கு பேரிழப்பு ஏற்பட வாய்ப்பு, கடுங்குறைபாடு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். ரூ. 27,47,580/-

வரிசை எண் 11. தணிக்கை அறிக்கை பத்தி எண் 12. கோசாலை கட்டடங்கள் கட்டியது, வேலை முன்னேற்றத் தைக் கண்காணித்து ஒப்பந்தகாலம் முடியும் முன் வேலையை முடிக்கத் தவறிய ஒப்பந்தக்காரர் மீது நடவடிக்கை எடுக்காமல் விட்டது, வேலை இடை நிறுத்தம் செய்யப்பட்ட பின் ஒப்பந்தக்காரருக்கு வேலையை முடிக்கக் கோரி



நோட்டீஸ் அனுப்பி வருவது ஒப்பந்தம் காலாவதியான பின் ஒப்பந்தக்காரரை இழப்புக்குப் பொறுப்பாக்க இயலாது. சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பு மற்றும் முறைகேடுகள் ரூ. 12,61,543/-

வரிசை எண் 12. தணிக்கை அறிக்கை பத்தி எண் 13. நாலுமூலைக் கிணறு கோசாலை இடம் கால்நடைகளைப் பராமரிக்கக் கட்டடம் கட்ட ஒப்பந்தம் செய்யப் பட்டது கட்டம் உரிய காலத்தில் கட்டிக்கொடுக்கப்படாமை, இதனால் கூடுதலாக ஒழுகாப் புரை கொட்டகை அமைத்து ஆலய நிதி விரயம் செய்தது. கடுமையான முறைகேடு இழப்பு ரூ. 3,40,559/- ஈடு செய்யப்பட வேண்டும்.

வரிசை எண் 13. தணிக்கை அறிக்கை பத்தி எண் 14. கருணை இல்லம் கட்டடம் கட்டியது, முடிவறிக்கை தயார் செய்து ஆணையரின் அங்கீகாரம் பெறப்படாமை, மற்றும் கோப்புகள் தாக்கல் செய்யப்படாமை, நடவடிக்கை எடுத்தல் வேண்டும் ரூ.9,27,342/-

வரிசை எண் 14. தணிக்கை அறிக்கை பத்தி எண் 15. தட்டடி பழுதுபார்த்தல் - முறையாக வேலை செய்யப் படாமை பழுது பார்த்த பின் மீண்டும் ஒழுக்கு ஏற்பட்டது. முறையற்ற காலதாமதம் மதிப்பீட்டில் குறிப்பிட்ட வேலை செய்யாமல் விட்டது, முடிவறிக்கை ஒப்புதல் பெறப்படாத நிலையில் முழுத்தொகையும் பட்டுவாடா செய்தது நடவடிக்கை எடுத்தல் வேண்டும். ரூ. 5,99,103/-

வரிசை எண் 15. தணிக்கை அறிக்கை பத்தி எண் 16. கண்காணிப்பு கேமரா பொருத்தியது (Closed circuit Televesion System) இயங்காத நிலையில் தொகை பட்டுவாடா செய்தது, கண்காணிப்பின்மை இழப்பு ஈடு செய்யப்பட வேண்டும். ரூ.50,436/-

வரிசை எண் 16. தணிக்கை அறிக்கை பத்தி எண் 17. செந்திலாண்டவன் விடுதி முதல் தளம் மற்றும் குளிய லறைகள் பழுதுபார்த்ததில் தரங்குறைந்த வேலை செய்ததால் கழிவறைகள் பழுது ஏற்பட்டு வாடகைக்கு

விடப்படாமை, தரங்குறைந்த வேலை செய்த ஒப்பந்தக் காரரிடம் பழுதினை சரி செய்யக் கோராமல் புதிதாக வேலை செய்து தொகை பட்டுவாடா செய்தது இழப்பு ஈடு செய்யப்பட வேண்டும். ரூ. 32,500/-

வரிசை எண் 17. தணிக்கை அறிக்கை பத்தி எண் 18. சோளநாற்றுகள் பயிர் செய்ய நாலுமூலைக் கிணறு கோசாலையின் உட்புறம் உள்ள முட்செடிகள் அகற்றுதல், இயந்திரச் சக்தியைப் பயன்படுத்தி வேலை செய்ய அதிக தொகைக்கு விலைப்புள்ளி பெற்றது பொறுப்பானவர் மீது நிர்வாக நடவடிக்கை எடுப்பதுடன் இழப்பும் ஈடு செய்யப்பட வேண்டும். ரூ. 36,000-

வரிசை எண் 18. தணிக்கை அறிக்கை பத்தி எண் 19. உண்டியல் திறப்பில் கிடைக்கப்பெற்ற சேதமடைந்த நோட்டுக்கள் அயல்நாட்டு நோட்டுகள் பணமாக்கப்பட வில்லை. இழப்பு ரூ. 1,29,621/-

வரிசை எண் 19. தணிக்கை அறிக்கை பத்தி எண் 20. முதலீடுகள் - முதிர்ச்சியடைந்த முதலீடுகளுக்குரிய வட்டித் தொகையினை வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை. கடுங்குறைபாடு பொறுப்பானவர்களிடமிருந்து இழப்பு ஈடு செய்யப்பட வேண்டும். ரூ. 15,614/-

வரிசை எண் 20. தணிக்கை அறிக்கை பத்தி எண் 21. சந்தனக்கட்டை கொள்முதல் - வருமான வரிக்கான விதிவிலக்கு (படிவம் - 26சி) தாக்கல் செய்யப்படாததால் வருமான வரி செலுத்த வேண்டியநிலை ஏற்பட்டதும் வருமானவரி விதிவிலக்கு சான்று உடன் பெற்று தாக்கல் செய்து ரூ. 1,41,536/- ம் திரும்பப் பெறப்பட வேண்டும்.

வரிசை எண் 21. தணிக்கை அறிக்கை பத்தி எண் 22. முன்பணம் கொரியன் புல் வளர்க்கும் வகைக்கு திரு. S. சந்தானகிருஷ்ணன் ஓவர்சீயருக்கு வழங்கப்பட்டது. பராமரிப்பு செய்யப்படவில்லை. செடிகள் இருந்தே சுவடே இல்லை. கடுங்குறைபாடு ரூ. 35,063/- ம் வசூலிக்கப்பட வேண்டும்.



வரிசை எண் 22. தணிக்கை அறிக்கை பத்தி எண் 23. நுழைவு வாயில் கார், வேன் முதலானவற்றைச் சுங்கக் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் உரிமைதாரர் இருமடங்கதிமாக போலி இரசீது மூலம் தொகை வசூல் செய்தது ஆதாரத்துடன் புகார் அளித்தும் ஏல நிபந்தனைப்படி உரிமத்தை ரத்து செய்யாமல் குத்தகைக் காலம் முடியும் வரை உரிமதாரருக்கு சாதகமாக கோப்பினை நகர்த்தி உரிமதாரர் கொள்ளை லாபமடைய வழிவகுத்தது. இழப்பினைச் சம்பந்தப்பட்டவர்களுக்கு பொறுப்பாக்கி ரூ.3,51,000/- ஈடு செய்யப்படுவதோடு தக்க நிர்வாக நடவடிக்கையும் எடுத்தல் வேண்டும்.

வரிசை எண் 23. தணிக்கை அறிக்கை பத்தி எண் 24. பிரசாதம் விற்பனை செய்யும் உரிமம் குத்தகை ஆலயத்திற்கு வழங்க வேண்டிய பிரசாதத்திற்கு உரிய தொகை வசூல் செய்யப்படாமல் ஐந்து வருடங்களாக நிரந்தரமாக குறைவான தொகை நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருவது நிபந்தனைகளுக்கு முரணானது கடுங்குறைபாடு இழப்பு ஈடு செய்யப்பட வேண்டும். ரூ. 2,99,278/-

வரிசை எண் 24. தணிக்கை அறிக்கை பத்தி எண் 25. திருக்கோயில் திருவிழா நிகழ்ச்சிகள் நேரடி ஒளிப்பரப்பு செய்தது உரிய கட்டணம் வசூல் செய்யப்படாமை உள்ளூர் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு ஒளிப்பரப்பக் கட்டணம் நிர்ணயம் செய்யப்படவில்லை. இழப்பு ஈடு செய்யப்பட வேண்டும். ரூ. 1,50,000/-

வரிசை எண் 25. தணிக்கை அறிக்கை பத்தி எண் 26. ரூபாய். 1.25 இலட்சம் மதிப்புள்ள தளவாடச் சாமான்கள் திருடப்பட்டுள்ளது. இழப்பினை ஈடு செய்ய விரைவு வடவடிக்கை எடுக்கப்படாமை உண்டியல் களவு காவல்துறை நடவடிக்கையின்மை இழப்பு.

வரிசை எண் 26. தணிக்கை அறிக்கை பத்தி எண் 27. இராஜகோபுரம் இடிதாங்கி காணமல் போனது. 42 அடி நீள

வேல் லைட் டிரான்ஸ்பார்மர்கள் நான்கு காணாமல் போனது. எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. காவல்துறையில் புகார் கூட செய்யாமல் மறைக்கப்பட்டது. பொறுப்பானவர்கள் மீதுத்தக்க நிர்வாக நடவடிக்கை எடுப்பதுடன் இழப்பும் ஈடு செய்யப்பட வேண்டும். கடுமையான முறைகேடு.

வரிசை எண் 27. தணிக்கை அறிக்கை பத்தி எண் 28. குரங்கன்தட்டு பம்ப் ஹவுஸில் மின்னிணைப்புக்கு மிக் கணக்கீட்டாளரின் தவறான கணக்கீட்டில் தண்டக கட்டணம் வசூலிக்கப்பட்டது இழப்பு. இழப்பை ஈடுசெய்ய தொடர் நடிவடிக்கை எடுக்காமல் விட்டது. விரைவில் இழப்பினை ஈடு செய்ய நடவடிக்கை எடுப்பதுடன் கண்காணிக்கத் தவறியவர்கள் மீதுத் தக்க நிர்வாக நடவடிக்கையும் எடுத்தல் வேண்டும். ரூ.1,21,796/-

வரிசை எண் 28. தணிக்கை அறிக்கை பத்தி எண் 29. நாலுமூலை கிணறு கோசாலை மாடுகளுக்கு வைக்கோல் கட்டுதல் அதிக செலவு எழுதியது பிரிவு எழுத்தரின் முறையற்ற செயல்பாட்டால் ஆலயத்திற்கு இழப்பு ஏற்பட்டது. ரூ. 1,00,400/- இழப்பு ஈடு செய்யப்படுவதுடன் நிர்வாக நடவடிக்கையும் எடுத்தல் வேண்டும்.

வரிசை எண் 29. தணிக்கை அறிக்கை பத்தி எண் 30. மாட்டுத் தீவனம் கோசாலை 1 இருங்கு சோளம், மானாவரி புஞ்சையில் விதைத்து சாகுபடி செய்து அறுவடை செய்தது - கோசாலைக்கு வழங்கப்பட்டதாக இருப்பில் குறைவு செய்யப்பட்டது. கோசாலையில் பெறபடவில்லை இழப்பு ரூ.40,900/-

வரிசை எண் 30. தணிக்கை அறிக்கை பத்தி எண் 31. வைக்கோல் கட்டு சப்ளை குறைந்த எடையில் சப்ளை செய்யப்பட்ட கட்டுகளுக்கு விலை குறைந்து கொடுக்காமல் டெண்டர் விலை கொடுத்தது. இழப்பு ஈடு செய்யப்பட வேண்டும். ரூ. 30,546/-

(தொடரும்)